பக்கங்கள்: பதினாறு

Registered as a New

# உதயன்

விலை ரூபா 15.00

சுடர் 24 வள்ளுவர் ஆண்டு 2040 பங்குனி 25 செவ்வாய்க்கிழமை (07.04.2009) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்:132

# படையினர் பாதுகாப்பு வலயம் மீது உடனடியாகத் தாக்குதல் நடத்தமாட்டார்

## அவசரப்படப் போவதில்லை என்கிறார் கோத்தபாய



கொழும்பு, ஏப்ரல் 07

வன்னியில் படை நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள இராணுவத்தினர் புதுக்குடியிருப்பை தமது முழுமையான கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்துள்ள போதிலும் பாதுகாப்பு வலயத்திற்குள் உடனடியாகத் தாக்குதல்களை நடத்த மாட்டார்கள். அது விடயத்தில் தாம் அவசரப் படப் போவதில்லை என்று அரச தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக பி.பி.ஸிக்கு கருத்து வெளியிட்டுள்ள பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ, முதலில் அங்கிருந்து மக்களை வெளியேற்றிய பின்னரே அடுத்த நடவடிக்கை தொடரும். இது விடயத்தில் நாம் அவசரப் படப் போவதில்லை - என்று கூறினார்.

பாதுகாப்பு வலயத்திற்குள் உடனடியாகச் செல்லும் நோக்கம் எதுவும் இல்லை என பி.பி.ஸிக்கு தெரிவித்துள்ள பாதுகாப்புச் செயலாளர் ''பொது மக்களை பாதுகாப்பாக அங்கிருந்து வெளியேற்றுவதே எமது நோக்கம். இதன் காரணமாக நிலைமையை உன்னிப்பாக அவதானித்த வண்ணமுள்ளோம்'' என்று குறிப்பிட்டார்.

இப்போதைய நிலைமை குறித்து பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ பி.பி.ஸிக்கு கூறியதாவது:

விடுதலைப்புலிகள் வசம் எஞ்சியுள்ள ஒரேயொரு இடமான பாதுகாப்பு வலயமாக அறிவிக்கப்பட்டுள்ள பகுதியை நோக்கிய தாக்குதல்களை நாம் அவசரப்படுத்தப் போவதில்லை.

தற்போது அரசாங்கத்தின் செயற்பாடுகள், அங்கிருந்து மக்களை பாதுகாப்பாக வெளியேற்றுவதற்கு முன்னுரிமை வழங்குவதாகவே இருக்கும்.

பாதுகாப்பு வலயத்தில் இருந்து தப்பி வருவதற்காக அந்த மக்கள் ஏற்கனவே தயாராக (16 ஆம் பக்கம் பார்க்க)

## ஆயுதக்களஞ்சியம் அழிக்கப்பட்டதாக படையினர் தகவல்

கொழும்பு, ஏப்ரல் 07

விடுதலைப் புலிகளின் ஆயுத களஞ்சியசாலை ஒன்றை படையினர் நேற்று முற்றாக தாக்கி அழித்ததுடன் 9 சடலங்களையும் கைப்பற்றியதாக படைத் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

(16 ஆம் பக்கம் பார்க்க)

க.பொ.த. உயர்தர மாணவர்களுக்கென உதயன் தனியாக வழங்கும் 6 பக்கங்கள் கொண்ட இலவச கல்விச் சுடர் இணைப்பிதழ் நாளை வெளிவரும்.

## இறுதி இராணுவ நடவடிக்கைக்கு தயாராகி வருவதாகக் கூறுகிறார் பிரிகேடியர் நாணயக்கார



கொழும்பு, ஏப். 07

பாதுகாப்பு வலயத்திற்குள் பொது மக்களுடன் சிக்கியுள்ள விடுதலைப் புலிகளுக்கு எதிரான இறுதி இராணுவ நடவடிக்கைக்கு இராணுவத்தினர் தயாராகி வருகின்றனர் என இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் உதய நாணயக்கார தெரிவித்துள்ளார்.

கடந்த நான்கு நாள்களாக இடம்பெற்ற மோதல்களில் பெருமளவு விடுதலைப் புலிகளை அழித்த பின்னர் படையினர் தொடர்ந்து முன்னேறுகின்றனர் என இராணுவ அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். படையினர் பொது மக்களை விடுவிப்பதற்கான இறுதி நடவடிக்கைகளை மேற்கொள்வதால் விடுதலைப் புலிகளின் நாட்கள் எண்ணப்படுகின்றன என்று பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

ஞாயிற்றுக்கிழமை படையினரின் முழுமையான கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரப்பட்ட புதுக்குடியிருப்பில், பல விடுதலை புலிகளின் உடல்களை படையினர் மீட்டனர் என்றும் இராணு வப் பேச்சாளர் உதய நாணயக்கார குறிப்பிட்டுள்ளார்.

இராணுவம் பொது மக்களுக்கு என அறிவித்த 20 சதுர கிலோமீற்றர் பகுதிக்குள் விடுதலைப் புலிகள் முடக்கப்பட்டுள்ளனர் எனவும் (16 ஆம் பக்கம் பார்க்க)

## பிரபா இப்போது பதுங்கு குழிக்குள் அல்லது பாதுகாப்பு வலயத்திற்குள்!

★அமெரிக்கத் தூதுவருக்கு இராணுவத் தளபதி தகவல்★

கொழும்பு, ஏப்.7

புதுக்குடியிருப்பு சண்டைகளில் தனது முக்கிய தளபதிகளை இழந்த போதிலும் விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் முல்லைத்தீவிலேயே ஒளிந்திருக்கலாம். அனேகமாகப் பாதுகாப்பு வலயப் பகுதியில் அல்லது பதுங்கு குழிக்குள் (பங்கருக்குள்) ஒளித்திருக்கலாம்.

இவ்வாறு கூறியிருக்கிறார் இராணுவத் தளபதி லெப்.ஜெனரல் சரத் பொன்சேகா.

கொழும்பில் உள்ள அமெரிக்கத் தூதர் றொபேட் ஓ.பிளேக் நேற்றுத் தம்மைச் சந்தித்த போது இதனை அவரிடம் பொன்சேகா தெரிவித்தார் என படைத்தரப்பின் அறிக் கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கொழும்பில் உள்ள இராணுவத் தலைமையகத்துக்கு நேற்று திங்கட்கிழமை காலை சென்ற அமெரிக்கத் தூதுவர், இராணுவத் தளபதியுடன் வன்னிப் போர் நிலைமைகள் தொடர்பாக விரிவான முறையில் பேச்சுக்களை நடத்தினார் என்று இராணுவ வட்டாரங்கள் (16 ஆம் பக்கம் பார்க்க)

## வடக்கு-கிழக்கில் இராணுவ ஆட்சிக்கு அரசு திட்டம் அதற்காக கருணாவின் தலைமையில் ஆயுதப் படை!

### பிள்ளையானின் ஆயுதக்களைவும் நாடகமே என்கிறார் ஹக்கீம்

கொழும்பு, ஏப். 07

அமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் (கருணா) தலைமையில் வடக்கு - கிழக்கில் அரசாங்கம் தனியான இராணுவப் பிரிவொன்றை அமைத்துள்ளது என்றும் அதனூடாக அங்கு இராணுவ ஆட்சியொன்றைக் கொண்டு செல்லத்திட்டமிட்டுள்ளது என்றும் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் கூறினார்.

கொழும்பில் நேற்று மனோ கணேசன் எம்.பியும் தாமும் இணைந்து நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பிலேயே ஹக்கீம் இவ்வாறு கூறினார்.

அங்கு ஹக்கீம் மேலும் கூறியவை வருமாறு:-

அரசு இப்போது யுத்த வெற்றிகளை அடிப்படையாக வைத்துத்தான் நினைத்த அனைத்தையும் செய்கின்றது. அவ்வாறான ஒன்றுதான் இந்த மாகாணசபைத் தேர்தல்களும்.

மக்களின் ஆணையை புறம்மொதுக்கி வைத்து விட்டு அரசு ஒருவகையான இராணுவ ஆட்சியை நடத்திக் கொண்டு வருகிறது.

அண்மையில் கிழக்கு மாகாண முதலமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தனின் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி அவர்களின் (16 ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கையில் இனப்படுகொலையை நிறுத்தக் கோரி தமிழ்த்தாய் ஒருவர் கைக்குழந்தையுடன் மறியல் போர்

### நெதர்லாந்து நாடாளுமன்றம் முன்பாக

ஆம்ஸ்ரடாம், ஏப். 7

நெதர்லாந்தில், டென்காக்கில் அமைந்துள்ள நாடாளுமன்றம் முன்பாக தமிழ்த் தாய் ஒருவர் கைக்குழந்தையுடன் மறியல் போராட்டம் நடத்தி வருகின்றார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

வன்னியில் முற்றுகைக்குள் வாழும் மூன்று லட்சத்திற்கும் அதிகமான தமிழ்மக்கள் இனப்படுகொலையை எதிர்நோக்கும் ஆபத்தில் உள்ளனர். இவர்களை உடனடியாகக் காப்பாற்றுமாறு கோரியே இந்த தமிழ்த் தாய் நேற்று திங்கட்கிழமை (16 ஆம் பக்கம் பார்க்க)

## பாதுகாப்பு வலயத்தில் ஐ.சி.ஆர்.சி. தனது பணிகளைத் தொடர்கிறது

கொழும்பு, ஏப்.7

முல்லைத்தீவில் புதுமாத்தளன் பகுதியில் அமைந்துள்ள மக்கள் பாதுகாப்பு வலயப் பிரதேசத்தில் செஞ்சிலுவைச் சர்வதேசகுழு( ஐ.சி.ஆர்.சி) தனது மனிதாபிமானப் பணிகளைத் தொடர்ந்து மேற்கொண்டு வருகிறது.

அந்த அமைப்பின் பேச்சாளர் செய்தி ஏஜென்ஸி ஒன்றுக்கு (16 ஆம் பக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெரிய புராணம் காட்டும் வாழ்வியல் கருத்தரங்கு

மருதனார்மடம், ஏப்.7

அகில இலங்கை இந்துமாமன்றம் நடத்துழ் நிறைமதி நாள் கருத்தரங்கும் கருத்தாடலும் வரிசையில் 3ஆவது நிகழ்வு நாளை மறுதினம் வியாழக்கிழமை காலை 9.30 மணிக்கு இடம்பெற உள்ளது.

அகில இலங்கை இந்துமாமன்ற உப தலைவர் பேராசிரியர் அ.சண்முகதாஸ் தலைமையில் 'பெரியபுராணம் காட்டும் வாழ்வியல்' என்னும் கருப்பொருளில் அமைந்த இக்கருத்தரங்கு இடம்பெறும்.

இந்த நிகழ்விலே திருநீலகண்ட நாயனார் புராணத்தின் கட்டமைப்பு என்னும் தலைப்பில் யாழ்.பல்கலைக்கழக சைவ சித்தாந்த முதுகலைமாணிக் கற்கை மாணவன் கு.ரஜீவன் உரையாற்றுவார்.

அதனைத் தொடர்ந்து இந்துநாகரிகத் துறை முதுநிலை விரிவுரையாளர் திருமதி நாச்சியார் செல்வநாயகம் 'திருநீலகண்டரும் மெய்யுணர்வும்' என்னும் தலைப்பில் உரையாற்றவுள்ளார்.

கோவில் வீதி, நல்லூரில் உள்ள அகில இலங்கை இந்துமாமன்ற மண்டபத்தில் இடம்பெறவுள்ள இந்த நிகழ்வில் கருத்தாடல் இணைப்பாளர்களாக சைவ வித்தியாவிருத்திச் சங்க நிதிச் செயலாளர் கவிஞர் சோ.பத்மநாதன், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக தமிழ்த்துறை விரிவுரையாளர் செல்வி செல்வஅம்பிகை நடராஜா, கோப்பாய் றோ.க.த.க. பாடசாலை அதிபர் ச.லலீசன், ஸ்கந்தவரோதயக் கல்லூரி ஆசிரியர் ம.பா. மகாலிங்கசிவம் ஆகியோர் பங்குபற்ற உள்ளனர்.*

(1-55)

## மரண அறிவித்தல்கள்

### அருணாசலம் கனகம்மா



அச்செழுவைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட அருணாசலம் கனகம்மா நேற்று(06.04.2009) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்கான கந்தையா - தெய்வானை தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற அருணாசலத்தின் (செட்டியார்) அன்பு மனைவியும் அருட்சோதி, அருள்மணி (ஆசிரியர், வவுனியா), அருள்தேவி, சரஸ்வதி, தெய்வேந்திரராசா (U.K), அருள்யோகம் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தாயும் காலஞ்சென்றவர்களான நாகராசா, இராமச்சந்திரன், கந்தசாமி மற்றும் சிவராஜகுமார் (வவுனியா), ஜெயராணி(U.K), ஜெயக்குமார்(ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(07.04.2009) செவ்வாய்க்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக அச்செழு இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நரசிங்க வைரவர் கோயிலடி,
அச்செழு, நீர்வேலி.

தகவல்:
குடும்பத்தினர்.

### திருமதி பீதாம்பரம் சிவக்கொழுந்து

"லக்ஸ்சுமி வாசா" அல்வாய் வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பீதாம்பரம் சிவக்கொழுந்து 05.04.2009 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் - பார்வதிப்பிள்ளை தம்பதிகளின் கனிஷ்ட புத்திரியும் காலஞ்சென்றவர்களான செல்லப்பா - தங்கம்மா (மட்டுவில் தெற்கு) தம்பதிகளின் மருமகளும் காலஞ்சென்ற பீதாம்பரத்தின் மனைவியும் காலஞ்சென்றவர்களான தங்கம்மா, இரா சம்மா, அருணாசலம், வேலாயுதம் ஆகியோரின் சகோதரியும் கணேசலிங்கம், பத்மநாதன் ஆகியோரின் தாயாரும் காந்தரூபியின் மாமியாரும் திருமதி தர்ஷனி சஞ்சிப்ராஜ், நிலோஷனி, லக்ஷனி ஆகியோரின் பேர்த்தியும் ராகவி, ஸாதனா ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (06.04.2009) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கணேசலிங்கம் தொ.பே: 0112713457
பத்மானந்தன் தொ.பே: 0774441295

தகவல்:
குடும்பத்தினர்.

### திருமதி மகேஸ்வரி ஆறுமுகம்

வாரிவளவு, காரைநகரைப் பிறப்பிடமாகவும் அச்செழுவை வதிவிடமாகவும் கொண்ட திருமதி மகேஸ்வரி ஆறுமுகம் நேற்று(06.04.2009) திங்கட்கிழமை இரவு காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கதிர்காமு ஆறுமுகத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை - வள்ளியம்மை தம்பதியரின் மகளும் நாகேஸ்வரி, காலஞ்சென்ற கணேசமூர்த்தி மற்றும் குமரேசமூர்த்தி, ஆனந்தமூர்த்தி, சத்தியமூர்த்தி, புவனேஸ்வரி, ஞானமூர்த்தி ஆகியோரின் பாசமிகு தாயும் உமாபதிசிவம், சற்குணநாயகி, ஜெயகௌரி, மீனலோஜனா, தயாளினி, சீவரட்ணம், ராதிகா ஆகியோரின் மாமியும் ஸ்ரீவாணி, கஜமுகன், சுதர்சன், தவேஸ்வரன், மோகனகிருஷ்ணா, நிஜானி, ஹரிஜெயன், ஹனிமன், தாரணி, ஜெனந்தினி, கயூரன், தரணியா, நிலாஜினி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(07.04.2009)செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணியளவில் அவரது அச்செழு இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் அச்செழு இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சீவரட்ணம்(ராசன்),
தவிப்பனை வாசிகசாலையடி,
மாசிவன் சந்தி, இராஜ வீதி,
அச்செழு, நீர்வேலி.

தகவல்:
பிள்ளைகள்.

## வண்ணைச் சிவன் கோயிலில் பஞ்சரதபவனி இன்று

யாழ்ப்பாணம், ஏப்.7

வண்ணை ஸ்ரீவைத்தீஸ்வர சுவாமி தேவஸ்தானத்தில் நடைபெற்றுவரும் பெருந்திருவிழாவில் இன்று தேர்த்திருவிழா நடைபெறுகிறது.

காலை 7.30மணிக்கு வசந்தமண்டபப் பூசை இடம்பெற்று 9மணிக்கு பஞ்சமூர்த்திகள் தேர்களில் எழுந்தருளி அடியவர்களுக்கு அருள் பாலிப்பர். பகல் ஒரு மணிக்கு மூர்த்திகள் தேரில் இருந்து அவரோகணமாகி விசேட அபிஷேகம் இடம் பெறும்.

நாளை காலை 5மணிக்கு நடராஜர் அபிஷேகமும் மு.ப. 11மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறவிருக்கின்றன.

(சிறப்பிதழ்: 8ஆம், 9ஆம் பக்கங்களில்)

## சுன்னாகம் ஐயனார் ஆலயத் தேர்த்திருவிழா

யாழ்ப்பாணம், ஏப்.7

சுன்னாகம் தாழையடி ஐயனார் ஆலயப் பெருந்திருவிழாவில் இன்று தேர்த்திருவிழா நடைபெறுகிறது.

இன்று காலை 6.30 மணிக்கு அபிஷேகப் பூசைகள் ஆரம்பமாகி ஐயனார் முற்பகல் 9மணிக்குத் தேரில் ஏறி அடியவர்களுக்கு அருள் பாலிப்பார்.

நாளை காலை 6.30 மணிக்கு அபிஷேகம் இடம்பெற்று தீர்த்த உற்சவம் முற்பகலில் நடைபெறும்.

(சிறப்பிதழ் 11ஆம் பக்கத்தில்) (-1)

## உதைபந்தாட்ட பயிற்சிக் களம்

யாழ்ப்பாணம், ஏப்.7

ஆசிய உதைபந்தாட்டப் போட்டியில் பங்குபற்றும் தேசிய அணிக்கு யாழ். மாவட்ட பாடசாலை வீரர்களை தெரிவு செய்வதற்கான பயிற்சிக்களம் நாளை மறுதினம் வியாழக்கிழமை காலை 8மணி முதல் சென்.பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

14, 16, 18, வயதுப் பிரிவுகளில் இருந்து தலா நால்வர் தெரிவுசெய்யப்பட்டு கொழும்புக்குப் பயிற்சிக்கு அனுப்பப் படவிருப்பதாகவும் இந்தப் பயிற்சிக் கழத்தில் பங்கு பற்றவிருக்கும் மாணவர்களை குறிப்பிட்ட நேரத்துக்கு சமுகமளிக்கும்படியும் போட்டி ஏற்பாட்டாளர் கேட்டுள்ளார்.


**கலாலயா** பயிற்சியகம்

பெருமாள் கோயிலுக்கு அண்மையில் - யாழ்ப்பாணம்

மகளிருக்கான துரித குறுகிய கால பயிற்சிகள்

**விடுமுறைக் கால 10 நாள் வகுப்புக்கள்**

- கூந்தல் அலங்காரம் : 50வகையான கொண்டைகள் போடுதல். முடி அயன் பண்ணுதல். முடி சுருட்டுதல். முடி நிறமூட்டுதல். V- Cut, U- Cut, Step வடிவங்களில் முடி வெட்டுதல்.
- Facials மற்றும் மணப்பெண்கள் அலங்காரம். 6 முறைகளில் சேலை அணிதல். கைகள், கால்கள், விரல்கள், நகங்கள் அழகு படுத்துதல் (Pedicure, Manicure.)
- பப்றிக் வர்ணம் தீட்டுதல் : கைக்குட்டை, தலையணை உறை, கண்ணாடி மற்றும் சேலையில் (Saree Painting) வர்ணம் தீட்டுதல்.

மேற்படி பயிற்சிகளின் முடிவில் சான்றிதழ்கள் வழங்கப்படும்.

- தையல் தெரிந்தவர்களுக்கான சாறிபிளவுஸ், சுரிதார், Skirts தைத்தல்

தங்கள் வசதிகளுக்கேற்ப கிழமை நாள் அல்லது சனி, ஞாயிறு பயிலமர்வுகளில் கலந்து கொள்ளலாம்.

மேற்படி பயிற்சிகளுக்கு வயதெல்லை கிடையாது

**ஆரம்பம் - 09-04-2009 காலை 9.00 மணி**

மேலும் விபரங்களை பி.ப 2.00 மணி வரை நேரில் அறிந்து கொள்ளலாம்.

நிர்வாகம்.



**படிவம்**

மொறட்டுவப் பல்கலைக்கழக தொழில் நுட்பவியல் டிப்ளோமா (NDT) பாடநெறிக்கு விண்ணப்பிப்பதற்கான படிவம் உண்டு.

Bharathy Pathippakam,
430, K.K.S. Road, Jaffna.


## மரண அறிவித்தல்கள்

### திருமதி சின்னப்பு இராசலட்சுமி

ஆஸ்பத்திரி வீதி, தோப்பு, அச்சுவேலியை வதிவிடமாகக் கொண்ட திருமதி சின்னப்பு இராசலட்சுமி 06.04.2009 திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.04.2009) செவ்வாய்க்கிழமை இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பிற்பகல் 2 மணிக்கு அச்சுவேலி தோப்பு இந்துமயானத்தில் தகனஞ் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஆஸ்பத்திரி வீதி,
தோப்பு, அச்சுவேலி.

தகவல்:
சி.இராசேந்திரம் (மகன்)
குடும்பத்தினர்.

### மாணிக்கர் இராசையா

சுன்னாகம், புன்னாலைக்கட்டுவன் தெற்கினைப் பிறப்பிடமாகவும் தற்போது லண்டனில் வசித்துவந்தவருமாகிய மாணிக்கர் இராசையா 05.04.2009 ஞாயிற்றுக்கிழமை தனது 79ஆவது வயதில் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மாணிக்கம் - சின்னத்தங்கம் தம்பதியினரின் பாசமிகு புதல்வனும் காலஞ்சென்ற சுந்தரவல்லியின் ஆருயிர்க் கணவரும் திருஞ்ஞானசம்பந்தமூர்த்தியின் (U.K) பாசமிகு தந்தையும் சுமதியின் அன்பு மாமனாரும் சுலோஷன், அனுஷன், கிருத்திகா ஆகியோரின் பேரனும் காலஞ்சென்றவரான கந்தசாமிப்பிள்ளை மற்றும் வைத்திலிங்கம் தங்கம்மாவின் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் லண்டனில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

U.K
தொ.பே: 00442085186786

தகவல்:
இ.திருஞ்ஞானசம்பந்தமூர்த்தி
(மகன்)

### திருமதி சிவசுப்பிரமணியம் பாக்கியலட்சுமி (மச்சாள்)



சிறுவிளான், இளவாலையைப் பிறப்பிடமாகவும் கேணியடி ஒழுங்கை, திருநெல்வேலியை வசிப்பிடமகவும் கொண்ட திருமதி சிவசுப்பிரமணியம் பாக்கியலட்சுமி நேற்று (06.04.2009)திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் பொன்னுத்துரை -பகவதி தம்பதியரின் அன்பு மகளும் காரைநகர், கன்னித்தெரு, தங்கோடையைச் சேர்ந்த முத்துக்குமாரசாமி சிவசுப்பிரமணியத்தின் பாசமிகு மனைவியும் கிரிசாந், (O/L மாணவன், யாழ். இந்துக் கல்லூரி), பிரசாந் (தரம் 9 மாணவன், கொக்குவில் இந்துக் கல்லூரி), சுகிர்தா(தரம் 6 மாணவி, யாழ். இந்து மகளிர் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தாயும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(07.04.2009) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக திருநெல்வேலி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கேணியடி ஒழுங்கை,
ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி, 0779379607

தகவல்:
மு.சிவசுப்பிரமணியம்
(தாசன்)

### தம்பு தியாகராசா (B.A.(Hons) India) P G D E D. (Ceylon)

(இளைப்பாறிய ஆசிரியரும், பிரபல புவியியல் எழுத்தாளரும், கொழும்புத்துறை ஸ்ரீ சந்திரசேகரப்பிள்ளையார், ஐயனார், வைரவர் ஆலய தர்மகர்த்தாவும்)



கொழுத்துறையை வதிவிடமாகக்கொண்ட தம்பு தியாகராசா 01.04.2009 சிவபதம் அடைந்து விட்டார்.

அன்னார் இந்திராணியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான தம்பு -பார்வதி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம்- வள்ளியம்மை தம்பதியரின் அன்பு மருமகனும் இராஜரஞ்சனி, இராஜவதனி, இராஜேஸ்வரன், இராஜமனோகரி, இராஜமாலினி, இராஜரூபினி(ஆசிரியை, St.Thomas College, Colombo), இராஜவினோதினி ஆகியோரின் பாசமிகு தந்தையும் செந்தில்வாசன், கண்ணதாசன், பொசன்குமாரி, நவரத்தினம், ஸ்ரீதரன், காலஞ்சென்ற அகிலன் மற்றும் இலங்கநாதன் ஆகியோரின் பாசமிகு மாமனாரும் கந்தையா, கனகசபை, நடராசா, சுப்பிரமணியம், சரசுவதி, சிவபாக்கியம், புவனேஸ்வரி ஆகியோரின் பாசமிகு சகோதரரும் நாகேஸ்வரி, ரஞ்சிதமலர், ஞானேஸ்வரி, விஜயலெட்சுமி, சுப்பிரமணியம், சண்முகராசா, கணபதிப்பிள்ளை(சட்டத்தரணி), சிவலோகநாதன், புவனேந்திரநாதன், ஸ்ரீபத்மநாதன், ஸ்ரீசெந்தில்நாதன், கமலராணி, ஸ்ரீகாந்தநாதன், காலஞ்சென்றவர்களான ஸ்ரீகலாநாதன், ஸ்ரீகமலநாதன், ஸ்ரீவைகுந்தநாதன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் தவமணி, சோமாவதி, சுப்புலட்சுமி, மங்கையர்க்கரசி, கௌரி, கோகிலாம்பிகை, காலஞ்சென்ற அருள்ராணி ஆகியோரின் உடன்பிறாவாச் சகோதரரும் நாகேந்திரனின் சகலனும் ஜெயகௌரி, தர்சன், சிவாகர், அப்சரா, அபிநயா, சுஜீவன், அஜிந்தன், அஸ்வதி, அஸ்வின், திவ்வியன், லித்திகன் ஆகியோரின் பாசமிகு பேரனும் தீபிகா, மாதேஷ் ஆகியோரின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.04.2009) செவ்வாய்க்கிழமை நண்பகல் 12 மணியளவில் கொழும்புத்துறை இலந்தைக்குளம் வீதியில் உள்ள அவரின் இல்லத்தில் இடம்பெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கொழும்புத்துறை துண்டி மயானத்துக்கு எடுத்துச்செல்லப்பட உள்ளது.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர், நண்பர்கள், நலன் விரும்பிகள் யாவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.22, இலந்தைக்குளம் வீதி,
கொழும்புத்துறை.

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# மீளாக் கடனில் மூழ்கும் பரிதாபம்

இன்னும் ஒரு வாரத்தில் சிங்களப் புத்தாண்டு பிறக்கின்றது. சந்தர்ப்பவசமாக இந்துப் புத்தாண்டும் அதேநாளில் வருவது வழமை. தமிழர்களின் புத்தாண்டு தை மாதப் பிறப்பு என்பது இப்போது பிரசித்தமாகி வருகிறது.

எப்படியோ சிங்கள, இந்துப் புத்தாண்டுகள் ஒரே நாளில் வருவதனால் இலங்கையில் சிங்கள, இந்துப் புத்தாண்டு தினம் இரண்டு இன மக்களாலும் நாடளாவிய முறையில் குதூகலமாகக் கொண்டாடப்பட்டது உண்டு. இம்முறை, இந்தப் புத்தாண்டு அவ்வாறு அமைய முடியாத துரதிஷ்டம்.

வன்னியில் ஆயிரக்க கணக்கில் தமிழ் மக்கள் பலியாகிக் கொண்டிருக்கும் வேளையில், நாட்டின் ஏனைய பகுதியில் வாழும் தமிழ் மக்கள் தமது இரத்தத்தின் இரத்தங்களின் இழப்புகளால் மனம் உறைந்து போயுள்ள நிலையில், புத்தாண்டுக் கொண்டாட்டம் என்பது எண்ணியும் பார்க்க முடியாத ஒன்று. அது நிற்க.

சிங்கள, இந்து வருடப் பிறப்பு நாள் வருவதற்கு முன்னர் அநேகமாக ஆட்சியில் உள்ள அரசுகள் பொருள்களின் விலைகளைக் குறைத்து தமக்குள்ள மக்கள் ஆதரவைப் பெருக்கிக்கொள்ள முனைவது தான் வழமை.

சில பல வருடங்களுக்கு முன்னர், குறிப்பிட்ட புதுவருட நாள் வருவதற்கு ஒரு மாத காலத்திற்கு முன்னரே, அர்சுகள் உணவுப் பொருள்கள், ஆடை அணிகலன்கள் மற்றும் பாவனைப் பொருள்களில் விலைக்குறைக்கப்படுவது உட்பட ஏனைய சலுகைகள் குறித்து பிரசாரப்படுத்தியது உண்டு. ஊடகங்களும் அதற்கு முக்கியத்துவம் கொடுப்பது நடைமுறை.

ஆனால் இப்போது..... இந்த வருடத்தில்.....

சீனி, பருப்பு, உருளைக்கிழங்கு உட்பட பல அத்தியாவசிய உணவுப் பொருள்களின் விலைகள் புத்தாண்டுக்கு முன்னர் அதிகரிக்கப்படும் என்று சமிஞ்ஞை காட்டி இருக்கிறார்கள் அரசாங்க அதிகாரிகள். அரசாட்சியின் போக்கும் அதனால் விளைந்த பொருளாதாரத் தாழ்வு நிலையும் இப்படி ஒரு எதிர்மறையான விளைவைத் தந்திருக்கிறது என்பதில் ஐயமில்லை.

இந்த நாட்டின் பொருளாதாரம் உயர்நிலையை நோக்கிச் செல்வதாக, சென்றதாகக் கடந்த பல தசாப்தங்களாக பேச்சுக்குக் கூட ஒரு சொல்லை உச்சரிக்கும் நிலை இருந்ததில்லை. மத்தியவங்கி அதிகாரிகள் தமது 'தொழில்நுட்ப'ச் சொற்களில் நாட்டின் பொருளாதாரம் சிறப்பு நிலை நோக்கிச் செல்வதாகக்கூறி தமது எஜமானர்களுக்கு ஆதரவு நிலைக்கருத்துக் கூறிவந்த போதிலும், உண்மை நிலைமை அதற்கு மாறுபட்டதாகவே இருப்பதுண்டு.

ஆயினும், சிங்களப் புதுவருடத்துக்கு முன்னதாக அத்தியாவசிய உணவுப் பொருள்களின் விலைகள் எகிறப்போகின்றன என்பது புதிய 'சகாப்த சாதனை' என்று கருதப்பட வேண்டியது. இருபது பொருள்களின் 'செஸ்' வரியை அதிகரிக்குமாறு நிதி அமைச்சராக விளங்கும் ஜனாதிபதி உத்தரவு பிறப்பித்துள்ளார். அதன் பெறுபேறே பருப்பு,சீனி, வெங்காயம் போன்ற உணவுப் பொருள்களின் விலைகளை உயர்த்த வேண்டிய தேவையை உருவாக்கி இருப்பதாக நுகர்வோர் விவகார அமைச்சின் வட்டாரங்கள் தெரிவித்திருக்கின்றன.

நாட்டின் விவசாயிகளின் நன்மை மற்றும் உள்நாட்டு உற்பத்திகளைப் பாதுகாத்தல் கருதியும் புதிய வரி நடைமுறைக்குக் கொண்டு வரப்படுவதாகவும் மற்றொரு காரணம் சொல்லப்படுகிறது.

ஆனால் மேற்கூறிய காரணங்களைவிட, புதிய 'செஸ்' வரி விதிப்புக்கும், அதனால் ஏற்பட்டுள்ள பாதக நிலைக்கும் அரசாங்கம் பெரும் பணச்செலவில் நடத்தும் போர் பிரதான காரணி என்பதனை மறைத்துவிட முடியாது.

மொத்தத்தில் நாட்டின் பொருளாதார நிலை அதள பாதாளத்துக்குச் சென்று கொண்டிருப்பதற்கு, மக்களின் வரிப்பணத்தில் பெரும்பகுதியை போர் விழுங்குகின்றது என்பதே உண்மை.

இதனை அரசு தரப்பில் ஒப்புக்கொள்ளும் வகையில் கல்வியமைச்சர் சுசில் பிரேம ஜயந்த கருத்துத் தெரிவித்துள்ளார்.

அமெரிக்கா மற்றும் செல்வந்த நாடுகளிலேயே, வல்லரசுகளிலேயே பொருளாதார நெருக்கடி ஏற்பட்டுள்ளது என்றால், எமது 'சுண்டங்காய்' நாட்டில் அதனைத் தவிர்ப்பது சாத்தியமில்லை என்று கல்வியமைச்சர் கூறியிருப்பது ஏற்கத்தக்கதே.

எனினும் அதற்கும் மேலாக -

நாட்டில் போர் நடைபெறுகிறது. பயங்கரவாதத்துக்கு எதிரான போரை அரசு நடத்தி வருகிறது. அதனால் பாதுகாப்புத் துறைக்கு நிதி தேவைப்படுகிறது. அதன் காரணமாகவே நாடு பொருளாதார நெருக்கடிக்கு முகம் கொடுக்க வேண்டியுள்ளது என்று அவர் உண்மை விளம்பியுள்ளார்.

போரின் விளைவு நிகழ்காலத்தில மட்டுமல்ல, எதிர்காலத்திலும் - இன்னும் எத்தனையோ ஆண்டுகளுக்கு - இந்த நாட்டை பொருளாதாரப் படுகுழிக்குள்ளேயே வைத்திருக்கும்.

அதிலிருந்து மீட்சி பெறுவதென்பது இன்னும் 50 வருடங்களானாலும் இயலாத காரியம்!

# வவுனியா இடைத்தங்கல் முகாம்களின் நிலைமை இடம்பெயர்ந்தோருக்குப் பொருத்தமானதாக இல்லை

## ஐ.நா.பிரதிநிதி வோல்டர் ஹெலன் தெரிவிப்பு

கொழும்பு, ஏப். 7

வவுனியாவில் இடம் பெயர்ந்து வந்துள்ள மக்கள் தங்கவைக்கப்பட்டுள்ள இடைத்தங்கல் முகாம்களின் நிலைமை அவர்களுக்குப் பொருத்தமானதாக இல்லை எனத் தெரிவித்திருக்கும் ஐ.நா. செயலாளர் நாயகத்தின் பிரதிநிதியான வோல்டர் ஹெலன், இந்த விடயங்கள் குறித்து அரசாங்கத்துடன் தாம் பேச்சுக்களை நடத்திக் கொண்டிருப்பதாகவும், இது தொடர்பாக புதிய பரிந்துரைகளை செய்யவிருப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

நான்கு நாள் பயணத்தினை மேற்கொண்டு கொழும்பு வந்துள்ள ஐ.நா. செயலாளர் நாயகத்தின் பிரதிநிதி வவுனியா சென்று அங்கு இடம்பெயர்ந்த மக்களுக்காக அமைக்கப்பட்டுள்ள முகாம்களைப் பார்வையிட்ட பின்னர் ஊடகவியலாளர்கள் மத்தியில் உரையாற்றிய போதே இதனைத் தெரிவித்தார்.

மீள்குடியேற்ற அமைச்சர் ரிசாட் பதியுதீன், தேசிய சமாதான செயலகப் பணிப்பாளர் ரஜீவ விஜயசிங்க, வவுனியா அரசாங்க அதிபர் ஆகியோர் சகிதம் நேற்று ஞாயிற்றுக்கிழமை இடம் பெயர்ந்தவர்களுக்காக அமைக்கப்பட்டுள்ள முகாம்களுக்கு நேரில் பயணம் செய்த ஐ.நா. செயலாளர் நாயகத்தின் பரதிநிதி அங்குள்ள நிலைமைகளை நேரில் பார்வையிட்டார்.

இடம்பெயர்ந்தவர்களின் குறைகளையும் கேட்டறிந்து கொண்டார். அதன் பின்னர் ஊடகவியலாளர்களிடம் கருத்துக்களைப் பரிமாறிக்கொண்டார்.

இடம்பெயர்ந்து பெரும் எண்ணிக்கையில் வரும் மக்களுடைய உடனடி நிவாரணத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக சிறிலங்கா அரசாங்கத்துக்கு ஐ.நா. சபை உதவிகளைச் செய்து வருவதாகத் தெரிவித்த அவர், வன்னிப் பகுதியில் தொடரும் மோதல்களுக்கு மத்தியில் பெரும் எண்ணிக்கையான மக்கள் சிக்கிக் கொண்டுள்ளனர். பலர் காயமடைந்திருக்கின்றனர். எனவும் இது தமக்கு கவலையளிப்பதாகவும் தெரிவித்தார்.

அவர் மேலும் முக்கியமாகக் குறிப்பிட்டதாவது:

இதனைவிட பெரும் எண்ணிக்கையான மக்கள் இடம்பெயர்ந்து வந்து கொண்டிருக்கின்றனர். அவர்களைப் பொறுப்பேற்று நிலைமைகளை மதிப்பீடு செய்து அவர்களுக்குப் பாதுகாப்பு வழங்க வேண்டியிருக்கின்றது. அவர்களைப் பராமரிக்க வேண்டியிருக்கின்றது.

இது விடயத்தில் நிறைய சவால்கள் இருக்கின்றன. எனவே இந்தப் பகுதிகளுக்கு நேரில் பயணம் செய்து நிலைமைகளை மதிப்பிடுவதுடன் உரிய பரிந்துரைகளைச் செய்வதுமே எனது பிரதான நோக்கமாக இருக்கின்றது. இது தொடர்பாக அரசாங்கத்துடனும் பேசியுள்ளேன்.

வவுனியாவில் இடம்பெயர்ந்த மக்களுக்கான இடைத்தங்கல் முகாம்களுக்கும் பயணம் செய்தேன். இங்கு அரசாங்கம் பல முயற்சிகளை மேற்கொண்டிருக்கின்றது.

அதேவேளையில் இங்குள்ள நிலைமையானது இடம்பெயர்ந்த மக்களுக்குப் பொருத்தமானதாக இல்லை. இந்த விடயங்கள் குறித்தும் அரசாங்கத்துடன் நாம் பேச்சுக்களை நடத்திக் கொண்டிருக்கின்றோம். இது விடயத்தில் உரிய தீர்மானங்களும் பரிந்துரைகளும் மேற்கொள்ளப்படும்.

இந்த மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக ஐ.நா. சுறுசுறுப்பாக முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றது எனவும் ஐ.நா. செயலாளர் நாயகத்தின் பரதிநிதி தெரிவித்தார்.

# யுத்தத்துக்கு அதிகளவான நிதி ஒதுக்கப்படுவதனால் நாடு பொருளாதார நெருக்கடிக்கு முகம் கொடுக்கிறது

## கல்வி அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த தெரிவிப்பு

கொழும்பு, ஏப்.7

பயங்கரவாதிகளுக்கு எதிராக அரசு யுத்தத்தை முன்னெடுக்கின்றது. இதனால் பாதுகாப்புக்கு அதிகளவு நிதி ஒதுக்கப்படுகின்றது. யுத்தத்தின் காரணமாக எமது நாடு பொருளாதார நெருக்கடிக்கு முகம்கொடுக்க வேண்டியுள்ளது.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பொதுச்செயலாளரும் கல்வி அமைச்சருமான சுசில் பிரேம ஜயந்த இவ்வாறு தெரிவித்துள்ளார்.

கொழும்பு கலாபவனத்தில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு உரையாற்றுகையில் மேலும் தெரிவித்தவை வருமாறு;

நாட்டின் பொருளாதாரம் சரிந்துள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க கூட்டங்களில் பேசி வருகிறார்,

ஆனால், இன்று அமெரிக்கா போன்ற வல்லரசு நாடுகளிலேயே பொருளாதார நெருக்கடி ஏற்பட்டுள்ளதை ரணில் விக்கிரமசிங்க அறியாமல் பேசுகிறார்.

நாட்டில் இன்று யுத்தம் நடைபெறுகிறது பயங்கவாதிகளுக்கு எதிரான யுத்தத்தை அரசு நடத்தி வருகிறது. இதனால் பாதுகாப்புக்கு அதிகளவு நிதி தேவைப்படுகிறது.

விடுதலைப் புலிகளைமுற்றாகஒழிக்க முடியாதென்றும் அவர்கள் பலம் வாய்ந்த இயக்கம் என்றும் பல உலக நாடுகள் எமக்குக் கூறின. ஆனால், ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் நேரடி வழிகாட்டலின் கீழ் எமது படையினர் தமது உயிரையும் பாராமல் விடுதலைப் புலிகளை அழித்து வருகின்றனர்.

இன்று விடுதலைப் புலிகள் சரணடையும் நிலையில் உள்ளனர். ஆனால், வெளிநாடுகளில் வாழும் புலிகளின் ஆதரவாளர்கள் புலிகளுக்காக பொய்ப் பிரசாரம் செய்கின்றனர்.

சில அரச சார்பற்ற நிறுவனங்களும் ஐ.நா. சபை மூலமாக எமக்கு நெருக்குதல்களை ஏற்படுத்த முயலுகின்றன.

எனினும், எமது ஜனாதிபதி யுத்தத்தை நிறுத்துமாறு எவர் கோரிக்கை விடுத்தும் அதனை நிறுத்தப்போவதில்லை என்று கூறியுள்ளார் என்றார்.

# 'கிளிமஞ்சரோ' மலையில் ஏறி ஈழத்தமிழருக்காகப் போராட்டம்

வன்னி மக்களின் துயரங்களை உலகுக்கு அறியச் செய்வதற்காக ஆபிரிக் காவின் மிக உயர்ந்த மலை மீது ஏறி நின்று கவனயீர்ப்புப் போராட்டத்தினை ஈழத் தமிழர் ஒருவர் தொடங்கியுள்ளார்.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த 33 வயதான கீரன் அரசரட்ணம் என்ற இளைஞரே ஆபிரிக்காவின் மிக உயர்ந்த மலையான கிளிமஞ்சரோவின் மீதேறி இந்தப் போராட்டத்தை தொடங்கினார்.

தனது 13 ஆவது வயதில் லண்டன் சென்று அங்கு பட்டப்படிப்பை மேற்கொண்ட பின்னர் அங்குள்ள வங்கி ஒன்றில் பணிபுரியும் கீரன், வன்னி மக்களின் துயரங்களின் பால் உலகின் கவனத்தை ஈர்ப்பதற்காகவே இந்தப் போராட்டத்தைத் தொடங்கியிருப்பதாக தெரிவித்தார்.

ஆபிரிக்காவில் தன்சானியாவில் உள்ள கிளிமஞ்சரோ மலையின் உயரம் 5 ஆயிரத்து 891 மீற்றர்களாகும். இதன் மீதே இப்போது கீரன் ஏறத் தொடங்கியுள்ளார்.

வன்னி மக்களுக்காக அத்தியாவசியப் பொருள்கள், மற்றும் மருந்துப் பொருள்களுடன் செல்லவிருக்கும் வணங்கா மண் கப்பலுக்கு இதன் மூலம் நிதி சேகரிப்பதற்கு கீரன் திட்டமிட்டடுள்ளார்.

நேற்று முன்தினம் ஞாயிற்றுக் கிழமை இவர் மலை ஏறத் தொடங்கியுள்ளார்.

நாளாந்தம் பத்து மணித்தியாலம் என்று ஐந்து நாள்களுக்கு மலை ஏறி இவர் மலையின் உச்சியை அடைவார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.'(50)

# கடந்த ஆண்டில் மட்டும் 304 சிறுவர்கள் துஷ்பிரயோகத்துக்கு உள்ளாகியுள்ளனர்

யாழ்ப்பாணம், ஏப்.7

யாழ்.மாவட்டத்தில் கடந்த 2008 ஆம் ஆண்டு 304 சிறுவர்கள் துஷ்பிரயோகத்துக்கு உள்ளாகியுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மாவட்ட சிறுவர் நன்னடத்தை திணைக்களத்தால் கடந்த ஆண்டு வெளியிடப்பட்டுள்ள சிறுவர் தொடர்பான புள்ளி விவரங்களிலிருந்து இது தெரியவந்துள்ளது.

பாலியல், உடலியல், உளவியல் ரீதியாக இந்தச் சிறுவர்கள் துஷ்பிரயோகத்துக்குள்ளாக்கப்பட்டுள்ளதாக அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

துஷ்பிரயோகத்துக்குள்ளாக்கப்பட்டுள்ள சிறுவர்களின் எண்ணிக்கை பிரதேச செயலர் பிரிவு ரீதியான விவரம் வருமாறு:

யாழ்ப்பாணம் - 33, நல்லூர் - 30, கோப்பாய் - 28, கரவெட்டி - 05, சண்டிலிப்பாய் - 12, சங்கானை - 20, சாவகச்சேரி - 18, தெல்லிப்பழை - 17, பருத்தித்துறை - 33, உடுவில் - 32, வேலணை - 07, நெடுந்தீவு - 06, காரைநகர் - 18, ஊர்காவற்றுறை - 45. (50-9)

# துர்க்காதேவி ஆயுள்வேத வைத்தியசாலைத் திறப்பு விழா

யாழ்ப்பாணம், ஏப்.7

தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி ஆயுள்வேத வைத்தியசாலை எதிர் வரும் 10 ஆம் திகதி வெள்ளிக் கிழமை காலை 9.30 மணிக்கு தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத்தில் திறந்துவைக்கப்படவுள்ளது.

தேவஸ்தான சபையின் தலைவர் செஞ்சொற்செல்வர் ஆறுதிருமுருகன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் ஆ.கேதீஸ்வரன் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார்.

தெல்லிப்பழை மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர் எஸ்.சிவராணி சிறப்பு விருந்தினராகக் கலந்துகொள்வார்.

யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தில் ஆயுள்வேத வைத்திய இணைப்பாளராக கடமைபுரிந்த டாக்டர் எஸ்.டிசிஜந்தி இவ் வைத்தியசாலையின் பொறுப்பு வைத்திய அதிகாரியாக வடக்கு மாகாண ஆயுள்வேத மருத்துவத் திணைக்களத்தினால் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். (50-51)

## நாளை

| | |
|---|---|
| பங்குனி 26 | 08.04.2009 |
| | புதன்கிழமை |
| திதி: | சதுர்த்தசி |
| | மு.இ. 9.14வரை |
| நட்சத்திரம்: | உத்தரம் |
| | பி.ப. 03.55 வரை |
| | பங்குனி உத்தரம் |
| சுபநேரம்: | 04.37 - 06.07 |
| ராகுகாலம்: | 12.07 - 01.37 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விவாக சுபமுகூர்த்த அழைப்பு

ஸ்வஸ்தி ஸ்ரீ நிகழும் சர்வதாரி வருடம் பங்குனி மாதம் 27 ஆம் நாள் (09.04.2009) வியாழக்கிழமை பூரணைத் திதியும் ஹஸ்த நட்சத்திரமும் சித்த யோகமும் கூடிய காலை 8.30 மணி முதல் 10.30 மணி வரையுள்ள ரிஷப லக்ன சுப முகூர்த்தத்தில்



மாவிட்டபுரம் கந்தசாமி கோவிலைச் சேர்ந்த
பிரம்ம ஸ்ரீ தாணுஐயர்
அரிகரசுப்பிரமணியக்குருக்கள்
குமாரன் சிரஞ்சீவி
**முரளீதரசர்மாவிற்கு**

அராலி வண்ணப்புரம் சிவன் கோவிலைச் சேர்ந்த
பிரம்மஸ்ரீ சிவசுப்பிரமணியக்குருக்கள்
சிவகணேசக்குருக்கள்
குமாரத்தி சௌபாக்கியவதி
**சியாமளரூபியை**

கன்யாதான, மாங்கல்ய தாரண, பாணிக்கிரகணம்செய்துஏற்றுக்கொள்வதாய் பெரியோர்களால் நிச்சயிக்கப்பெற்று ஷெ முகூர்த்தம் நல்லை திருஞான சம்பந்தர் ஆதீன மண்டபத்தில் நடைபெறவிருப்பதால் அம்முகூர்த்த வைபவத்திற்கும்

10.04.2009 வெள்ளிக்கிழமை மணமகன் இல்லத்தில் நடைபெற இருக்கும் வரவேற்பு உபசாரத்திற்கும் உற்றார், உறவினர்கள், நண்பர்கள் குடும்ப சமேதராய் வருகை தந்து ஷெ முகூர்த்தத்தையும் வரவேற்பு உபசார வைபவத்தையும் கூட இருந்து நடாத்தி வைக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

**முக்கிய கவனிப்பு**- இவ்வழைப்பை நேரில் அழைக்கப்பட்ட தனிப் பட்ட அழைப்பாகக் கருத்தில் கொண்டு வருகை தருமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

*தங்கள் நல்வரவை நாடும்*

பிரம்மஸ்ரீ
சி.சிவகணேசக்குருக்கள்
தம்பதியினர்,
75/10, செட்டித் தெரு,
நல்லூர்

பிரம்மஸ்ரீ
தா.மகாதேவக் குருக்கள்
தம்பதியினர்
தர்மசாஸ்தா குருகுலம்,
இணுவில்.

சிவஸ்ரீ
தா.அரிகரசுப்பிரமணியக்குருக்கள்
தம்பதியினர்
பிரதமகுரு, நெட்டிலைப்பாய்
பிள்ளையார் கோவில்.

## ஓய்வூதியர்களுக்கு இன்று கொடுப்பனவு

யாழ்ப்பாணம், ஏப்.7

யாழ். மாவட்ட ஓய்வூதியர்களுக்கான ஏப்ரல் மாத ஓய்வூதியம் இன்று செவ்வாய்க்கிழமை வழங்கப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

அரச திறைசேரியின் சுற்றுநிருபப் பிரகாரம் ஏப்ரல் மாதத்திற்குரிய ஓய்வூதியம் ஏப்ரல் எட்டாம் திகதி வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டிருந்ததாகவும் -

எதிர்வரும் ஒன்பதாம் திகதி முதல் 14ஆம் திகதி வரை விடுமுறை தினங்களாக உள்ளதால் இன்று ஓய்வூதியம் வழங்கப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (1-207)

## மேலும் 15 குடும்பங்கள்வந்து சேர்ந்தன

யாழ்ப்பாணம், ஏப்.7

கைதடி ஆயுள்வேத மாணவர் விடுதி நலன்புரி நிலையத்திற்கு மேலும் 15 குடும்பங்களைச் சேர்ந்த 39 பேர் விடுவிக்கப்பட்ட பகுதியிலிருந்து அழைத்துவரப்பட்டனர்.

கடந்த மூன்றாம் திகதி 3குடும்பங்களைச் சேர்ந்த ஒன்பது பேரும் நான்காம் திகதி 12 குடும்பங்களைச் சேர்ந்த 30 பேரும் அழைத்து வரப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (1-207)

# 5ஆம் ஆண்டு நினைவு நாள்

## தம்பு கந்தசாமி



மண்ணுலகில்: 28-10-1919
விண்ணுலகில்: 03-04-2004
திதி: திரியோதசி (07-04-2009)

ஐயா!
ஐங்கரன் பாதம் சென்று ஐந்தாண்டு சென்றதுவோ
உங்கள் ஆத்மா சந்தியடைய உலவிக்குளம்
சித்திவிநாயகரைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம்சாந்தி! ஓம்சாந்தி! ஓம்சாந்தி!

மே.மு.-சிவன்நந்தபுரி, அப்புவேலி வாக்கு,
த.மு.-வேலணை கிழக்கு.

மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

# கண்ணீர் அஞ்சலி

யாழ். போதனா வைத்தியசாலையில் தாதிய உத்தியோகத்தராகக் கடமைபுரியும் திருமதி இலங்காராணி ஜெயக்குமார் அவர்களின் அன்புத் தந்தையார்.

## செல்லப்பா கார்த்திகேசு

அவர்கள் காலமானதையிட்டு துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

தாதியர் நலன்புரிக் கூட்டுறவுச் சங்கம்.

# சேவை நயப்பு வாழ்த்து



எமது கல்லூரியில்
22வருடங்களாகச் சேவையாற்றிய
சமூகக் கல்வி ஆசிரியர்

## திருமதி
## புஸ்பராணி இராஜலிங்கம்

(B.A. Dip in Edu.)

அவர்கள் 30.03.2009 அன்று ஓய்வு பெற்றார். இவரது தன்னலமற்ற சேவையினை நயந்து பாராட்டுவதோடு எதிர்காலத்தில் சகல நலன்களும் பெற்று நீடுவாழ வாழ்த்துகிறோம்.

சண்டிலிப்பாய்,
இந்துக் கல்லூரி.

ஆசிரியர் நலன்புரிக் கழகம்.


## திருமண சேவை

ஆசிரியர்கள், கலை, விஞ்ஞானப் பட்டதாரிகள், பொறியியலாளர்கள், டாக்டர்கள் உட்பட ஆண்/பெண் இருபாலாரின் ஜாதகங்கள் பலவும் எம்மிடம் உண்டு.

உங்கள் விருப்பத்துக்குரிய மணமக்களைத் தெரிவு செய்ய நேரில் தொடர்பு கொள்ளவும்.

த.சிவானந்தன்,பிரபல சோதிடர்,
5,வைமன் வீதி, நல்லூர்.


## தென்மராட்சி கல்வி அபிவிருத்தி செயலமர்வு இன்று

யாழ்ப்பாணம், ஏப்.7

தென்மராட்சி கல்வி வலயத்தைச் சேர்ந்த வகை II, வகை III ஆகிய பாடசாலைகளின் அதிபர்களுக்கான ஐந்து ஆண்டு அபிவிருத்தித் திட்டம் தொடர்பான செயலமர்வு இன்று செவ்வாய்க் கிழமை காலை 8.30மணிக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நடைபெறுமென வலயக்கல்விப் பணிப்பாளர் கு.பிறேமகாந்தன் அறிவித்துள்ளார். (1-207)

## தென்மராட்சி வலயத்தில் இணைப்புப்பெற்ற ஆசிரியர்களுக்கு

யாழ்ப்பாணம், ஏப்.7

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் தற்காலிக இணைப்புப் பெற்று கடமையாற்றும் ஆசிரியர்கள் இன்று (7/4)ஏப்ரல் மாதத்திற்குரிய சம்பளப் பட்டியலில் கையொப்பமிடுமாறு வலயக் கல்விப்பணிப்பாளர் கு.பிறேமகாந்தன் அறிவித்துள்ளார். (1-207)

## தென்மராட்சியில் விளையாட்டு விழா

தென்மராட்சிப் பிரதேச பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான மெய்வன்மைப் போட்டிகள் நாளை மறுதினம் வியாழக் கிழமையும் மறு நாளும் காலை 8.30 மணிக்கு மட்டுவில் வளர்மதி விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது.(1-207)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னையின் மடியில்: 13 * 08 * 1996



இறைவனின் அடியில்: 19 * 03 * 2008

## செல்வி பிரமிளா சத்தியமூர்த்தி

திதி: திரயோதசி 07★04★2009

அவனியிலே தவழ்ந்தாயே மூத்த முத்தாக
ஆயிரத்துத் தொண்ணூற்று ஆறில்
முழு நிலவாய் உன்னைப் பார்த்தோம்
பிரமிளா எம் செல்வமகளே!
எம்நெஞ்சு பொறுக்கவில்லையே
காலன் இவன் கோலம் செய்த வினையே
இழந்தோமே நாம் உன்னை
இரண்டாயிரத்து எட்டில்!
மறக்க முடியவில்லையே - அக்கா, அக்கா!
என ஏங்கித் தவிக்கிறாள் தங்கையவள்
இனி எப்போது காண்போமே
நாம் புவிதனிலே!

பிரான்ஸ். குடும்பத்தினர்

# கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலையின் ஆசிரியர் க.ஞானராசா அவர்களின் அன்புத் தந்தையார்

## நாகமுத்து கனகலிங்கம்

அவர்களது மறைவையிட்டுத் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

யா/நாவற்குழி மகாவித்தியாலயம்,
கைதடி.

அதிபர், ஆசிரியர்கள்,
கல்விசாரா ஊழியர்கள்.

# கண்ணீர் அஞ்சலி



எமது யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்தின் உறுப்பினரும் ஆங்கில மொழி அலகு விரிவுரையாளருமான அ.இராசகுமாரனின் அன்பு மனைவியார்

## திருமதி இ.சரோஜாதேவி

அவர்களின் திடீர் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம்.

# ஓராண்டு நினைவஞ்சலி

தோற்றம்: 21 ★ 05 ★ 1927



மறைவு: 19 ★ 05 ★ 2008

## அமரர் செல்லர் பூரணம்

திதி: திரயோதசி

ஆண்டு ஒன்று ஆனாலும் ஆறாது
அம்மா உம் பிரிவு எம் உயிருள்ளவரை
உள்ளத்தில் என்றும் நீர் இருப்பீர்.

அன்னாரின் இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்டோருக் கும், அனுதாபச் செய்தி தெரிவித்தோருக்கும், சகல வழிகளிலும் உதவி புரிந்தோருக்கும் எமது நன்றிகளைத் தெரிவிப்பதோடு இன்று 07.04.2009 அன்னாரது ஓராண்டு நினைவையொட்டி எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அழைக்கின்றோம்

த.கந்தசாமி குணமலர்,
பாற்பண்ணை வீதி,
திருநெல்வேலி, 0771606500

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்.மாவட்டத்திலுள்ள இந்து அமைப்புகளால்

# நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள மக்களுக்கு 27 இலட்சம் ரூபா பெறுமதியான பொருள்கள் அன்பளிப்பு

யாழ்பாணம், ஏப்.7

வன்னியில் இருந்து இடம்பெயர்ந்து தென்மராட்சி, கோப்பாய் பிரதேச செயலாளர் பிரிவுகளில் அமைந்துள்ள இடம்பெயர்ந்தோர் நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள மக்களின் உடனடித் தேவைகளுக்காக சுமார் 27 லட்சம் ரூபா பெறுமதியான பொருள்கள் வழங்கப்பட்டுள்ளன.

வன்னியிலிருந்து இடம்பெயர்ந்து நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள மக்களுக்கு உதவும் பொருட்டு இந்து அமைப்புகளின் ஒன்றியம் நடத்திய கலந்துரையாடலின் பின் இந்தப் பொருள்கள் நல்லை ஆதீன முதல்வரிடம் கையளிக்கப்பட்டன.

இதற்காக யாழ்.வர்த்தகர்கள் பணமாக 12 இலட்சத்து 4 ஆயிரத்து 401 ரூபாவும் பொது அமைப்புகள் மற்றும் பொதுமக்கள் 2 லட்சத்து 31 ஆயிரத்து 501 ரூபாவும் அன்பளிப்புச் செய்துள்ளனர். இதுதவிர வர்த்தகர்கள் 9 லட்சத்து 59 ஆயிரத்து 942 ரூபா பெறுமதியான பொருள்களையும் வழங்கியுள்ளார்கள்.

வன்னியில் இருந்து தொடர்ந்தும் பெருமளவான மக்கள் இடம்பெயர்ந்து குடாநாட்டுக்குள் வந்துகொண்டிருப்பதால் அவர்களுக்குத் தேவையான வாழ்வாதார அடிப்படை உதவிகளைச் செய்வதற்கு இந்து அமைப்புகளும் ஆலயங்களும் முன்வர வேண்டும் எனவும் கலந்துரையாடலில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரதேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் தலைமையில் நடைபெற்ற இந்தக் கலந்துரையாடலில் இந்து அமைப்புகளின் பிரதிநிதிகள், ஆலய நிர்வாகிகள் என்போர் கலந்துகொண்டனர்.

(04-80-111)

## போதனா வைத்தியசாலையின் உள்ளக வீதிகள் புனரமைப்பு

யாழ்ப்பாணம், ஏப்.7

யாழ்.போதனா வைத்தியசாலையின் உள்ளக வீதிகள் தார் ஊற்றிப் புனரமைப்புச் செய்யப்படவுள்ளன.

கடந்த சில ஆண்டுகளாக இந்த வீதிகள் புனரமைப்புச் செய்யப்படாமையால் சேதமடைந்து காணப்படுகின்றன.

தற்போது வீதிகளைப் புனரமைப்பு செய்வதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

வீதி புனரமைப்புக்கு முன்னோடியாகக் கற்கள் கொட்டப்படும் பணிகள் அங்கு இடம்பெற்று வருகின்றன. (50-224)

## சஞ்சிகை வெளியீடும் பரிசு நாளும்

யாழ்ப்பாணம், ஏப்.7

உரும்பிராய் இந்துக்கல்லூரி 'வித்தியா' சஞ்சிகை வெளியீடும் ஸ்தாபகர் நினைவுப் பரிசில் நாளும் இன்று செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணிக்கு கல்லூரிப் பிரார்த்தனை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கல்லூரி அதிபர் அ.ஈஸ்வரநாதன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.கல்வித் திணைக்கள பிரதம பொறியியலாளர் கு.சிவபாலன் கலந்துகொள்வார். (04-72)

## வெப்பமான காலநிலை காரணமாக கிணறுகளில் நீர் மட்டம் குறைகிறது

யாழ்ப்பாணம், ஏப்.7

தற்போது நிலவும் கடும் வெப்பமான காலநிலை காரணமாகத் தென்மராட்சிப் பகுதியில் உள்ள அனேகமான நன்னீர்க் கிணறுகளில் நீரின் மட்டம் வெகுவாகக் குறைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கிணறுகளில் நீர்மட்டம் குறைவதால் இடம்பெயர்ந்து நலன்புரி முகாம்களில் தங்கியிருக்கும் மக்களுக்கான குடிதண்ணீர் வழங்கும் சேவையையும் அதிகரிக்க வேண்டியுள்ளதாகத் தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

தற்போது கைதடியில் உள்ள நீர்மட்டம் குறையாத கிணறு ஒன்று துப்பரவு செய்யப்பட்டு அதன் மூலம் நலன்புரி நிலையங்களுக்கு எதுவித பாதிப்பும் இன்றி குடிதண்ணீர் விநியோகம் மேற்கொள்ளப்படுகின்றது என்றார் அந்த அதிகாரி.

தற்போது நிலவும் கடும் வெப்பமும் மழை இன்மையும் கிணறுகளில் நீர்மட்டம் குறைவதற்கு காரணம் என்று தெரிவிக்கப்படுகின்றது.

(50-224)

## சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம், ஏப்.7

இணுவில் மஞ்சத்தடி ஸ்ரீ அருணகிரிநாதர் சிவசுப்பிரமணியர் சுவாமி ஆலய வருடாந்தப் பெருந்திருவிழா இன்று செவ்வாய்க்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 17 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9மணிக்கு தேர்த்திருவிழாவும் மறுநாள் சனிக்கிழமை தீர்த்தத்திருவிழாவும் நடைபெறும். (204)

* * *

யாழ்ப்பாணம், ஏப்.7

அளவெட்டி வடக்கு ஐயனார் ஆலய வருடாந்த மணவாளக்கோல சங்காபிஷேகத் திருவிழா நாளை புதன்கிழமை நடைபெறவுள்ளது.

தொடர்ந்து 12 தினங்கள் அலங்காரத் திருவிழாவும் நடைபெறும். (204)

* * *

யாழ்ப்பாணம், ஏப்.7

இளவாலை ஆனைவிழுந்தான் விக்கின விநாயகர் ஆலய வருடாந்தப் பெருந்திருவிழா கடந்த 29 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.

நாளை புதன்கிழமை காலை 9 மணிக்குத் தேர்த் திருவிழாவும் மறுநாள் வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும். (204)

* * *

யாழ்ப்பாணம், ஏப்.7

மூளாய் முத்துக்குமாரசாமி ஆலய தேர்த்திருவிழா இன்று செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கும் மறுநாள் புதன்கிழமை தீர்த்தத்திருவிழாவும் நடைபெறும். (204)

# பிரச்சினையிலிருந்து தற்காத்துக்கொள்ளும் திறனைப் பெண் பிள்ளைகளுக்கு ஊட்டுவது பெற்றோரின் பொறுப்பு

## மகப்பேற்று வைத்திய நிபுணர் டாக்டர் பவானி

யாழ்ப்பாணம், ஏப்.7

இளவயதுப் பெண்கள் திருமணமாகாமலே கர்ப்பமுறும் சம்பவங்கள் இன்று அதிகரித்து வருகின்றன. பொலிஸாரின் பதிவுகளும் நாளாந்தம் நாம் சந்திக்கும் பெண்களின் பிரச்சினைகளும் இந்நிலமையை எமக்குத் தெளிவாகக் காட்டுகின்றன. இத்தகைய சூழலில் பெண்பிள்ளைகள் தம்மைத்தாமே தற்காத்துக்கொள்ளும் வகையில் கற்பிக்கவேண்டிய கடமை பெற்றோருக்கு உண்டு. பிள்ளைக்கு அறிவூட்டுவதிலே தந்தையும் பெரும் பங்கு வகித்தாலும் இத்தகைய பிரச்சினைகளைத் தெளிவுபடுத்துவதில் தாயின் பணி தான் முக்கியமானது என மகப்பேற்று வைத்திய நிபுணர் டாக்டர் பவானி தெரிவித்தார்.

சுன்னாகம் பொது நூலகத்தில் அண்மையில் நடைபெற்ற சர்வதேச மகளிர் தினம், சர்வதேச நாடகதினம் என்பன தொடர்பான நிகழ்விலே சிறப்பு அதிதியாக கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்நிகழ்வில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு;

பெண்கள்இன்று பல துறைகளிலும் முன்னேறி வந்தாலும் சில தவறுகள் நிகழ்ந்துவிடத்தான் செய்கின்றன. பிள்ளைகளுக்கு அறிவூட்டுபவர்களுள் முதன்மையானவர்களாக ஆசிரியர்கள் இருந்தாலும் சில விடயங்களில் அவர்கள் ஓர் எல்லைக்கு மேற்சென்று அறிவூட்ட முடியாது. ஆசிரியர்கள் பாலியல் அறிவு பிள்ளைகளுக்குச் சொல்லிக் கொடுத்தால் இவற்றையெல்லாம் ஏன் பிள்ளைக்குச் சொல்லுகிறீர்கள் எனப் பெற்றோர் குற்றம்சாட்டுகின்றனர். எனவே பெற்றோரும் ஆசிரியரும் இணைந்து செயற்படுவதன் மூலம் தான் சமூகத்திற்கு ஒவ்வாத பிரச்சினைகளில் பெண்பிள்ளைகள் சிக்கிக்கொள்வதைத் தடுக்கமுடியும் என்றார்.

சுன்னாகம் பிரதேச சபைச் செயலாளர் திருமதி ச.சொக்கலிங்கம் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் மாணவர்கள், ஆர்வலர்கள், பொதுமக்கள் எனப் பலர் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.

(04-55)

## 'உயிர்ப்பின் உவகை' நிகழ்வு

உடுவில் மகளிர் கல்லூரியின் ஏற்பாட்டில் 'உயிர்ப்பின் உ வகை' இயேசுவின் திருப்பாடுகளின் நிகழ்வு இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 4 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

(50-204)

## மரியன்னை பேராலயத்தில் பரிசுத்த வார வழிபாடுகள்

வண்ணை, ஏப்.7

யாழ்.மரியன்னை பேராலய பரிசுத்த வார வழிபாடுகள் யாழ்.ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை தலைமையில் நடைபெறும் எனப் பங்குத் தந்தை அருட்திரு ஆர்.எச்.சகாயநாயகம் அடிகள் தெரிவித்தார்.

நேற்றுத் திங்கட்கிழமை மாலை 4 மணிக்கு தைலம் மந்திரிக்கும் திருப்பலி ஆயர் தலைமையில் நடைபெற்றது.

நாளைமறுதினம் புனித வியாழன் வழிபாடுகள் மாலை 4.30 மணிக்கு ஆரம்பமாகும்.

10 ஆம் திகதி பெரியவெள்ளிக்கிழமை காலை 6.30 மணிக்கு சிலுவைப்பாதை இடம்பெறும். மாலை 4 மணிக்கு மாலை வழிபாடுகள் நடைபெறும்.

11 ஆம் திகதி புனித சனியன்று காலை 6.30 மணிக்கு ஏழுவார்த்தைகள் தியானம் நடைபெறும். இரவு 10.30 மணிக்கு திருவிழிப்பு வழிபாடு இடம்பெறும்.

12 ஆம் திகதி உயிர்ப்பு ஞாயிறு அதிகாலை 5.45 மணிக்கு ஆயர் தலைமையில் முதல் திருப்பலியும் காலை 7.15 மணிக்கு இரண்டாம் திருப்பலியும் நடைபெறும்.

(50-160)

## குடாநாட்டின் பிரதேசச் செய்திகள்

## புகையிலைக் கன்றுகளில் நோய்த் தாக்கம்

யாழ்ப்பாணம், ஏப்.7

அனலைதீவு பிரதேசத்தில் இம்முறை பயிரிடப்பட்ட புகையிலைக் கன்றுகள் நோய்த்தாக்கத்திற்கு உள்ளாகியுள்ளதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

அண்மையில் பெய்த கடும் மழை காரணமாகவே இந்த நோய்த்தாக்கம் ஏற்பட்டதாக விவசாயிகள் கூறுகின்றனர்.

(50-224)

## தேசியப் பாடசாலை பட்டதாரி ஆசிரியர் நியமன நேர்முகப் பரீட்சை

யாழ்ப்பாணம், ஏப்.7

தேசியப் பாடசாலை பட்டதாரி ஆசிரியர் நியமனத்துக்கான நேர்முகப் பரீட்சை யாழ்ப்பாண மேலதிக மாகாணக் கல்விப் பணிமனையில் நாளை புதன்கிழமை காலை 9 மணி முதல் நடைபெறும்.

இந்த நேர்முகப் பரீட்சைக்கான அழைப்புக் கடிதங்கள் பரீட்சைக்கு அழைக்கப்பட்டவர்களின் தனிப்பட்ட முகவரிக்கு தற்போதைய போக்குவரத்துச் சீரின்மையால் அனுப்பிவைக்கப்படவில்லை. எனவே, அழைப்புக் கடிதங்கள் யாழ்ப்பாண மேலதிக மாகாணக்கல்விப் பணிமனையில் வைத்து வழங்கப்படுகின்றன. அவற்றைப் பரீட்சார்த்திகள் பெற்றுக்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

## பருத்தித்துறைப் பிரதேசத்தில் 101 வேலைத் திட்டங்கள்

வடமராட்சி,ஏப்.7

கமநெகும திட்டத்தின் பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவில் 101 அபிவிருத்தி வேலைத் திட்டங்களை மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது.

35 மில்லியன் ரூபா பெறுமதியான இவ்வேலைத்திட்டம் தொடர்பான முன்மொழிவுகள் அனுமதிக்காக சம்பந்தப்பட்ட அமைச்சுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாகப் பருத்தித்துறை பிரதேச செயலர் இ.வரதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

இவ்வேலைத் திட்டத்திற்கு அனுமதி கிடைக்கப் பெற்றபின்னர் இவ்வேலைத் திட்டங்களை ஆரம்பிக்கமுடியும் என அவர் மேலும் தெரிவித்தார். (50-236)




நல்லூர் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட மாதர் அபிவிருத்திச் சங்கங்களின் மகளிர் தினவிழா அண்மையில் நடைபெற்றது. இதன்போது மகளிர் தினத்தையொட்டி நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றிபெற்றவர்களுக்கான பரிசில்கள் வழங்கப்பட்டன. நல்லூர் பிரதேச செயலர் பா.செந்தில்நந்தனன், உதவிப் பிரதேச செயலர் திருமதி சு.தெய்வேந்திரம், கருணாலய முகாமையாளர் கே. ... முதல் மூன்று படங்களிலும் மகளிர் குழுவின் வில்லிசை

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# காரைநகர் சிவன்கோயில் தேர்த்திருவிழாச் சிறப்பு மலர்

## ஈழத்துச் சிதம்பர பஞ்சரத பவனி காண வாரீர்!

ஈழத்துச் சிதம்பர பஞ்சரத பவனியில் தேரேறி வருகிறான்
இந்நாட்டு மக்களின் துயர் தீர்க்க தேரேறி வருகிறான்
ஆலமுண்ட கண்டன் ஐயப்பன் சகிதமாய் தேரேறி வருகிறான்
ஆற்றமை போக்கி ஆறுதல் தரவே தேரேறி வருகிறான்
நாளையெம் தேசத்தில் விடிவுதர தேரேறி வருகிறான்
நலமான வாழ்வுக்கு வழிகாட்ட தேரேறி வருகிறான்
ஏழை பங்காளனாய் எங்கள் சிவன் தேரேறி வருகிறான்
எம் பேத வாழ்வகற்றி வழிகாட்ட தேரேறி வருகிறான்
சௌந்தராம்பிகை சகிதம் கூத்தன் தேரேறி வருகிறான்
சரித்திர கீர்த்திநிறை சிதம்பரத்தில் தேரேறி வருகிறான்
சுந்தர கோலந்தாங்கி திண்ணபுரத்தில் தேரேறி வருகிறான்
துதி செய்யும் அன்பருக்கு வரமீய தேரேறி வருகிறான்
இந்திரலோகம் போன்ற ஈழத்து சிதம்பரத்தில் வருகிறான்
ஈழத் திருப்பதியின் ஈஸ்வரனாக சிவன் தேரேறி வருகிறான்
அஞ்சேலென அபயமளித்து பரிவார மூர்த்திகளுடன் வருகிறான்
அரன் கழல் பணிந்தேத்தும் அன்பருக்கு தேரேறி வருகிறான்
தஞ்சம் புகுந்தவரை அரவணைத்து காக்க தேரேறி வருகிறான்
தரணிக்கு வழிகாட்டி வாழ்விக்க சிதம்பரத்தில் தேரேறி வருகிறான்

- மதுரகவி காரை.எம்.பி.அருளானந்தன்.

## சிதம்பர பதிக் கரசே தேரேறு!

கோவை தந்த வாசகர்க்குக்
குருந்தின் அடியின் குருவாகிச்
சாவை யறுக்கும் பேரின்ப
சாரம் பொழிந்த தணமுகிலே
நாவை அசைத்துன் புகழ்பாட
நயந்து வியந்துன் அடி அடைந்தேன்
தேவை அளித்து வரம் அருளும்
தேவ தேவே தேரேறி அருள்வாய்
மூவா முதலே! மறை நான்கும்
முன்னி வணங்கும் முது தேவே!
ஈசா ஈழத்து சிதம்பர பதிக் கரசே!
செம்பொன் மேனிப் பொன்மானே
நா்வால் உன்றன் புகழ்பாடி
நயனம் பனிப்பக் கைகூப்பி
பாவால் உன்னைத் தொழுதோம்
பணிவோர்க் கருள ஐயா! தேரேறு

- மதுரகலாவித்தியா

மலர் அமைப்பு- சிவஸ்ரீதேசன் பாக்கியவதி.



## ஈழத்து சிதம்பர பஞ்சரத பவனி கண்கொள்ளாக் காட்சி

ஈழத்திலே, யாழ்ப்பாணக் குடாநாட்டிலேயுள்ள காரைநகரிலே சிறந்து விளங்குவது ஈழத்து சிதம்பரம் எனப் போற்றப்படும் சிவன் கோவிலாகும். சைவர்களுக்கு கோயில் என்றால் சிதம்பரமாகும். இக் கோயிலை என்றும் நினைவு படுத்தும் வகையில் ஈழத்திலே இருக்கும் சிவத் தலங்களிலொன்று ஈழத்து சிதம்பரமாகும். இத் திருத்தலம் காரைநகர் ஈசான மூலையில் பரந்தகன்ற பெரு வெளியில் கிழக்கு நோக்கிய வாயிலையுடையதாக விளங்குகிறது. பக்தியும், ஆசாரமும் விளங்க அருள் பாலிக்கும் சிவப்பதியாக இவ்வாலயம் விளங்குகின்றது.

ஆண்டி முனிவரின் சித்தும் அம்பலவி முருகரின் தியாகமும் இணைந்தே இந்த ஆலயம் தோற்றம்பெற்று இன்று பெருவளர்ச்சி கொண்டு விளங்குகின்றது. இங்கே சிவனுடன் வீற்றிருந்து அருள்பாலிக்கும் ஐயனார் ஓர் அற்புத மூர்த்தியாக என்றும் விளங்குகின்றார். ஆண்டி முனிவரால் ஆலயத்தின் தென்கிழக்கு மூலையை தோண்டிய பொழுது தோன்றியவரே ஐயனார். அதனால் ஆண்டிகேணி ஐயனார் என்ற திருநாமம் பெருமானுக்கு ஏற்பட்டது.

ஈழத்து சிதம்பரம் என்ற மகிமைக்கு காரணம் சௌந்தராம்பிகை சமேத நடராஜப் பெருமானும் அவனுக்கு இடம்பெறும் வழிபாடுகளும்தான். காண வீடு பேறளிப்பது சிதம்பரம். இத்தகு பெருமைகளைத் தன்னகத்தே கொண்ட ஈழத்து சிதம்பரத்தில் இன்று (07.04.2009) பஞ்சரத பவனி நடைபெறுகின்றது. பல்லாயிரக் கணக்கான அன்பர்கூடி அவனது தேர் விழாக் காட்சி காணும் இன்பம் பெறுவர். எல்லாம்வல்ல சிவன் எல்லோரையும் மண்ணில் நல்ல வண்ண வாழவைப்பதற்கு வழிகாட்ட வேண்டுமென இத் தேர்விழா நாளில் பிரார்த்திக் கின்றோம்.


குபேரன் களஞ்சியம்
160, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

கஜமுகன் ஹாட்வெயர்
147, 149, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

க.கு.கந்தையாபிள்ளை
பல்பொருள் வாணிபம்
316, மருத்துவமனை வீதி,
யாழ்ப்பாணம்.

வெங்கடேஸ்வரா
79, கஸ்தூரியார் றோட்,
யாழ்ப்பாணம்.

A.P.சிவலோகநாதன்
பல்பொருள் வாணிபம்
இல.332, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

மலர் பதிப்பகம்
இல,08 நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

விநாயகர் நகை மாடம்
135, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

சிவகணேசன் ரெக்ஸ்ரைல்ஸ்
41, பசார் வீதி,
யாழ்ப்பாணம்.

மதுரா மாளிகை
கால்நடைத் தீன் வானிபம்
221, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

T.சங்கரப்பிள்ளை அன் சன்ஸ்
21, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

சிற்றி எலக்ரிக்கல்ஸ்
47, 49, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.




## தவக்காலச் சிந்தனை

### "காட்டிக் கொடுக்கும் மனதில் கருணை மலராது"

உலக வரலாற்றில் 'காலங்கள் பல காட்டிக் கொடுப்புக்களைத் (வெளிப்பாடுகளை) தருகின்றன; காட்டிக் கொடுப்புக்களுக்காக காலங்கள் உருவாகின்றன. என்ற உண்மை மறுப்பதற்கில்லை. 'காட்டிக் கொடுத்தல்' என்னும் பதத்தினை ஒருவன் நோக்கும் விதத்தில்தான் அதன் அர்த்தம் வெளிப்படும். நன்மைகளைப் புரிவோரும் உண்மைகளை உரைப்போரும் காட்டிக் கொடுக்கப்படுகின்றார்கள். தீமைகளைச் செய்வோரும் அநீதிகளை பொய்மைகளை செய்வோரும் காட்டிக் கொடுக்கப்படுகின்றனர். நன்மைகளைப் புரிவோர் சமுதாயத்தின்கண் காட்டிக் கொடுக்கப்படவேண்டும் ஏனெனில் ஏனையோரும் அவர்களைப் போன்று நன்மைகளைப் புரிய. தீமை செய்வோர் காட்டிக் கொடுக்கப்பட வேண்டும். ஏனெனில் அவர்கள் தங்களில் உள்ள தீமைகளைக் களைந்து நன்மைக்காகச் செயற்படும் சமுதாயத்தினராக உரு மாற்றப்படுவதற்கு.

ஆனால் அன்று உண்மையையே உரைத்து உண்மைக்காகவே வாழ்ந்து, நன்மை புரிதலையே முற்றிலும் தமது வாழ்வாக்கிய இயேசு தமது உற்ற சீடனாலேயே காட்டிக் கொடுக்கப்படுகின்றார். கொடூர மரணத்திற்காக இன்றும் பணமும், பக்கபலமான நபர்களும் தானாகவே நம்மைச் சூழும்போது எமது உண்மைக் கண்கள் மறைகின்றன. உற்ற உறவுகள் உதறி எறியப்படுகின்றன. மனதில் கருணையின் மலர் உதிர்ந்து போகின்றது. இத்தகைய நிலையே அன்று இயேசுவின் சீடன் யூதாசையும் சூழ்ந்து நிற்க உண்மையின் உத்தமரையே கருணையின்றிக் காட்டிக் கொடுக்க வைத்தது.

'சிந்திய பாலுக்குப் புலம்பிப் பயனேது; காட்டிக் கொடுத்த பின்பும் கலங்கியும் பயனேது? யூதாசினால் யூதரிடம் காட்டிக் கொடுக்கப்பட்ட இயேசுவிற்கு நிகழ்ந்த நிஷ்டூர மரணத்தைக் கண்டு யூதாஸ் கலங்கினான். ஆனால் அவரை விடுவிக்க அவனால் இயலவில்லை. மாறாகத் தன்னைத் தானே அழிக்கின்றான். இன்று நாமும் பல சந்தர்ப்பங்களில் கருணையற்ற யூதாசாகவே மாறுகின்றோம். சுயநலமிக்க குடும்ப கௌரவத்திற்காக சமநீதியற்ற சமூக வாழ்விற்காக அநீத அரசியல் கொள்ளைகளுக்காக பல காட்டிக் கொடுப்புக்களை மேற்கொள்கிறோம். ஆனால் விளைவு, மனித மாண்பற்ற வன்முறைகளும், மனித பேரவலங்களுமே எம் மத்தியில் மேலோங்கி நிற்கின்றன. இந்த நிலை என்று மாறும் எம்மத்தியில்? சிந்திக்க வேண்டிய விடயம். நன்மை புரிவோரின் நற்செயல்களைப் பாராட்டுவோம். உண்மைகளை உரைக்கும் போது அவர்கள் உயிர்களை ஊடறுப்பதைத் தவிர்த்து, உளத்தாழ்மையுடன் ஏற்போம். காட்டிக்கொடுக்கும் கொள்கையை விடுத்து தவறுகளை நேரே சுட்டிக்காட்டி நீதி வழிக்கு அழைப்போம். இரக்க மற்ற மனங்களையும் கருணையினால் மாற்றி இயேசுவில் விளங்கிய பிரதிபலன் நோக்காத கருணை கொள்ளும் தியாக நிலையை எம்மிலே மலர்விக்க இப்புனித வாரம் வழியாகட்டும். எஸ்.எம்.புளோறன்ஸ்.

## தெல்லிப்பழை கூட்டுறவு வைத்தியசாலையின் செயற்பாடுகளை அபிவிருத்தி செய்ய நடவடிக்கை

யாழ்ப்பாணம் , ஏப்.7

தெல்லிப்பழை ஐக்கிய கூட்டுறவு வைத்தியசாலை புனரமைப்பு செய்யப்பட்டுள்ளதாக மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் பொ.சிவலிங்கம் தெரிவித்துள்ளார்.

வைத்தியசாலையின் செயற்பாடுகளை மேலும் விஸ்தரிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

இதற்கென மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்கள ஓய்வு பெற்ற உத்தியோகத்தர் என்.தவநாதன் தலைமையிலான மூவர் கொண்ட நிர்வாகசபை ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

இந்தக் குழு மூலம் வைத்தியசாலையின் செயற்பாடுகளை மேலும் அபிவிருத்தி செய்வதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதையும் உதவி ஆணையாளர் மேலும் தெரிவித்தார். (50- 224)

## மரத்தில் இருந்து வீழ்ந்து காயம்

யாழ்ப்பாணம் , ஏப்.7

மரத்தில் இருந்து தவறி வீழ்ந்த ஒருவர் படுகாயமடைந்தார்.

நேற்று முன்தினம் மாலை 3 மணியளவில் புங்குடுதீவு முதலாம் வட்டாரப் பகுதியில் இடம்பெற்ற இச் சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த ஆர்.ஐயாத்துரை (வயது -60) என்பவரே படுகாயமடைந்தவர் ஆவார்.

இவர் வேலணை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக அம்புலன்ஸ் மூலம் யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.(1-78)

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம் , ஏப்.7

பருத்தித்துறை ஞானசம்பந்தர் கலை மன்றத்தின் ஏற்பாட்டில் பௌர்ணமி உரையும் தெளிவும் கலந்துரையாடல் நாளை மறுதினம் வியாழக்கிழமை பி.ப. 4.30 மணிக்கு மன்ற மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

மன்றத்தலைவர் க.ப.ஆனந்தநடேசன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பேராசிரியர் மா.நடராஜசுந்தரம் 'சர்வதேச நிதி நெருக்கடியும் விளைவுகளும்' என்னும் தலைப்பில் உரையாற்றவுள்ளார். (1)


பபு ரெக்ஸ்ரைல்ஸ்
சிறுவர்களுக்கான பஞ்சாபி, மற்றும் பெண்களுக்கான பஞ்சாபி, சாறி, ஸ்கேட் அன் பிளவுஸ் என்பன விற்பனைக்குண்டு.
கம்பஸ் லேன், (கம்பஸ் வங்கி முன்பாக).


## குருநகர் மீன்சந்தை மீண்டும் இயங்க அனுமதி

குருநகர், ஏப்.7

குருநகர் மீன்சந்தை குருநகர் சீநோர் வலைத் தொழிற்காலைக்கு அருகாமையில் இயங்க உள்ளது. இதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு இச் சந்தையை திறப்பதற்கான அனுமதியை யாழ். பாதுகாப்புப் படையினர் வழங்கி உள்ளனர் எனவும் வெகுவிரைவில் இச்சந்தை மீண்டும் இங்கு இயங்க உள்ளது எனவும் குருநகர் கடற்றொழிலாளர் சங்கங்கள் தெரிவித்தன. (1-51)

## அறிவித்தல்

யா/ பெரியபுலம் பாடசாலையின் பெயரைப் பயன்படுத்தி பாடசாலையில் இருந்து விலகிய சில மாணவர்கள் நன்கொடை சேகரிப்பதாக அறிகின்றோம். எந்த ஒருவருக்கும் நன்கொடை வழங்கவேண்டாம் எனக் கேட்டுக்கொள்கின்றோம்.

அதிபர்

## சேவை நலன் பாராட்டு

### திருவாளர் எசேக்கியேல், தேவருள்ராஜா

(முகாமைத்துவ உதவியாளர், அதிசிறப்புத் தரம்)



இன்று தனது 33 வருட அரச சேவையை பூர்த்திசெய்து ஓய்வுபெறுகிறார். 01.01.1999இல் இருந்து 04.10.2004 வரை பதில் கணக்காளராகவும் 05.10.2004இல் இருந்து இன்றுவரை நிர்வாக உத்தியோகத்தராகவும் தீவக கல்வி அலுவலகத்தில் கடமையாற்றி ஓய்வுபெறும் இவரின் பணிகளை நன்றியுடன் நினைவு கூறுவதுடன் ஓய்வுகாலத்தில் சீரும் சிறப்புமாக வாழ வாழ்த்துகின்றோம்.

வலயக் கல்விப் பணிப்பாளரும்,
உத்தியோகத்தர்களும், ஊழியர்களும்.
வலயக் கல்வி அலுவலகம், தீவகம் வேலணை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத்தமிழர்களைக் காக்க தமிழகக் கட்சிகள் இன்னும் தீவிரமாய் செயற்பட வேண்டும்

## கருத்துக் கணிப்பில் தமிழ் மக்கள் தெரிவிப்பு

## இந்திய நாடாளுமன்றத் தேர்தலின்போது ஈழத்தமிழர் பிரச்சினை முக்கிய விவாதப் பொருள் ஆகும்!

ஈழத்தமிழர்களைக் காப்பாற்றத் தமிழக அரசியல் கட்சிகள் மேற்கொண்ட முயற்சிகள் இலங்கை அரசு மீது சிறு தாக்கத்தைக் கூட ஏற்படுத்தவில்லை என்றும், எனவே ஆட்சியைத் தக்க வைப்பதை மட்டுமே கருத்திற் கொள்ளாது ஈழத்தமிழருக்கு ஆதரவாக தீவிரமாகச் செயற்பட வேண்டியது தமிழகக் கட்சிகளின் கடமை என்ற மனோநிலையை கருத்துக் கணிப்பு ஒன்றில் தமிழக மக்கள் வெளிப்படுத்தி உள்ளனர். தமிழகத் தேர்தல் களம் சூடுபிடித்துள்ள நிலையில் டாக்டர் ச.ராஜநாயகம் தலைமையில் மக்கள் ஆய்வகம் என்ற அமைப்பு நடத்திய கருத்துக் கணிப்பிலேயே இது தெரிய வந்துள்ளது.

''மக்களை ஆய்வது மக்களுக்காகவே'' என்ற கொள்கையுடன் மக்களை மையப்படுத்திய பல்துறை ஆய்வுகளை மக்கள் ஆய்வகம் தொடர்ந்து மேற்கொண்டு வருகிறது. கள ஆய்வுகளோடு நின்றுவிடாமல், ஆய்வு முடிவுகளை அடியொற்றிய செயல்பூர்வமான திட்டங்களையும் நடைமுறைப்படுத்தி வருகிறது. தகவல் அறியும் உரிமை, வாக்குரிமை ஆகியவை குறித்து மாநில அளவிலான பரப்புரைப் பயணங்களையும், இந்தியத் தேர்தல் முறையில் செய்யவேண்டிய சீர்திருத்தங்கள் குறித்துத் தேசிய அளவிலான கருத்தரங்கு மற்றும் ஆலோசனைக் கூட்டங்களையும், புவி வெப்பமாதும் முதலிய சுற்றுச்சூழல் சிக்கல்கள் குறித்த பயிலரங்குகளையும் கடந்த ஆண்டு நடத்தியுள்ளது. ஆய்வுகளின் அடிப்படையில் கலைப்படைப்புக்களை உருவாக்கும் மற்றொரு முயற்சியாக, அரவாணிகளைப் பற்றிய ''அப்பால்,'' இளைஞரைப் பற்றிய ''வர்ணா'' ஆகிய குறுந்திரைப் படங்களையும் தயாரித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

கடந்த சில மாதங்களாகத் தமிழகத்தின் முக்கியப் பிரச்சினைகளில் ஒன்றாக இடம் பெற்றுள்ள இலங்கைத் தமிழர் பிரச்சினை குறித்துத் தமிழக அரசியல் கட்சிகள் வெவ்வேறு நிலைப்பாடுகளுடன் பலவகைப்பட்ட செயல்பாடுகளை முடுக்கி விட்டுள்ளன. இந் நிலையில், தமிழக மக்களின் உள்ளார்ந்த உணர்வுகளையும் எண்ணப் போக்குகளையும் ஒரு நடுநிலையான ஆய்வு மூலமாகப் பதிவுசெய்ய வேண்டிய தேவை இருப்பதை உணர்ந்து மக்கள் ஆய்வகம் இந்தக் கள ஆய்வை மேற்கொண்டது.

இந்திய/தமிழகப் பண்பாட்டு அரசியல் சூழலுக்கேற்ப, எண்ணியல் மற்றும் பண்பியல் கூறுகளை உள்ளடக்கி பேரா.டாக்டர் ச.ராஜநாயகம் உருவாக்கியுள்ள சமூக உளவியல் அணுகுமுறை இந்த ஆய்விலும் பின்பற்றப்பட்டுள்ளது. எனினும் இலங்கைத் தமிழர் பிரச்சினையின் உணர்வு பூர்வமான தன்மையைக் கருத்தில் கொண்டு, மக்கள் சுதந்திரமாகத் தங்கள் உள்ளக்கிடக்கையை வெளிப்படுத்த ஏதுவாக, கலந்துரையாடல் சூழலில், வினாக்கள் மூலம் கருத்துக்கள் சேகரிக்கப்பட்டன. இத்துடன், வீடியோ மூலமும் மக்களுடைய கருத்துப் பகிர்வுகள் பதிவுசெய்யப்பட்டன. இதற்கென மக்கள் ஆய்வகத்தின் சிறப்புப் பயிற்சி பெற்ற தரவுச் சேகரிப்பாளர்கள் பயன்படுத்தப்பட்டனர்.

பேரா.டாக்டர் ச.ராஜநாயகத்தின் நேரடி வழிநடத்துதலில் இந்தக் களஆய்வு நடைபெற்றது. கள ஆய்வின்போது ஆய்வுக் குழுவின் கவனத்தை ஈர்த்த அம்சங்களில் கீழ்வருவன குறிப்பிடத் தகுந்தவை.

1.இலங்கைத் தமிழர் பிரச்சினை குறித்துப் பேச்சை எடுத்தவுடன், தமிழகத்தின் அனைத்துப் பகுதிகளிலும், அனைத்துத் தரப்பினரிடமும் முதலில் வெளிப்படும் உணர்வு, பயம் கலந்த தயக்கம்.

2. ஆண்களை விடப் பெண்கள் இலங்கைத் தமிழர் மீது அதிக மனிதநேய அக்கறையை வெளிப்படுத்தினாலும், இந்தப் பிரச்சினை குறித்துப் போதிய விவரம் தெரியவில்லை.

3.இலங்கையின் பூர்வீகத் தமிழரையும் (ஆங்கிலேயர் காலத்தில் சென்ற) மலையகத் தமிழரையும் குழப்பி அங்குள்ள எல்லாத் தமிழருமே ''பிழைக்கச் சென்றவர்கள்'' என்ற எண்ணம் கணிசமாகப் பரவியுள்ளது.

4.நகர மக்களை விட கிராம மக்கள் அதிக அனுதாபத்தோடும் மனந்திறந்தும் பேசுகிறார்கள்.

5.தமிழகத்தின் உள்பகுதிகளை விட, கடற்கரையோரக் கிராமங்களில் அதிக உணர்ச்சி பூர்வமான பகிர்வு நிகழ்ந்துள்ளது.

6.அரசியல் ரீதியான நிலைப்பாடுகளுக்கு ஏற்பவே ஊடகங்களில் செய்தி வெளிவருவதாகவும், சரியான, முழுமையான தகவல்களைத் தந்து, கருத்தொருமையை உருவாக்க வேண்டிய கடமை ஊடகங்களுக்கு இருப்பதாகவும் பரவலாகக் கருத்துரைக்கப்பட்டுள்ளது.

ஆய்வில் தொடுக்கப்பட்ட வினாக்களும், அவைசார்ந்து தமிழக மக்கள் அளித்த கணிப்புகளும் இங்கு தரப்படுகின்றன.

எத்தகைய போர்? இலங்கையில் தற்போது நடந்துவரும் போரில், விடுதலைப் புலிகளைச் சாக்காக வைத்து தமிழினத்தையே இலங்கை அரசு அழித்து வருகிறது (86.5) இலங்கை அரசு தனது அரசியல் ஆதாயத்திற்காக இலங்கை மக்கள் மீது தேவையற்ற ஒரு போரைத் திணித்துள்ளது (10.5), விடுதலைப் புலிகளிடமிருந்து தமிழர்களை மீட்க இலங்கை அரசு போர் நடத்துகிறது (2.0) ஆகிய கருத்துக்கள் பதிவாகியுள் ளன.

உணர்வு வெளிப்பாடு இலங்கையில் நடைபெறும் போர் குறித்த செய்திகளைக் கண்ணுறும் போது கோபமே மிகப் பிரதான உணர்வாக வெளிப்படுவதாக மிகப் பெரும்பாலோர் (85.0) தெரிவித்துள்ளனர். (மத்திய மாநில அரசுகளின் மீது கோபம் (44.5) இலங்கை அரசின் மீது கோபம் (25.5) பன்னாட்டுச் சமூகங்கள் மீது கோபம் (12.0) விடுதலைப் புலிகள் மீது 3.0 பிற பதில்கள் : பாதிக்கப்பட்டுள்ள மக்கள் மீது பரிதாபம் (11.5), எதுவும் செய்ய முடியாத இயலாமை (2.5) ஆகியவை.

உடனடித் தீர்வு: இலங்கைத் தமிழர் பிரச்சினைக்கு உடனடித் தீர்வாக, உடனடியாகப் போர் நிறுத்தம் செய்து அரசியல் தீர்வு காணப் பேச்சு வார்த்தையைத் தொடங்குவது ஏகோபித்த கருத்தாக முன்வைக்கப்படுகிறது (90.0), பிற பதில்களில் : பாதிக்கப்பட்ட மக்களுக்கு மருத்துவம் மற்றும் நிவாரண உதவி 6.0, விடுதலைப் புலிகளை முற்றாக ஒடுக்கும் வரை போரைத் தொடர வேண்டும் 2.0.

நிரந்தரத் தீர்வு: இலங்கைத் தமிழர் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வாக முன்வைக்கப்படுபவற்றுள் முக்கியமானவை: தனி ஈழம் (68.0), ஒன்றுபட்ட இலங்கையில் தமிழர் பகுதிகளுக்குச் சுயாட்சி (21.0), தமிழரைப் பௌத்த சிங்களவருக்குச் சமமாக அங்கீகரித்து இலங்கை அரசியல் சட்டத்தில் திருத்தம் (4.5).

பேச்சு வார்த்தை யாரோடு: இலங்கையில் போர் நிறுத்தம் செய்து பேச்சுவார்த்தை நடத்துவதென்றால், விடுதலைப் புலிகள் உள்ளிட்ட அனைத்துத் தமிழ் அமைப்புகளோடும் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும் என்ற கருத்து முதலிடம் பெறுகிறது (56.0), பிற கருத்துக்கள்: விடுதலைப் புலிகளோடு மட்டும் (27.0), விடுதலைப் புலிகள் தவிர்ந்த பிற அமைப்புகளோடு (12.0).

புலிகளின் அடுத்த கட்ட நடவடிக்கை: பன்னாட்டு அழுத்தங்கள் மூலம் போரை நிறுத்தச் செய்வது விடுதலைப் புலிகளின் அடுத்தகட்ட நடவடிக்கையாக இருக்கும் என்று பெரும்பாலோர் (69.0) எதிர்பார்க்கின்றனர். போரைத் தீவிரப்படுத்துவது (20.0), ஆயுதங்களைக் கீழே போட்டுச் சரணடைவது (5.0) ஆகியவை பிற எதிர்பார்ப்புக்கள்.

ஊடகச் சுதந்திரம்: ஊடகங்களைச் சுதந்திரமாகச் செயல்பட விடாமல் இலங்கை அரசு தடைசெய்கிறது என்பது, ஆய்வில் பங்கேற்ற பெரும்பாலானோரின் கருத்து (55.5), பேச்சு சூழலில் எந்த அரசும் தனக்குச் சாதகமாகச் செய்திகளைத் தணிக்கை செய்தே வெளியிடும் என்பது மற்றொரு முக்கியக் கருத்து (16.0)

### தமிழக அரசியல்களச் சூழல்

இதுவரையிலான முயற்சிகளின் தாக்கம்: இதுவரை தமிழக அரசியல் கட்சிகள் மேற்கொண்ட பல்வேறு முயற்சிகள் இலங்கை அரசின் மீது எந்தவிதச் சிறு தாக்கத்தைக்கூட ஏற்படுத்தவில்லை என்பது ஏகோபித்த கருத்தாக (91.5) வெளிப்படுகிறது.

தமிழகத்தில் இத்தகைய முயற்சிகளின் தாக்கத்தைப் பொறுத்த அளவில், இலங்கைத் தமிழருக்கு ஆதரவான எழுச்சியை இங்கு உருவாகியுள்ளது (43.0), மத்திய அரசின் இரட்டை வேடத்தை அம்பலப்படுத்தியுள்ளது (32.5), மாநில அரசின் தடுமாற்றத்தை வெளிப்படுத்தியுள்ளது (14.0), ஒரு சில கட்சிகள் தம்மைத் தமிழினக் காவலராகக் காட்டிக்கொள்ள உதவியுள்ளது (6.5) ஆகியவை பதிவாகியுள்ளன.

தமிழக அரசின் அணுகுமுறை: தமிழகத்தில் ஆட்சியைத் தக்கவைத்துக் கொள்ள காங்கிரஸின் தயவு தேவைப்படுவதால், காங்கிரஸைப் பகைத்துக் கொள்ளாமல் அனுசரித்துப் போகிறது (70.5), ஒரு மாநில அரசு என்ன செய்ய முடியுமோ அதைச் செய்து வருகிறது (22.0), இலங்கைத் தமிழர் மீது உண்மையான அக்கறை இருந்தாலும், அதை வெளிப்படுத்தும் விதத்தில் நிஜமாகவே குழப்பத்தில் Genuine Confusion உள்ளது (4.0) ஆகியவை, இலங்கைத் தமிழர் பிரச்சினை குறித்து தமிழக அரசின் அணுகுமுறையாகத் தெரிவிக்கப்பட்டுள்ளன.

உண்மையான அக்கறையுள்ள கட்சி: இலங்கைத் தமிழர் நலனில் உண்மையான அக்கறை கொண்டுள்ள தமிழகக் கட்சி எதுவுமில்லை, எல்லாமே தேர்தல் அரசியலே செய்கின்றன எனப் பாதிக்கும் மேற்பட்டோர் (52.0) தெரிவித்துள்ளனர். அக்கறையுள்ள குறிப்பிட்ட கட்சிகளைப் பொறுத்த வரையில், தமிழர் தேசிய இயக்கம் 12.0, மதிமுக 9.5 , விடுதலைச் சிறுத்தைகள் 6.5, இந்திய கம்யுனிஸ்ட் 5.0, திமுக 4.0, பாமக 3.5, காங்கிரஸ் 2.5, அதிமுக 2.0, தேமுதிக 1.0, மார்க்சிஸ்ட் கம்யுனிஸ்ட் 1.0.

கட்சிகள் அடுத்துச் செய்ய வேண்டியது: ஒவ்வொரு கட்சியும் தன்னிச்சையாகச் செயல்படாமல், முதல்வர் தலைமையில் ஒன்றிணைந்து செயல்பட வேண்டும் என்பது ஏகோபித்த (86.0)கருத்து (ஒன்றிணைந்து மத்திய அரசை வற்புறுத்த வேண்டும். 65.0, பன்னாட்டுச் சமூகங்களின் கவனத்தை ஈர்த்து, இலங்கை அரசு மீது நடவடிக்கை எடுக்கச் செய்ய வேண்டும் (21.0), அரசியல் கட்சிகளை ஒதுக்கிவிட்டு இளைஞர்கள் இந்தப் பிரச்சினையைக் கையிலெடுக்க வேண்டும் என்ற கருத்துக்கும் ஓரளவு (12.0) ஆதரவுள்ளது.

ஒருவேளை தமிழர் பிரச்சினையை முன்னிட்டு திமுக ஆட்சியை இழக்க நேரிட்டால், அடுத்து வரும் தேர்தலில் தி.மு.க. அறுதிப் பெரும்பான்மை இடங்களைக் கைப் பற்றி மீண்டும் ஆட்சிக்கு வரும் வாய்ப்பு இருப்பதாகப் பெரும்பாலோர் (58.5) கருதுகின்றனர். (மீண்டும் ஆட்சிக்கு வர முடி யாது (20.0).

போராட்டக் களத்தில் மாணவர்கள்: இலங்கையில் போர் நிறுத்தம் கோரியும் இலங்கைத் தமிழருக்கு ஆதரவு தெரிவித்தும் மாணவர்கள் போராட்டத்தில் ஈடுபடுவதற்குப் பெரும்பாலோர் ஆதரவு தெரிவித்தாலும், வலுவான எதிர்ப்பும் வெளிப்படுகிறது. (ஆதரவு 46.5, எதிர்ப்பு 32.5),

ஊடகங்களில் இலங்கைத் தமிழர் பிரச்சினை? இலங்கையில் நடந்துவரும் போரைக் குறித்த செய்திகளில், ஒருதலைச் சார்பு இல்லாமல், உண்மையான கள நிலவரத்தைக் கூறும் செவ்வூடகம் எதுவுமில்லை என்பதே பெரும்பான்மைக் கருத்து பெரும்பாலும் அவை இலங்கை அரசு தரும் தணிக்கை செய்யப்பட்ட செய்திகளையே தருகின்றன என்பதே பெரும்பாலானவர்களின் (68.0) கருத்தாக வெளிப்பட்டுள்ளது.

உண்மையான கள நிலவரத்தைக் கூறும் தொலைக் காட்சிகளில் சன் டி.வி முதலிடத்திடத்திலும் (24.5), அதற்கு வெகு அருகில் மக்கள் தொலைக்காட்சியும் (23.0), மூன்றாமிடத்தில் கலைஞர் தொலைக்காட்சியும் (19.5) வருகின்றன நாளிதழ்களைப் பொறுத்த வரை தினத்தந்தி முதலிடத்திலும் (23.0), அதற் கடுத்த இடங்களில் தமிழோசை (21.0), தினகரன் (20.5) ஆகியவையும் வருகின்றன வார/ வாரமிரு முறை இதழ்களில் நக்கீரன் (18.5), குமுதம் (17.0), ஜுனியர் விகடன் (14.5) ஆகியவை இடம் பெறுகின்றன.

### இந்திய மத்திய அரசுபற்றிய மக்களின் மனோநிலை

இலங்கைத் தமிழர் பிரச்சினை தொடர்பாக நடுவண் அரசு இதுவரை மேற்கொண்ட செயல்பாடுகள் குறித்துக் கடுமையான அதிருப்தியே வெளிப்பட்டுள்ளது. இலங்கை அரசு தொடுத்துள்ள போரை ஆதரிப்பதாகவே நடுவண் அரசின் செயல்பாடுகள் உள்ளதாக மிகப் பெரும்பாலோர் (86.0) கருதுகின்றனர். தமிழக அரசின் வற்புறுத்தலுக்காகப் பேருக்கு ஏதோ செய்துள்ளது (6.5), உண்மையான அக்கறையோடு செயல்பட்டுள்ளது (2.5) ஆகியவை பிற கருத்துக்கள்.

இலங்கைத் தமிழர் பிரச்சினை தொடர்பாக இந்திய அரசு உடனடியாகச் செய்ய வேண்டியதாகக் கூறப்பட்டுள்ளவற்றில், போர்த் தளபாடங்கள் மற்றும் பயிற்சி வழங்குவதை உடனடியாக நிறுத்த வேண்டும் (49.0), போரை நிறுத்த உறுதியான குறுக்கீடு செய்ய வேண்டும் (37.0) ஆகியவை அழுத்தமாகப் பதிவாகியுள்ளன.

### இந்தியத் தேர்தல் களச் சூழலும் ஈழத்தமிழர் பிரச்சினையும்

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் இலங்கைத் தமிழர் பிரச்சினை முக்கிய விடயமாக இடம்பெறுமா என்பதைப் பொறுத்த வரையில் ஏகோபித்த கருத்தாக எதுவும் வெளிப்படவில்லை. எனினும் தமிழகத்தில் நிச்சயம் இந்தப் பிரச்சினை முதலிடம் வகிக்கும் (30.0), தேர்தல் விடயமாக இடம் பெறலாம் என்றாலும், உள்நாட்டுப் பிரச்சினைகளே (அடிப்படைத் தேவைகள், விலைவாசி, தீவிரவாதம், மதவாதம் ஆகியவை) அதிக முக்கியத்துவம் பெறும் (30.0) ஆகியவை வலுவாக வெளிப்படுகின்றன. பணம் சாதி, கூட்டணி முதலியவற்றின் அடிப்படையிலேயே தேர்தல்கள் அமைந்துள்ளதால் இது தேர்தல் பிரச்சினையாக வாய்ப்பில்லை (18.0), இப்போதைக்கு எதுவும் சொல்ல இயலாது, தேர்தலின் போது நிலவும் சூழலைப் பொறுத்து இதன் முக்கியத்துவம் அமையும் (12.0), எல்லாக் கட்சிகளுமே இந்தப் பிரச்சினையில் கவனம் செலுத்துவதால் தேர்தல் பிரச்சினையாக வாய்ப்பில்லை (5.0) ஆகியவை பிற கருத்துக்கள்.

தமிழகத்தைப் பொறுத்த வரை, வரும் நாடாளுமன்றத் தேர்தலில் இலங்கைத் தமிழர் பிரச்சினை இடம்பெறும் பட்சத்தில், அதனுடைய வெளிப்பாடு, ஆளும் கட்சிகளுக்கு எதிர்ப்பாக இருக்கும் (68.0), தமிழின உணர்வை மையப்படுத்திய புதிய கூட்டணியாக இருக்கும் (11.0), தேர்தல் புறக்கணிப்பாக இருக்கும் (8.0).

இலங்கைத் தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு ஏற்படாமல் நாடாளுமன்றத் தேர்தல் வரை தொடரும் பட்சத்தில், தமிழகத்தைப் பொறுத்த வரை காங்கிரஸுக்கு மிகப் பெரும் பாதிப்பு இருக்கும் என்பது கீழ்வரும் பதில்களை ஒப்புநோக்கும் போது புலப்படுகிறது. காங்கிரஸுக்குப் பாதிப்பு 39.0, மத்திய அரசியல் இடம்பெற்றுள்ள எல்லாக் கட்சிகளுக்கும் 24.5 மாநிலத்தில் ஆளும் கட்சிக்கு 21.0 இலங்கைத் தமிழர் பிரச்சினையில் முழுமனதுடன் ஈடுபடாத கட்சிகளுக்கு 6.5, எல்லாக் கட்சிகளுக்கும் 2.5, யாருக்கும் பெரிய அளவில் பாதிப்பு இருக்காது 2.0 வீதத்தினரும் கருதுகின்றனர்.

நன்றி : நக்கீரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணம் - வண்ணார்பண்ணை
# ஸ்ரீமத் வாலாம்பிகா சமேத ஸ்ரீ வைத்தீஸ்வரன் கோயில்
# பஞ்சரத பவனி சிறப்பு மலர் - 07.04.2009

## வண்ணை வைத்தீஸ்வரன் ஆலய வரலாறு

வண்ணை வைத்தீஸ்வரன் கோயில் கோபாலச் செட்டியாரின் மகனான வைத்திலிங்கச் செட்டியாரால் இற்றைக்கு இருநூற்றுப் பத்தொன்பது வருடங்களுக்கு முன்னர் 1790ஆம் ஆண்டில் கட்டுவிக்கப்பட்டதொன்றாகும்.

ஒல்லாந்தர் ஆட்சிக் காலத்தில் இந்தியாவின் சோழ நாட்டிலிருந்து குடும்பத்துடன் யாழ்ப்பாணம் வந்த கோபாலச் செட்டியார் ஒல்லாந்த அரச நிர்வாகத்தில் தொழிலாற்றி வந்த கொச்சிக் கணேசையரின் கீழ் உத்தியோகம் பார்த்து வந்தார். தாம் யாழ்ப்பாணம் வந்த நாள்முதல் அவர் வேப்பமரமொன்றின்கீழ் வைத்துப் பூசித்து வந்த பிள்ளையாரே தற்போது கடைத்தெருப் பிள்ளையார் கோயில் என அழைக்கப்படும் வேம்படிப் பிள்ளையார் கோயிலில் வைத்துப் பூசிக்கப்படும் பிள்ளையாராகும்.

பின்னர் தனியாக பலசரக்கு வியாபாரம் ஆரம்பித்து நடத்திவந்த வேளையில்கோபாலச் செட்டியாருக்கு ஒல்லாந்த தேசாதிபதியுடன் வியாபாரம் தொடர்பான நெருக்கம் ஏற்பட்டது.

இக்காலத்தில் கோபாலச் செட்டியாருக்கு ஒரு மகன் பிறந்தான். இந்தியாவிலிருந்து வந்து தம்முடன் தங்கியிருந்த கூழங்கைத் தம்பிரான் என்ற அறிஞரின் ஆலோசனைக்கமையத் தமது மகனுக்கு வைத்தியலிங்கம் எனப் பெயரிட்டு வளர்த்து வந்தார்.

ஒல்லாந்தத் தேசாதிபதியும் அவரது மனைவியும் கோபாலச் செட்டியாருடன் கொண்டிருந்த இறுக்கமான பிணைப்புக் காரணமாகவும் அவர்களுக்குப் பிள்ளைகள் இல்லாத காரணத்தாலும் கோபாலச் செட்டியாரின் ஒப்புதலுடன் வைத்தியலிங்கத்தை ஒல்லாந்த தேசாதிபதியும் அவரது மனைவியும் தம்முடனேயே வைத்து வளர்த்து வந்தனர். தமது 18ஆவது வயதுவரை தேசாதிபதியின் சுவீகாரப் புதல்வன் போல் ஒல்லாந்த தேசாதிபதியின் இல்லத்தில் வளர்ந்து வந்த வைத்தியலிங்கம் ஒல்லாந்த பாஷையும் கற்றுக்கொண்டார்.

ஒல்லாந்த தேசாதிபதியின் உதவியால் முத்துக் குளிப்பை குத்தகைக்குப் பெற்று நடத்தி அதன்மூலம் கணிசமான வருவாயை ஈட்டிவந்த வைத்தியலிங்கம் அத்தோடு கூழங்கைத் தம்பிரானிடம் தமிழ் கற்றுக் கொண்டார். முத்து வியாபாரத்தில் மட்டுமல்லாது வைத்தியலிங்கம் செட்டியார் யானை வாங்கி விற்கும் வியாபாரமும் செய்து வந்திருக்கிறார் என்பது யானை வியாபாரம் செய்யும் நிறுவனமொன்று செட்டியாரைத் தங்களது வியாபாரத்துக்கு ஏற்றுக்கொண்டமை குறித்து வழங்கியிருந்த டச்சு மொழியிலான ஆவணமொன்றின் மூலம் உறுதியாகின்றது.



வர்த்தகத்தின் மூலம் பெரும் பொருளீட்டித் தனவந்தரான வைத்தியலிங்கச் செட்டியாரிடம் உன்னை இந்த நன்னிலைக்கு உயர்த்தி வைத்த தெய்வங்களான வைத்தியநாதப் பெருமானுக்கும் தையல் நாயகித் தாயாருக்கும் யாழ்ப்பாணத்தில் நீ ஓர் ஆலயம் அமைத்தல் வேண்டுமென கூழங்கைத் தம்பிரான் கூறிய போது வைத்தியலிங்கச் செட்டியாரும் அதற்கு உடன்பட்டார்.

ஒல்லாந்த அரசுடன் தமக்கிருந்த செல்வாக்கைப் பயன்படுத்தி வைத்தியலிங்கச் செட்டியார் அரசின் அனுமதிபெற்று 1787ஆம் ஆண்டில் கோயில் அமைக்கும் வேலையை ஆரம்பித்து 1790ஆம் ஆண்டில் பூர்த்தி செய்து அதே ஆண்டிலேயே சாதாரண வருடம் சித்திரை மாதம் பூர்வபட்ச ஸப்தமியோடு கூடிய புனர்பூச நட்சத்திரத்தில் வாலாம்பிகா சமேத வைத்தீஸ்வரப் பெருமானுக்குக் கும்பாபிஷேகம் செய்வித்தார். அத்துடன் நித்திய நைமித்தியங்கள் கிரமமாக நடைபெறவும் ஏற்பாடுகள் செய்தார்.

ஆலயத்தைத் தாமே இனிதே பரிபாலித்த வைத்தியலிங்கச் செட்டியார் தமது புத்திரர்களான ஸ்ரீ கோபாலச் செட்டியார், ஸ்ரீ கந்தப்பச் செட்டியார் ஆகியோரின் பரிபாலனத்தில் ஒப்புவித்துவிட்டுத் தமது அந்திம காலத்தைக் காசியில் சென்று கழித்து இறையடி சேர்ந்தார்.

இவர்களது வழி வழி வந்தோரால் பரிபாலிக்கப்பட்டு வந்த வண்ணை வைத்தீஸ்வரன் கோயில் 1805ஆம் ஆண்டில் வைத்தியலிங்கச் செட்டியாரால் வரையப்பட்ட சாசனத்தின்படி அவரது வழித் தோன்றல்களால் தொடர்ந்தும் பரிபாலிக்கப்பட்டு வருகிறது.

## செட்டியார் சிவன்கோயில் என அழைக்கப்படும் வண்ணை வைத்தீஸ்வரன் கோயிலின் தனிச் சிறப்புக்கள்

* நல்லைநகர் ஆறுமுக நாவலர் தமது முதற் சைவப் பிரசங்கத்தை இவ்வாலய வசந்த மண்டபத்திலேயே ஆரம்பித்தார்.
* பின்னர் வித்துவ சிரோன்மணி பொன்னம்பல பிள்ளை இவ்வாலயத்தில் புராணப் பிரசங்கம் செய்து வந்தார்.
* அதன் பின்னர் சங்கர சுப்பையர் சுவாமிகளும் இவ்வாலயத்திலே புராணப் பிரசங்கம் செய்து வந்தார்.
* மூர்த்தி, தலம், தீர்த்தம் மூன்றும் ஒருங்கே அமையப் பெற்றது இவ்வாலயத்தின் தனிச் சிறப்பாகும்.
* இத்தலத்துக்குத் தீர்த்தம் வண்ணை மேற்கிலுள்ள வில்லூன்றி என்னும் சமுத்திரத் தீர்த்தமாகும்.
* ஏனைய கோயில்களைப் போலல்லாது தனது பரிவாரக் கோயில்களை யாழ்ப்பாணத்தின் வெவ்வேறு இடங்களில் கொண்டுள்ள சிறப்பு வண்ணை வைத்தீஸ்வரன் கோயிலுக்கு உள்ளது. ஐயனார் கோயில், காளி கோயில், கற்கட்டு வைரவர் கோயில் மற்றும் பண்ணை முத்துமாரி அம்மன் கோயில் என்பன வண்ணை வைத்தீஸ்வரன் கோயிலுக்கு எல்லைக் கோயில்களாகவும், காவல் தெய்வங்களாகவும் அமைந்துள்ளன.

### இராஜகோபுரம்

''கோபுர தரிசனம் கோடி புண்ணியம்'' என்ற முன்னோர்கள் வாக்குக்கு இணங்க, வண்ணை வைத்தீஸ்வரன் கோயிலின் இராஜகோபுரம் வானளாவ உயர்ந்து நிற்கிறது. ஸ்தூல லிங்கம் எனக் கூறப்படும் இராஜ கோபுரம் மூல மூர்த்தியின் மகிமையை விளக்கும் சிறப்புக்களைத் தன்னகத்தே கொண்டிருப்பது தனிச் சிறப்பாகும்.

## பஞ்சரதம் வருகுதம்மா!

பஞ்சரதம் வருகுதம்மா வைத்தீசர் வீதியிலே
கோஞ்சுமேழில் பெருகிடவே ஆனைமுகன் முன்னேவர
வாலாம்பிகை அம்மை தேரைப் பெண் அடியார் தோட்டிமுப்பர்
வேலவரின் அருகினிலே வள்ளி தேய்வ யானைவர
வைத்தீசர் தேவியுடன் ஆனந்தமாய் வலம்வருவர்
இந்த ரதம் செல்லுமிடம் தர்மமது பூத்திருக்கும்
வண்ணை நகர் வீதியிலே எள் விழவும் இடமேயில்லை
எண்ணமுடன் தோட்டிமுத்து உயர்வடைவோம் வாழ்வினிலே.

**கவிமணி**
**கந்த முருகேசதாசனார்.**

## விழாச் சிறப்புற வாழ்த்துவோர்:

புதினப்பத்திரிகை முகவர்
அர்ச்சனைப் பொருள்கள், பழவகைகள்
நியாய விலைக்குப் பெற்றுக்கொள்ள
**உமா களஞ்சியம்**
378 (269), காங்கேசன்துறை வீதி
(சிவன்கோயிலடி),
யாழ்ப்பாணம்.

அன்பளிப்புப் பொருள்கள்,
எவர்சில்வர் பாத்திரங்கள், பாடசாலைப் பைகள்,
அழகுசாதனப் பொருள்கள் என்பனவற்றை மொத்தமாகவும்
சில்லறையாகவும் நியாய விலையில் பெற்றுக்கொள்ள
**கௌரி அழகு மாடம்**
இல.316, கே.கே.எஸ்.வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே.: 021 222 3227

22 கரட் தங்கநகை ஆபரணங்களை
நியாய் விலையில் ஓடருக்குப்
பெற்றுக்கொள்ள
**சுதா நகைத் தொழிலகம்**
இல.90, சிவன் வடக்கு வீதி,
யாழ்ப்பாணம்.

**JAFFNA TRADERS**
**யாழ்ப்பாண ரேடர்ஸ்**
*General Merchants, Commission Agents and Transporters*
No.302, Hospital Road, Jaffna.
T.P.: 021-2227480

பலசரக்குப் பொருள்கள் மற்றும்
மிக்சர் தயாரிப்பு பொருள்கள் மொத்தமாகவும்
சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள
**ஜெகன் களஞ்சியம்**
475, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

**S.V.MURUGESU**

Agent for:
Unilever SriLanka Ltd.,
Energizer Lanka Ltd.,
Fonterra Brand Lanka (Private) Ltd.,
Maliban Biscuit Manufactories Ltd.,
Shell Gas Lanka Ltd.
154, Hospital Road,
Jaffna.
222 2911
222 2202

**சண்முகம்**
**சைவ உணவகம்**
இல.10, கன்னாதிட்டி வீதி,
சிவன் கோயிலடி,
யாழ்ப்பாணம்.
T.P.: 021 222 8445

**கிருஸ்ணா**
**நகை மாளிகை**
09, கன்னாதிட்டி றோட், யாழ்ப்பாணம்.
**கிருஸ்ணா**
**அடைவு கடை**
370, கே.கே.எஸ்.றோட்,
யாழ்ப்பாணம்.

**சிறீராமராஜ்**
**அன் சன்ஸ்**
603, கே.கே.எஸ்.வீதி,
யாழ்ப்பாணம்.

**லிங்கம் உலோகத்**
**தொழிலகம்**
449, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

**யாழ்.வண்ணை சிவன்**
**சனசமூக நிலையம்**
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணம் - வண்ணார்பண்ணை
# ஸ்ரீமத் வாலாம்பிகா சமேத ஸ்ரீ வைத்தீஸ்வரன் கோயில்
# பஞ்சரத பவனி சிறப்பு மலர் - 07.04.2009

## நல்லை ஆதீன முதல்வரின் அருளாசிச் செய்தி



வண்ணை வைத்தீஸ்வரன் கோயிலில் இன்று தேர்த்திருவிழா. வழிபடும் அடியார்களின் வல்வினை போக்கி நல்லருள் புரிய சிவபெருமான் ஸ்ரீ சோமாஸ்கந்த மூர்த்தமாக இன்று அருட்காட்சி தரும் புண்ணிய நாளாகும்.

பஞ்சரதங்கள் பவனிவரும் இன்றைய காட்சி, பார்க்கப் பார்க்கப் பரவசமூட்டும், பக்திரசம் ததும்பும் அற்புதக் காட்சியாகும்.

பிள்ளையார், முருகன், சிவன், அம்மன், சண்டேஸ்வரர் எழுந்தருளி வருகின்ற கண்கொள்ளாக் காட்சியை இன்று வண்ணையிலே காணலாம். எல்லாம்வல்ல ஸ்ரீமத் வாலாம்பிகா சமேத ஸ்ரீ வைத்தீஸ்வரப் பெருமான் தீமைகளை அழித்து, அசுரர்களை ஒழித்து அடியார் பெருமக்கள் அமைதியுடன் மங்களகரமான மகிழ்ச்சியோடிணைந்த நல்வாழ்வு வாழத் திருவருள் புரிய வேண்டுமென்று நல்லைக் குருமணியின் பத்ம பதம் பணிந்து உளமாரப் பிராத்தித்து அருளாசி வழங்குகின்றோம்.

இனியாவது மண்ணில் சந்தோஷம் மலர்ந்து சுபிட்சம் முகிழ்க்க வேண்டுமென்று விரும்புகின்றோம்.

"என்றும் வேண்டும் இன்ப அன்பு"

ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள்,
இரண்டாவது குருமஹா சந்நிதானம்,
நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம், யாழ்ப்பாணம்.



## ஆலய மஹோற்சவ பிரதம குருவின் ஆசியுரை



ஈழமணித் திருநாட்டின் வட பகுதியில் யாழ்.மாநகரில் வண்ணையம்பதியில் அருளாட்சி செய்கின்ற ஸ்ரீமத் வாலாம்பிகா சமேத வைத்தீஸ்வர பெருமானின் மகோற்சவத்தின் இரதோற்சவம் இன்று நடைபெறுகின்றது.

மகோற்சவமானது ஆலயத்தில் நடைபெறும் நைமித்திய கிரியைகளில் மிகவும் சிறப்பான ஒன்றாகும். இம்மகோற்சவத்தின் அதிசிறப்பாக ரதோற்ச்வம் விளங்குகின்றது. இவ்ரதோற்சவத்தில் கலந்து வடம்பிடிக்கும் அடியார்கள் தமது பிறவிப்பிணியை நீக்கி வாழ்வில் உயர்வு பெறக்கூடிய உன்னத நிலையை அடைவார்கள்.

ஆகவே இப்பஞ்ச ரதப் பவனியைக் காணவரும் அடியார்களுக்கு எல்லாம் வல்ல ஸ்ரீமத் வாலாம்பிகா சமேத வைத்தீஸ்வரப் பெருமானின் திருவருட் கடாட்சம் கிடைக்கவேண்டும் என்று பிரார்த்தித்து ஆசி கூறி அமைகின்றேன்.

"இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க"

ஈசான சிவாச்சாரியார்
சிவப்பிரம்மஸ்ரீ சொ.இ.விக்கினேஸ்வரக் குருக்கள்,
மஹோற்சவ குருவும் ஆலயப் பிரதம குருவும்.

## அஞ்சலென அபயமளிக்கும் வைத்தீஸ்வரன் பஞ்சரதமேறிப் பவனி வருகிறான்

உலகெலாம் உணர்ந்து ஓதற்கரியவனாகிய சிவபெருமான், வழிபடும் அடியார்களின் துயர்போக்கி அருள்புரியவென்று அமர்ந்திருக்கும் அற்புத தலமான வண்ணை வைத்தீஸ்வரன் ஆலயத்தில் இன்று தேர்த்திருவிழா. ஸ்ரீமத் வாலாம்பிகா சமேத ஸ்ரீ வைத்தீஸ்வரன் சோமாஸ்கந்த மூர்த்தமாக ரதத்தில் எழுந்தருளி ஆரோகணிக்கும் அற்புதக் காட்சி கண்கொள்ளாக் காட்சியாகும்.

இந்த ஆலயம் மிகப்பழைமை வாய்ந்தது. ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பிரசங்கம் செய்த இவ்வாலயத்தைச் செட்டியார் பரம்பரையினர் நிர்வகித்து வருகின்றனர். இந்தியாவிலுள்ள புள்ளிருக்கு வேளூர் ஸ்தலம் தற்போது வைத்தீஸ்வரன் கோயில் என அழைக்கப்படுகின்றது. அந்த ஆலய அமைப்பிலேயே இங்கேயும் அமைக்கப்பட்டுள்ளது.

இங்குள்ள அம்பிகையைத் தையல்நாயகி என்றும் அழைப்பர். இன்று வீதியுலா வரும் பஞ்சரதங்களிலும் பிள்ளையார், முருகன், ஸ்ரீ சோமாஸ்கந்தர், தையல்நாயகி, சண்டேஸ்வரர் அமர்ந்து அருட்பவனி வருவர். அடியார்கள் அனைவரும் தேர்வடம் பிடித்திழுக்கப் பஞ்சரத பவனிவரும் அரிய காட்சி வேறெங்குமே காணமுடியாது.

வேத சிவாகம முறைப்படி கட்டப் பெற்ற இந்த வைத்தீஸ்வரன் கோயில் முன்பாக உயர்ந்த ராஜகோபுரம் கம்பீரமாகக் காட்சி தருகிறது.

இந்தியாவின் திருவாரூரிலிருந்து ஈழம் வந்த கோபாலச் செட்டியார் யாழ்ப்பாணத்திலே வணிகஞ் செய்து பெரும் புகழோடு வாழ்ந்து வந்தார். இவருடைய இல்லத்தில்கூழங்கைத் தம்பிரான் என்றொரு புலவர் தங்கியிருந்தார். அவர் சிறந்த அறிஞர். கோபாலச் செட்டியாருக்கு ஆண் குழந்தை பிறந்தபோது, "இக்குழந்தை பெரிய பெரிய காரியங்களைச் செய்யவே பிறந்திருக்கிறது. ஆகவே, வைத்திலிங்கம் என்று பெயரிடுக" என்று தம்பிரான் கூற பெற்றோரும் அவ்வண்ணமே பெயர்வைத்து வளர்த்து வரலாயினர்.

பின்பு இவர் வளர்ந்து பெரியவரானதும் வணிகஞ் செய்து செல்வந்தரானார். அவர் கூட இருந்த கூழங்கைத் தம்பிரான், "ஈழநாட்டில் ஒரு தலைசிறந்த சிவாலயத்தை அமைக்கவேண்டும்" எனக் கேட்க அவரும் தாய், தந்தையரின் அனுமதியோடு கோயில் அமைத்தார். 1787ஆம் ஆண்டு கூழங்கைத் தம்பிரான் அடிக்கல் நட ஆரம்பித்த திருப்பணி வேலைகள் மளமளவென்று நடந்து கோயில் உருவாகிற்று. 1790இல் சித்திரைத் திங்கள் வளர்பிறைப் புனர்பூசத் திருநாளில் கும்பாபிஷேகம் நடந்தது.

இந்த ஆலயத்தில் மூன்று திருவீதிகள் உள்ளன. புண்ணிய தீர்த்தக்கேணி சித்தாமிர்த புட்கரணியும் இங்கே நோய் தீர்க்கும் அருமருந்தாக விளங்குகிறது. ஸ்ரீமத் வாலாம்பிகா சமேத வைத்தீஸ்வரப் பெருமானுக்கு வருடாந்த மஹோற்சவமானது பங்குனி உத்ர நன்னாளைத் தீர்த்த நாளாகக் கொண்டு 19 நாள்கள் திருவிழா நடக்கின்றது.

எல்லாம்வல்ல வைத்தீஸ்வரப் பெருமான் இன்று திருத்தேரில் ஆரோகணித்து வருகின்ற அற்புதக் காட்சியைக் கண்டுகளிக்க பெரும் எண்ணிக்கையிலான அடியார்கள் இங்கே கூடிவிடுவார்கள். இதிலே ஒரு விசேடம் என்னவென்றால் அம்மன் தேரைப் பெண்களே இழுத்து வருவார்கள். கற்பூரச் சட்டி ஏந்தும் பெண்மணிகள் ஒருபுறம், அங்கப் பிரதட்சணம் செய்யும் ஆண்கள் தேரின் பின்புறம்., பஜனை பாடும் அன்பர்கள் கூட்டம் ஒருபுறம், அடியளிக்கும் பெண்கள் ஒருபுறமுமாக இன்றைய தேர்த்திருவிழா பக்திரசம் ததும்பும் பெருவிழாவாக நடைபெறுவது சிறப்பம்சமாகும்.

நாம்படும் வேதனைகளையும் துன்பங்களையும் துடைத்தொழித்து அருள்புரிய தேரேறி வரும் வைத்தீஸ்வரப் பெருமானின் பொற்கமலப் பாதம் பணிந்து, சிந்தித்து, வந்தித்துச், சேவித்து இன்றைய துயரங்களிலிருந்தும் விடுபட அவனருளாலே அவன்தாள் வணங்கி அவன் திருவருளையே நாடி நிற்போமாக.

சிவநெறிக் கலாநிதி இராசையா ஸ்ரீதரன்.

## எண்ணியதைத் தரவே எழுந்தருளி வண்ணைச் சிவன் தேரேறி வருகிறான்

பிட்டுக்கு மண்சுமந்த பெருமானை மனையாட்டி
கட்டுக்குள் கைகட்டி நின்றானை கணக்கின்றி
பிரம்படிகள் பெற்றானை பேசும்திரு வாசகத்தில்
கரம்காத்து வாழ்வானை தமிழ்காத்து ஆள்வானை
இடுகாட்டில் கூத்தாடி இரவெல்லாம் அலைவானை
இடும்பா வனத்தில் இறையாகிக் காப்பானை
முல்லை மலர்போல முத்தமிழைப் பூப்பானைத்
தில்லைப் பெருமன்றில் திருநடனம் செய்வானை
காங்கைத் தலையானைக் கருநீலம் உண்டானை
மங்கையவள் மீனாளின் மனத்தில் நிலைத்தானை
பற்றெல்லாம் விட்டுப் பரதேசி ஆனானை
கற்றைச் சடையானைக் கைலாய மலையானை
சுடலைப் பொடியானைச் சுடுகாட்டில் கிடப்பானை
கடலை நிகர்த்த கருணை மனத்தானை
காளைக் கொடியானை கயற்கண்ணி அம்மையை
ஆளும் நாயகனை ஆடலிலே வல்லானை
ஆனைத்தோல் புலித்தோலால் அங்கம் மறைத்தானை
வானுயர நின்றானை வண்டமிழைக் காப்பானை
வில்லடியும் கல்லடியும் சொல்லடியும் விருப்பமுடன்
நல்லடியாய்ப் பெற்றானை நச்சரவம் பூண்டானை
நிலவுத் தலையானை நீள்முடிகள் கலையானை
வண்ணைச் சிவனை வாயாரப்பாடிப் புகழ்வானை
எண்ணியதை ஈய்ந்தருள தேரேறி வருகின்றான்.

மதுரகவி காரை.எம்.பி. அருளானந்தம்.

## போரோயச் செய்தே நிம்மதியைத் தாருமையா!

வண்ணை வைத்திஸ்வரனே வாலாம்பிகை நாயகரே
வரமருளவே இன்று தேரேறி வாருமையா
கண்ணைப் பறிக்கும் அழகு சோமாஸ்கந்தராக நீர்
கருணை மழை பொழிய வீதி வலம் வாரீர்!
பெண்ணை இடப்பாகம் வைத்த பெருமானே சிவனே!
போரோயச் செய்தே நிம்மதியைத் தாருமையா!
விண்ணைத் தொடும் கோபுரக் கோயிலின் வாசலிலே
கூவியுமை அழைக்கின்றோம் அமைதியைத் தாரீர்!

வாலாம்பிகை நாயகரே வண்ணை வைத்திஸ்வரரே
வணங்கியே நிற்கின்றோம் தேரேறி வாரீர்!
காலாலுன் கோயில் கடிதே வலம் வந்திட்டோம்
காட்சி தந்தெம்மை இரட்சிக்க வேண்டும்.
ஆலகாலமுண்ட நீல கண்டனே அழகுத் தேரேறியே
அவலத்தை அழித்து அமைதியைத் தாரீர்!
சூலாயுதம் கொண்டே துஷ்டர்களைத் துவம்சம் செய்து
நிம்மதியாய் நாம் வாழத் திருவருளைத் தாரீர்!

சிவபக்தன்
திருவரன்.


## விழாச் சிறப்புற வாழ்த்துவோர்:

Tharani Arts & Printers
Manohara Theatre View
541(319), K.K.S. Road,
Jaffna.

ரமணன்
கட்டடப் பொருள்கள்
விற்பனை நிலையம்
525, 528, கே.கே.எஸ் வீதி,
யாழ்ப்பாணம்.
T.P.: 0777 176068, 021 222 9296

மேனகா
பிறின்டேர்ஸ்
342,கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.
452,கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

மருதா
பொலிமர் றபர் சீல்
தொழிற்சாலை
452, கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

கந்தன் களஞ்சியம்
பல்பொருள் வாணிபம்
கே.கே.எஸ் வீதி,
யாழ்ப்பாணம்.

வஜிதா
மோட்டார் சைக்கிள் திருத்தகமும் சேவிஸ் சென்ரரும்
பெயின்ரிங் அன் பிளாஸ்ரிக்
இல.512, கே.கே.எஸ். வீதி,
மனோகராச் சந்தி, யாழ்ப்பாணம்.

P.S.B.கொமினிக்கேசன்
தொலைத்தொடர்பு சேவை, போட்டோப் பிரதி
337, கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பங்குனி மாதம் 31 ஆம் நாள் (13.4.2009) திங்கட்கிழமை இரவு மணி 12.46 (46.48 நாழிகை) அளவில் கேட்டை நட்சத்திரம், விருச்சிக ராசியில் மகர லக்கினத்தில் சூரியன் மேஷராசி, அஸ்வினி நட்சத்திரத்தில் பிரவேசிக்கும் நேரம் 'விரோதி' ஆண்டு பிறக்கிறது.

தமிழ் ஆண்டுகள் அறுபதில் 23 ஆவது ஆண்டாக (2+3=5) புதனுடன் எண் ஆதிக்கம் 5 இல் பிறந்ததும், ஜோதிட ஆகமப்படி புதனுடைய நட்சத்திரம் கேட்டையில் பிறந்ததும் முக்கியமாக கவனத்தில் கொள்ள வேண்டியது.

சுருக்கமாகச் சொன்னால் 'விரோதி' ஆண்டை, காத்தல் கடவுளான பரந்தாமன் ஆண்டு என்றால் மிகையாகாது. பிறகு என்ன கவலை? நாம் விரோதி ஆண்டு பிறப்பைக் கொண்டாட வேண்டிய நாள் 14.04.2009 சித்திரை 1-ஆம் நாள் செவ்வாய்க்கிழமையே. அன்று 'சர்வதாரி'க்கு விடைகொடுத்து, 'விரோதி'யை வணங்கி வரவேற்போமாக!

'நீடு விரோதி நிலத்தின் மாடி
மிகுதிமேடு காடெல்லாம்
விளைவுண்டாம்

மேற்சொன்ன ஆண்டு வெண்பா என்ன சொல்கிறது? உணவு தானிய உற்பத்தி

| | | | |
|---|---|---|---|
| சுக்கிரன் | புதன் சூரியன் | | |
| செவ்வாய் | 'விரோதி ஆண்டு கிரக நிலை' | | கேது |
| ராகு குரு ல | | | சனி |
| | சந்திரன் | | |

அதிகரிப்பும், செழிப்பும், சிறப்பும் இருந்தாலும்... நாட்டை ஆளும் தலைவர்களுக்கு ஆபத்தும், புதுப் புது நோய்களின் தாக்கத்தால் உலகில் அழிவும், இயற்கை சீற்றங்களால் இன்னல்களும் ஏற்படும்.

காத்தல் கடவுளின் ஆண்டாக 'விரோதி' ஒளிர இருப்பதாக நினைத்து, இதை ஒரு காப்புரிமை பெற்ற ஆண்டாகவே கருதலாம். இதுவே பொதுவிதி.

அடுத்து, சிறப்பு விதிப்படி தனிநபர் வாழ்க்கையிலே அவரவர் ராசிக்கு ஆண்டுப் பலன்கள் எப்படி நடக்கும் என்பதை இனி காண்போம்.

நான்கு பெரிய கிரகங்கள் இடப்பெயர்ச்சி அடைவது இந்த ஆண்டில்தான் என்பது குறிப்பிடத்தக்கது.

01.05.2009 சித்திரை 18-இல் குரு கும்பம் (அதிகாரம்)

30.07.2009 ஆடி 14-இல் குரு மகரம் (அதிகாரம்)

09.09.2009 ஆவணி 24-இல் சனி (கன்னி)

17.11.2009 கார்த்திகை 1-இல் ராகு, கேது (தனுசு, மிதுனம்)

19.12.2009 மார்கழி 4- இல் (கும்பம்).

* * *

12 ராசிகளுக்குமான பலன்கள்

**தொட்டது துலங்கும்! வைத்தது விளங்கும்!!**

இந்த ஆண்டு உங்களுக்கு ஒரு திருப்பமான ஆண்டு, விருப்பமான ஆண்டு என்று சொன்னால் அது மிகையாகாது. கடந்த காலத்தில் பற்பல சோதனைகளையும், வேதனைகளையும் அனுபவித்த நீங்கள் ஒரு சாதனையாளராக மாறப்போகிறீர்கள் என்பது மட்டும் உண்மை.




நான்காமிடத்து கேது மூன்றாமிடம் ஏறுவதும், ஐந்தாமிடத்து சனி ஆறாமிடம் ஏறுவதும், பத்தாமிடத்து ராகுவும், குருவும் ஒன்பதாம் இடம், பதினொன்றாமிடம் ஏறுவதும், உங்கள் வாழ்க்கையில் ஓர் அபூர்வ நிகழ்வாக கருதவேண்டி இருக்கிறது. வெற்றிப் புன்னகையோடு நான்கு கிரகங்களும் அணிவகுத்து நிற்கும்.

நலிந்த தொழில் தழைக்கப்போகிறது. ஒரு சிலருக்கு புதியதிட்டங்களால் புதிய தொழில் ஆரம்பமாகப் போகிறது. தொழில் துறைக்குத் தேவையான மூலதனங்ஙளுக்கு வங்கிகள் நிதிநிறுவனங்கள் ஓடோடி வந்து உதவிக்கரம் நீட்டப் போகின்றன. பொருளாதார வீழ்ச்சியில் அமெரிக்காவே அல்லாடிக்கொண்டு இருந்தாலும் உங்கள் தொழில் வெற்றிநடை போட்டுக் கொண்டிருக்கும் என்பதில் ஐயமில்லை.

**வீடு கட்டும் யோகம்**

பொருளாதார வீழ்ச்சியில் பெரிய தொழில் நிறுவனங்கள் ஆள்குறைப்புச் செய்ததில் பணிநீக்கம் செய்யப்பட்டவர்களானாலும், புதிதாகவேலைக்குக் காத்திருக்கும் அனைவருக்கும் புத்துயிர் அளிப்பதுபோல் கிரகங்களின் கைகள் ஓங்கி நிற்பதால் நிலைமை வெகுவிரைவில் மாறும் என்பதால் கவலைப்படத் தேவையில்லை.

நாலாமிடத்துக் கேதுவால் வீடு-மனை, வாகனம், கல்வி, தூயசுகம் அனைத்திலும் குளறுபடி கண்ட நீங்கள் புதிய வீடு கட்டப்.போகிறீர்கள். பெருமளவில் வாகன யோகத்தை அடையப் போகிறீர்கள். மாணவ-மாணவிகள் படிப்பில் இருந்த முட்டுக்கட்டை விலகி முன்னேற்றமான சூழ்நிலையைக் காணப் போகிறீர்கள்.




பூர்வீகத்தில் ஏற்பட்ட சிக்கல்கள் தீர்ந்து, பிள்ளைகளால் ஏற்பட்ட கவலைகள் நீங்கி நீதிமன்ற வழக்குகளிலே நல்ல தீர்ப்பைப் பெறப் போகிறீர்கள், பிள்ளைகளின் திருமணங்கள் தடல்புடலாக நடைபெறப்போகின்றன. திடீர் தனவரவு! பொன்னாபரணச் சேர்க்கை, புத்தாடை மகிழ்ச்சிக்குப் பஞ்சம் இராது. வங்கிக் கணக்குப் புத்தகத்தில் பணம் சேரச் சேர சுகபோகங்களுக்கு குறைவு இராது.

**தொட்டது துலங்கும்**

கலை உலக சந்தர்ப்பங்களுக்காக நீண்ட காலம் அலைந்த உங்களுக்கு தகுந்த - உயர்ந்த, நினைத்த சந்தர்ப்பங்கள் கூடி வரும். கட்டடம் இயந்திரத் தொழில், எண்ணெய்த்தொழில், வாகனத் தொழில், ஏற்றுமதி, இறக்குமதித் தொழில் எல்லாமே சிறக்கும். அரசியல் வாதிகள், சிறு சிறு வியாபாரிகள், தொழிலாளர்கள் அனைவருக்கும் இது ஏற்றமான காலம் என்றே சொல்ல வேண்டும். இன்னும் தசாபுத்தி அனுகூலமான உங்களுக்கு யோகம் சிறக்கும் என்பதால் இந்த ஆண்டு சாதனையாளர் பட்டியலில் முதலிடம் உங்களுக்குத்தான். தொட்டது துலங்கும் - வைத்தது விளங்கும்.

கணித்தவர் சோதிட ஆசான்
பாரதிமோகன் (தமிழ்நாடு)

* * *

**முதலீடு வரும்! முன்னேற்றம் தரும்!!**

வெற்றி முகத்தோடு வலம் வந்து கொண்டிருக்கும் உங்களுக்கு இனிமை நிறைந்த ஆண்டாகவே இது இருக்கும் என்பதில் சந்தேகமே இல்லை. இப்போது இருக்கும் இயல்பு நிலைக்கு ஏற்றம் வருமேயொழிய மாற்றம் வராது.




கணவன்-மனைவி உறவு சிறப்பாக இருக்கும். பிள்ளைகளின் முன்னேற்றம் பெருமகிழ்ச்சி அளிக்கும் சகோதர மேன்மை அல்லது ஒத்தாசை, உதவி சந்தோசத்தில் ஆழ்த்தும். உடன் பிறந்தவர்களுக்கோ பிள்ளைகளுக்கோ திருமண நிகழ்வு கூடிவரும். நீண்டநாள் புத்திரபாக்கியத்துக்குக் காத்திருந்தோருக்கு குழந்தைப்பேறு உண்டாகும். வீடு மனை வாகன சீர்திருத்தங்கள், சொத்து வாங்குதல் போன்ற உயர்ந்த பலன்கள் நடைபெற இந்த ஆண்டு கைகொடுக்கும்.

**வெளிநாட்டு யோகம்**

மாற்று மதத்தினர் அல்லது வேற்று மொழியினரின் உதவிகள் உங்களைத் தேடிவரும். வெளிநாடுகளில் வாழும் அன்பர்களுக்கு அல்லது வெளிநாடு செல்ல நினைக்கும் அன்பர்களுக்கு நல்ல காலம் என்றே சொல்ல வேண்டும். உலகப் பொருளாதார வீழ்ச்சியைப் பற்றி நீங்கள் கவலைப்படவேண்டிய அவசியமே இருக்காது. இங்கே உள்ள தொழில் நிறுவனங்கள் மிகவும் இலாபகரமாகவும் விறுவிறுப்பாகவும் ஓடிக்கொண்டிருக்கும். நிறுவனப் பணியாளர்கள் நல்ல ஒத்துழைப்பையும் ஊக்கத்தையும் உங்களுக்கு கொடுக்கத் தவறமாட்டார்கள்.

நீங்கள் அரசாங்க அதிகாரிகளாக அல்லது தனியார் நிறுவன ஊழியர்களக இருந்தால் இந்த ஆண்டு ஒரு மகிழச்சியான ஆண்டு என்றே சொல்ல வேண்டும். வங்கிகளும் நிதிநிறுவனங்களும் உங்களுக்கு தாராள நிதிஉதவி செய்ய கரம் கொடுக்கும். கடந்த ஆறு மாதத்திலிருந்தே உங்கள் ஆசைக் கனவுகள் ஒவ்வொன்றும் நிறைவேறிக் கொண்டு இருக்கின்றன என்று சொல்ல வேண்டும். கலைத்தொழில், ஏற்றுமதி இறக்குமதி தொழில், கட்டடத்தொழில் என செய்யும் தொழில்கள் அனைத்தும் உங்களுக்கு கைகொடுக்கும்.

**பொருளாதார உயர்வு**

கணனி நிறுவனப் பயிற்சிப் பள்ளிக்கும் இது உயர்ந்த [illegible] என்பதால் பயன் [illegible]ங்கள். மாணவர்கள் நல்ல மதிப்பெண்களைப் பெற்று தேர்வில வெற்றி பெறுவர். கலைஞர்கள் எழுத்தாளர்கள், அனைவருக்கும் இது ஏற்றமான ஆண்டு என்றே சொல்ல வேண்டும்.

அரசியல் வாதிகளுக்கு இது ஓர் அருமையான காலம். தேர்தலில் போட்டி வாய்ப்பு வந்தாலும் வெற்றி பெறுவர். சிறு தொழில் வியாபாரிகள் தொழிலாளர்கள்கூட வங்கிக்கணக்கு தொடங்கும் காலம் என்பதால் இது பொருளாதார உயர்வுக்கு ஏற்ற காலம் என்றே கொள்ள வேண்டும்.

இருந்தாலும் 01.05.2009இல் குரு ஒன்றைவிட்டு பத்தாமிடம் செல்வதாலும், 17.11.2009 இல் கேது இரண்டாம் இடமும் ராகு எட்டாமிடமும் வருவதாலும் இப்போதுள்ள இயல்பு நிலையில் கொஞ்சம் தொய்வு, பின்னடைவு ஏற்பட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. செய்தொழிலில் பணவரவு தாமதப்படுத்தலும், பணி செய்யும் இடத்தில் குழப்பங்களும் வரலாம் என்பதால் எல்லா இடங்களிலும் கொஞ்சம் எச்சரிக்கையுடன் செயல்படுவது நல்லது.

**பூர்வீக சொத்து**

09.09.2009 இல் நாலாமிடத்துச் சனி ஐந்தாமிடம் செல்வதால் கண்டச்சனி கழிகிறதே என சந்தோஷப்பட்டுக் கொண்டாலும் ஐந்தாமிடத்துச்சனி அதற்குதப்பித்தானே என்று நினைக்கும்போது மனம் வேதனை அடையத்தான் செய்யும்.

ஐந்தாமிடம் பூர்வீகம், புத்திரம் பூர்வ புண்ணியம் என்பதால் பூர்வீக, சொத்து பிரச்சினை, பிள்ளைகளால் பல பிரச்சினைகள், கௌரவத்துக்குப் பங்கம் வரும் நிகழ்வுகள் போன்ற தீய பலன்கள் நடைபெறலாம். தனம், வாக்கு, குடும்பஸ்தாபனமேறிய குரு அந்த பாவத்தை கெடுக்கத்தானே பார்ப்பார். எட்டாமிடம் ஏறிய ராகு வழக்கு, வம்பு மனக்கேடு, விபத்து போன்ற தீய பலன்களைத்தானே கொடுப்பார்.

ஆண்டின் முதல் பகுதியில் நீங்கள் கண்ட ஒவ்வொரு செயல்பாடுகளிலும் களங்கம் ஏற்படுவதுபோல் ஆண்டின் இரண்டாம் பகுதி இருக்கிறது. எனவே பரிகாரம் பிரார்த்தனை வழிபாடு நல்லது.

* * *

**ஆசைகள் நிறைவேறும்! துன்பங்கள் விலகி ஓடும்!!**

உங்களது கடந்தகால துன்பங்களுக்கெல்லாம் 'விரோதி'யான ஆண்டாக அல்லவா வந்திருக்கிறது இந்தப் புதிய ஆண்டு. செயல்பாடுகளில் எல்லாம் ஆமைபோல அசைந்து கொண்டிருந்த நீங்கள் இனி யானை போல அல்லவா நடைபோடப் போகிறீர்கள்.




பதினொன்றாமிடத்தில் உச்சம் பெறும் சூரியன் 01.05.2009 இல் ஒன்பதில் வரும் குரு இவை இரண்டும் போதுமே உங்கள் வாழ்வில் விளக்கேற்றி வைக்க. நலிந்து உயிரோட்டமில்லாத தொழில் நிறுவனம் மீண்டும் தொடர நிதி தாராளமாகக் கிடைக்கப்போகிறது. புது வேகத்தில் அல்லவா தொழில் இயங்கப் போகிறது. உப்புச் சப்பு இல்லாத உத்தியோக வாழ்க்கையில் பதவி உயர்வு, ஊதிய உயர்வு, மேலிடத் தில் பாராட்டுக்கள் எல்லாம் உங்களை திக்குமுக்காடச் செய்யப் போகின்றன.

**ஆசைகள் நிறைவேறும்**

கடந்தகால கணவன், மனைவி கசமுசா வாழ்க்கை கரும்பாக இனிக்கப்போகிறது. பிள்ளைகளின் செயல்பாடுகள் உங்களைப் பேரின்பத்தில் ஆழ்த்தப் போகின்றன. கடல் கடந்த செய்திகள் அல்லது கடல் கடக்கும் முயற்சிகள் எல்லாம் இப்போது கைகூடி வரப்போகின்றன. பிள்ளைகளின் திருமணம் அல்லது பிள்ளைப்பேறு அடைதல் போன்ற நீண்டகால ஆசைகள் இப்போது நிறைவேறப் போகின்றன.

தொழில் உயர்ந்தால், பொருளாதாரம் பெருகும் பொருளாதாரம் பெருகினால் திட்டங்கள் செயல்படும். சொத்து சேரும் அல்லது வாங்கிப்போட்டிருந்த நிலத்தில் அலங்காரமான வீடு கட்டுவீர்கள். பெருமளவில் வாகனம், பொன்னாபரண சேர்க்கை எல்லாமே ஒன்றன் பின் ஒன்றாக வந்து சேரும்.

மூன்றாமிடத்தில் சனி உங்களுக்கு [illegible]போல் நாலாமிடம் செல்லும் சனியும் துணைபுரிய தவறமாட்டார். நாலாமிடத்தில் சனியும் கொஞ்சக்காலம் குரு பார்வையில் இருப்பதால் கவலை இல்லை.

**புகழ் பெருகும்**

ராசியில் அமரும் கேது ஆன்மீக பலத்தை அதிகரிக்க செய்வார். பூஜை புனஸ்காரம், கோவில், குளம் என்று அடிக்கடி சுற்றுலா செல்லத் தூண்டுவார். இரக்கம் என்பது உங்கள் பிறவிச் சொத்து என்பதால் தான, தர்ம காரியங்களில் ஈடுபாடு அதிகரிக்கும். ஏழாமிடத்துக் கேது களத்திரத்தை கெடுக்கமாட்டார். களத்திர சுகத்தை வாரிவழங்குவார்.

இந்த ராசியில் பிறந்தவர்கள் பெரும்பாலானோர் ஆசிரியர்தொழில், எழுத்தாளர், ஜோதிடர், நீதிமன்றங்களில் வாதிடும் வழக்கறிஞர்கள், சிற்றுண்டி பேரூண்டி நிறுவனத்தார், அரிசிமளிகை வியாபாரிகள், அச்சுத்தொழில் புத்தகம் பத்திரிகை போன்ற தொழில் செய்வோர் என்றால் அதுமிகையாகாது, கப்பல், விமானத்துறையில் இருப்போரும் இந்த ராசிக்காரராகவே இருப்பர்.

விரோதி ஆண்டு புதனின் ஆதிக்க ஆண்டாக இருப்பதால் மேற்சொன்ன தொழில் செய்வோர் பயன் அடைவார்கள்- புகழ் அடைவார்கள். மாணவர்களுக்குக் கல்வி பற்றிச் சொல்ல வேண்டியதில்லை. கலைஞர்கள், எழுத்தாளர்களை நல்ல வாய்ப்புக்கள் தேடி வரும். அரசியல்வாதிகளுக்கு பேச்சுத்திறனால் புகழ் உயரும்.

* * *

**உற்சாகம் கூடும்! செல்வாக்கு பெருகும்!!**

இந்த ஆண்டு உங்களுக்கு சர்வதாரி ஆண்டைவிட எத்தனை எத்தனை யோகங்களை வாரி வழங்கப்போகிறது என்பதை இனிப் பார்க்கப் போகின்றீர்கள். கடந்த காலத்தில் ஏழரைச்சனியால் பாதிக்கப்பட்ட நீங்கள் சமீப காலமாகத்தான் விழித்துப் பார்க்க ஆரம்பித்தீர்கள். இனி உங்கள் பயணம் வெற்றிப் பயணமாக அமைய கிரகங்கள் போட்டி போட்டுக் கொண்டு நிற்கின்றன என்றால் அது மிகையாகாது.




செய்யும் தொழில் சீர்படுதல் அல்லது புதிய திட்டங்கள் உருவாகச் செயற்படுதல், பழைய வேலை வாய்ப்பில் முன்னேற்றமான சூழ்நிலை அல்லது இழந்த வேலையை மீண்டும் பெறுதல், ஏற்றுமதி, இறக்குமதி தொழிலில் மிகுந்த இலாபம் காணுதல், காவல்துறையில் பணிபுரியும் அதிகாரிகளுக்கு பதவி உயர்வு, ஊதிய உயர்வு, அரசாங்கத்தால் ஏகப்பட்டவை கிடைக்கும். உலகப்பொருளாதாரம் வீழ்கிறதோ அல்லது வாழ்கிறதோ உங்களுக்கு கவலை இல்லை.

**உற்சாகம்**

கணவன்-மனைவி இடையே ஒற்றுமை நிலவும். பிள்ளைகளின் முன்னேற்றத்தில் இருந்த கவலைகள் மாறி இப்போது அவர்களின் செயற்பாடுகளால் உற்சாகமடையப் போகிறீர்கள். இப்போது உங்கள் பொருளாதாரம் உயரப்போகிறது. பிள்ளைகளுக்குத் திருமண நிகழ்ச்சிகள் களைகட்டி நிற்கப்போகின்றன. கொஞ்சக் காலமாக வாங்கியே பழக்கப்பட்ட நீங்கள் இப்போது வாரி வழங்கப் போகிறீர்கள்.

ராசியில் அமர்ந்த கேதுவும், ஏழில் அமர்ந்த ராகுவும் குருவும் பாதத்தில் அமர்ந்திருக்கும் சனியின் யோகாம்சத்தில் இருப்பதால் ஆன்மீகஈடுபாடு, பொது நலச்சேவையில் நாட்டம் அதிகரிக்கும். மக்கள் சேவைக்கான கடகராசியில் பிறந்த நீங்கள் இனி சேவைபாதி, தேவைபாதி என்றல்லவா வாழப்போகிறீர்கள். விரோதி ஆண்டின் நான்கு கிரகங்களின் இடப்பெயர்ச்சி மேலே சொன்ன புகழ்ச்சிக்கு இலக்கணம் வகுக்கப் போகிறது என்பது மட்டும் உண்மை.

**அமர்க்களம்**

09.09.2009 இல் இரண்டாமிடத்துச் சனி மூன்றாமிடம் போவதும், 17.11.2009 இல் ராகு, கேது ஆறாம் இடத்துக்கும், பன்னிரண்டாம் இடத்துக்கும் நகர்வதும் 01.05.2009இல் குரு கும்பத்துக்கு பெயர்வது நலமே. மூன்று மாத இடைவெளிக்குப் பிறகு திரும்ப உங்களுக்கு ஏழாமிட குருவாகவே அமர்வதும் உங்களுக்கு அமர்க்களமான எதிர்காலத்துக்கு அஸ்திவாரம் போடப் போகின்றார் என்றே தோன்றுகின்றது. ஆண்டின் அரைப்பகுதிக்கு மேல் மிகவும் வேலை நிறைந்தவராகவே காணப்படப் போகிறீர்கள். வேகமான தொழில் முன்னேற்றம், உத்தியோகத்தில் உயர்வு, அலுவலகத்தில் தலைமைப் பொறுப்பு, வீடு, மனை, வாகன, சீர்திருத்தங்கள், கடல் கடந்த பிரயாணங்கள், கல்யாண விருந்துகள், கோவில் சீர்திருத்தங்கள் எல்லாமே மேலோங்கும் காலம் என்றால் அது மிகையாகாது.

மாணவ, மாணவிகள் படிப்பிலே தூள்பறத்துவர். கலைஞர்கள் ஏற்றம் பெறுவர். அரசியல் வாதிகள் கொடிகட்டிப்பறப்பர். தொழிலாளிகள் வருமானத்தை பெருக்கிக் கொள்வர்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுன்னாகம் தாழையடி ஸ்ரீ ஹரிஹர புத்திர ஐயனார் தேவஸ்தான

# தேர் உற்சவ சிறப்பு மலர் - 07.04.2009

## மகோர்சவ குருவின் ஆசிச்செய்தி



அருள்மிகு சுன்னாகம் தாழையடி ஸ்ரீ அரிஹர புத்திர ஐயனார் ஆலய தேர்த்திருவிழாக் காட்சி இன்றைய தினம் நடைபெறவுள்ளது. இது அனைவருக்கும் அருள்பாலிக்கும் அருட் தீட்சை ஆகும். வருடந்தோறும் நடைபெறும் மஹோற்சவத்தில் பெருந்திரளான அடியவர்கள் வந்து வழிபட்டு அருள் பெறும் இவ்வாலயம் மிகப் பூர்வீக வரலாற்றுச் சிறப்புடைய பெருமை உடையதாகும். தாழை மரத்தைத் தலவிருட்சமாகக் கொண்டுள்ள இவ்வாலயம் வயல் சூழ்ந்த செழிப்பு மிக்க பகுதியில் அமைந்திருப்பது சிறப்புடையதாகும்.

இவ்வாலய மஹோற்சவ காலத்தில் வழிபடும் அடியவர்கள், ஆலய தர்மகர்த்தாக்கள், ஆலய பரிபாலன சபையினர், உபயகாரர்கள், தொண்டர்சபையினர், அன்னதானம் முதலியவற்றை மேற்கொள்ளும் அன் பர்கள் அனைவரதும் ஒன்றிணைந்த பங்களிப்பால் சிறப்பாக நடைபெறுவது மகிழ்ச்சிக்குரியதாகும். அனைவரும் வந்து ஐயனைத் தரிசித்து உய்வீர்க ளாக எனக் கேட்டு விழா மூலம் அனைவருக்கும் அனைத்தும் கிடைக்க ஆசீர்வதிக்கிறோம். சுபம்.

சிவாகம கலாநிதி, கிரியாக்கிரமஜோதி, வாக்சவாரிதி, சகலாகமசங்கிரகர் முத்தமிழ்க் குருமணி
சிவஸ்ரீ நா.சர்வேஸ்வரக் குருக்கள், சிவஸ்ரீ ச.ஸ்ரீகாந்தக்குருக்கள்,
ஸ்ரீ கதிரமலைச் சிவன் தேவஸ்தானம்.

## ஆதீனகர்த்தாவின் ஆசிச்செய்தி





சுன்னாகம் தாழையடி ஐயனார் ஆலயம் வடபகுதியில் பெருமையும் வரலாற்றுச் சிறப்பும் மிக்க ஆலயங்களில் ஒன்றாகும். இன்று இந்த ஆலயத்தின் தேர்த் திருவிழா நன்நாளாகும். இதில் பங்கேற்கும் அனைவருக்கும் ஆலய பரிபாலன சபையினருக்கும் தொண்டர்களுக்கும் அடியவர்களுக்கும் ஆலய பரம்பரை பூசகர்களும் தர்மகர்த்தாக்களும் ஆகிய நாங்கள் வாழ்த்தி ஆசீர் வதிப்பதில் பெருமகிழ்ச்சி அடைகின்றோம். அனைவரும் வந்து ஐயனைத் தரிசித்து அருள்பெற்று உய்யுமாறும் ஆலயத் திருப்பணிகளுக்கு உதவுமாறும் அன்புடன் வேண்டுகின்றோம்.

ஆதீனகர்த்தாவும் பூசகரும்
சீ.ஐ.கந்தசாமி, பெ.வாமதேவன்.

## செஞ்சொற் செல்வரின் ஆசியுரை



சுன்னாகம் தாழையடி திருநகரில் திருவருள் பாலிக்கும் பெருந் தலம் ஐயனார் திருக்கோயில் என்றால் மிகையாகாது. தொன்மை மிக்க பண்பாட்டுப் பாரம்பரியம் பேணப்படுகின்ற அற்புத தலம். இயற்கை எழில் மிக்க வயல் சூழ்ந்த பூமியில் இத்தலம் காட்சியளிக்கிறது. இத்திருத்தலத்தில் நடைபெறும் நித்திய பூசை மரபு தனித்துவமானது. சனிக்கிழமை தோறும் பலநூறு அடியவர்களின் வயிற்றுப் பசி போக்கும் ஐயப்பனின் திருவருளை வியக்காதவர்களில்லை. இத் திருத்தலம் சமய பிரசங்க மரபை வளர்த்தமை மறக்க முடியாது. சிவத்தமிழ்ச் செல்வி, கம்பவாரிதி இ.ஜெயராஜ், அடியேன் பிரசங்க மரபில் பிரகாசிப்பதற்கு இத்திருத்தலம் தந்த வாய்ப்புக்கள் அதிகம். இப் புனித தலத்தின் உற்சவகாலம் பல ஊர் மக்களையும் புனிதப்படுத்தும் காலம் எனலாம். பல ஆயிரம் அடியவர்கள் புடைசூழ ஐயனார் தேர் ஏறி வரும் திருக்காட்சி வர்ணிக்க முடியாதது. பல்வேறு திருப்பணிகள் நிறைவேற்றப்பட்ட நிலையில் இத் திருத்தலம் மிகவும் புனிதமாகப் பேணப்படுகின்றது. புதுமை நிறைந்த ஐயனார் உற்சவத்தோடு இம்மண் விடியவேண்டுமெனப் பிரார்த்தித்து ஆலய அறங்காவலர்கள் அடியவர்கள் அனைவரையும் வாழ்த்தி ஆசி கூறி அமைகின்றேன்.

ஆறு.திருமுருகன், செஞ்சொற்செல்வர்.


### விழாச் சிறப்புற வாழ்த்துவோர்:


சிறந்த அழகுசாதன பொருள்களைத் தெரிவு செய்ய
**விஷ்ணுகரன்ஸ் அழகுமாடம்**
40, டாக்டர் சுப்பிரமணியம் வீதி,
சுன்னாகம்.

**ராஜா மருந்துக்கடை**
கே.கே.எஸ். றோட், சுன்னாகம்

உள்ளூர் வெளியூர் தொலைத்தொடர்பு, பக்ஸ் மற்றும் போட்டோ பிரதிகள்
சிற்றுண்டி வகைகள், மிக்சர் வகைகள் மொத்தமாகவும்
சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள
**சன்ராஜ் கொம்ளெக்ஸ்**
கே.கே.எஸ். றோட், சுன்னாகம்
021 222 5388, 060 221 2750, 060 221 2551

சகலவகையான கைத்தொலைபேசிகள், Radio, T.V. டெக் மற்றும்
இலத்திரனியல் பொருள்கள் விற்பனையும், திருத்துதலும்
**ஹைய் ரெக் எலக்ரோனிக்ஸ் & போன் சொப்**
கே.கே.எஸ். றோட், சுன்னாகம்

**டயமன் ஸ்ரோர்ஸ்**
Dr.சுப்பிரமணியம் வீதி, சுன்னாகம்.

## சுன்னாகம் தாழையடி ஐயனார் ஆலய வரலாறு

சுன்னாகம் என்னும் பெயர் சுல் + நாகம் என விரியும். சுல் என்றால் வெள்ளி, நாகம் என்றால் மலை. எனவே சுன்னாகம் என்பது வெள்ளிமலை எனப்பொருள்படும்.

அந்த நகரத்தின் கீழைத்திசையில் காவற்தெய்வமான ஐயனார் இருந்திருக்கலாம் என்று ஊகிக்கப்படுகிறது. ஐரோப்பியர் தமது கிறிஸ்தவ சமயத்தைப் பரப்ப வந்தபோது இடிக்கப்பட்ட சைவாலயங்களில் இதுவும் அழிந்திருக்கலாம்.

19ஆம் நூற்றாண்டில் காடுகளை வெட்டித் துப்புரவு செய்து கழனியாக்க முற்பட்டபோது ஐயனார் விக்கிரகம் கண்டெடுக்கப்பட்டது. இவ்விக்கிரகம் 'கன்னி' என்னும் பெண்மணியின் வயலிலேயே கிடைத்தது. ''அபயம் அளிக்க வந்த ஐயனார்'' சுன்னையம்பதியையும் அயலூர்களையும் தனது அருளாட்சியால் கவர்ந்து கருணை பொழிந்து காத்து வருகிறார்.

வயலில் தோன்றிய ஐயனாருக்கு வயலோரமாக மருத மரமடியிலே மேற்றிசையாக தென்னோலையால் சிறுகோயில் அமைத்துப் பூசைசெய்து தொழுது வந்தாள் 'கன்னி'. பின்னர் கன்னியின்கணவர் பூசைசெய்து 'பெரிய பூசாரியார்' எனப் பெயரும் பெற்றார்.

ஐயனார் கோயில் மருதநிலத்தில் அமைந்திருப்பது சிறப்பாகும். வளம் நிறைந்த மருத நிலத்து மக்களுக்குத் தைபிறந்தால் கொண்டாட்டம்தான் நெற்செய்கையால் வளம் பெருகும், பொலி பொலியும், கோயில், மடம், குருகுலம் அறநிலையங்கள் யாவும் சிறப்பாக நடைபெறும்.

ஐயனார்மேல் கொண்ட மிகுந்த பக்தியால் காணிக்கைகள், பொங்கல், மடை, நேர்த்திக்கடன் எனப் பெருகின. அடியார்கள் கூட்டம் அலை மோதியது. சித்தர்களும் யோகிகளும் வரத் தொடங்கினர்.

'பெரிய பூசாரியார்' காலத்திலேயே கற்கோயில் கட்டுவதற்கான வேலைகள் ஆரம்பிக்கப்பட்டன.1907 ஆம் ஆண்டு ஆனித்திங்கள் 20ஆம் நாள் 'பூதன்' என்னும் பெருந்தகையின் பண உதவியோடு திருப்பணி ஆரம்பிக்கப்பட்டது. அதனை ஆலய கருவறைத் தென்புறச் சுவரிலுள்ள கல்லேட்டில் காணக்கூடியதாகவுள்ளது. முதன்முதலில் கும்பாபிஷேகம் எப்பொழுது யாரால் நிகழ்த்தப்பட்டது என அறிய முடியாதுள்ளது. 1965ஆம் ஆண்டில் புதிய விக்கிரகங்கள் அமைத்து கும்பாபிஷேகம் நடைபெற்றது. மீண்டும் நாட்டுச் சூழ்நிலை காரணமாக 1984 ஆம் ஆண்டு கும்பாபிஷேகம் நிகழப்பெற்றது.

சரணடைந்தவர்களைக் காத்து வரும் தாழையடி ஐயனார் நிகழ்த்திய அற்புதங்கள் பல.

இருவரிடையே தகராறு ஏற்பட்டது. ஒருவர் ஐயனார் பக்தரான மற்றவரைத் கொலைசெய்து ஐயனார் ஆலய வளவிலேயே புதைத்தார். கொலையுண்டவரின் மனைவி கொலை செய்தவருக்கெதிராக வழக்குத் தொடுத்தபோது சாட்சி இல்லாது வழக்குத் தள்ளுபடியாக நெருங்கும் வேளை ஐயனார் முதியவர் வேடத்தில் சாட்சி சொல்லி, இறந்தவர் புதைக்கப்பட்ட இடத்தைக் காட்டிக் கொலை செய்தவருக்குத் தண்டனை பெற்றுக் கொடுத்தார்.

ஆசாரியார் ஒருவரின் கனவில் ஐயனார் தோன்றி வேதனம் பெறாமல் தேர் அடித்தளம் ஒன்று அமைத்துக் கொடுக்கும்படி கூறியதால் அவரும் அவ்வாறே அமைத்துக் கொடுத்தார்.

பழைய தேர் சிதைவடைந்துபோகவே 06.03.1965 ஆம் ஆண்டு அது மீளவும் திருத்தியமைக்கப்பட்டு வெள்ளோட்டம் நிகழ்த்தப்பட்டது.

இவ்வாறு பல சிறப்புகளும் மேன்மையும் பெற்று விளங்கும் சுன்னாகம் தாழையடி ஐயானார் மகோற்சவம் பங்குனிமாத உத்தர நட்சத்திரத்தைத் தீர்த்தமாகக் கொண்டு 11 நாள்கள் இடம் பெற்று வருகிறது. அடியார்கள் அனைவருக்கும் ஐயனார் அருள் பாலிக்க வேண்டுகின்றோம்.

**மலர் அமைப்பு:**
**ஐயனார் இளைஞர் கழகம்**
ஐயனார் கோயிலடி,
சுன்னாகம்.


சகல விதமான ஐஸ்கிறீம் வகைகளையும்
சுகாதார முறைப்படி பெற்றுக்கொள்ள
**சிறி காளி கிறீம் ஹவுஸ்**
கட்டுவன் றோட், மல்லாகம்.


## சாந்தியும் அமைதியும் கிடைத்திட ஐயனாரிடம் வரம் கேட்போம்



ஆன்மாக்கள் லயப்படும் இடம் ஆலயம். இந்து ஆலயங்கள் இலங்கையிலே மிகையாக உள்ளன. அவற்றில் ஐயனார் பெருமானுக்குச் சில ஆலயங்களே உள்ளன. அவ்வாலயங்கள் மிகவும் பிரசித்தி பெற்றவை. அவற்றுள் இயற்கை எழில் கொஞ்சும் சுன்னாகத்தில் பசுமை நிறைந்த வயல் வெளிகளின் நடுவே பூரண, புட்கலா சமேதராக வீற்றிருந்து தம் பக்தர்களுக்கு அருள் நல்கி வருகின்றார் ஐயனார். ஐயப்பனின் தேர்த்திருவிழா இன்றாகும். இன்றைய நாளில் இவ்வாலயத்திற்கு அண்மையை நெருங்க, நெருங்க ஆன்மாக்களுக்கு ஒரு பரிபூரண திருப்தி ஏற்படுகின்றது. பஜனைப் பாடல்கள் மிகவும் பத்திப்பரவசமூட்டுபவையாக அமைந்திருக்கும். பலவிதமான சிறப்பம்சங்களுடன் பூரண, புட்கலா சமேத ஹரிஹரபுத்திர ஐயப்பன் தேர்த்திருவிழா சிறப்புற அமையவும் அமைதியும் சாந்தியும் எல்லோருக்கும் ஏற்பட தாழையடி ஐயனாரை வேண்டி வாழ்த்துகின்றேன்.

பிரம்ம சிறி.சிவ.பாலபாஸ்கரக்குருக்கள்
சந்திர சேகர விநாயகர் தேவஸ்தானம்.

## நம்பினோர்க்கு நல்லன தருபவன்



இன்று (07.04.2009) செவ்வாய்க்கிழமை நிகழும் அரிஹரபுத்திரனின் தேர்திருவிழாவுக்கான சிறப்புமலருக்கு ஆசியுரை வழங்கு வதையிட்டு ஆலய பரிபாலன சபையினராகிய நாம் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றோம்.

ஆலயத்தின் அடியார்கள், பக்தர்கள், தொண்டர்களின் அயராத உழைப்பினாலும் விடாமுயற்சியாலும் ஆலயம் இன்று புதுப் பொலிவுடன் திகழ்வதை அனைவரும் அறிவர்.

இதன் வளர்ச்சிக்கும் உயர்ச்சிக்கும் இந்த மண்ணிலும் பிறநாட்டு மண்ணிலும் வளமுடன் வாழ்ந்து வரும் அன்பர்கள் ஐயனாரை மறவாது மனதில் நிறுத்தி அன்பளிப்புகளை வழங்கிவருவது வழக்கமாயிற்று.

தம்மை நம்பித் தேடி, நாடி துதிக்கவரும் அன்பர்களுக்கும் அடியார்களுக்கும் தொண்டர்களுக்கும் நிறைய்ருளை அள்ளிச் சொரிந்து கொண்டிருக்கின்றான். வெள்ளிமலை என அழைக்கப்படும் தாழையடிக் கிழவனென செல்லமாக அழைக்கப்படும் ஐயனாரைத் தமது குல்தெய்வமாக மதித்து அல்லும் பகலும் வணங்கிவரும் அடியார்கள் அனைவருக்கும் ஐயப்பனின் திருவருள் கிடைக்கப்பெற்று நலமுடனும் வளமுடனும் வாழ வேண்டுமென உளநிறைவோடு வாழ்த்துகின்றோம்.

சி.குமரவேல்,
தலைவர், சுன்னாகம் ஐயனார் ஆலய பரிபாலனசபை.


### விழாச் சிறப்புற வாழ்த்துவோர்:

நவநாகரிக புடைவைத் தெரிவுகளுக்கு
**ரஞ்சனாஸ் & பசன் பார்க்**
சுன்னாகம்.

உண்டு களித்து மகிழ்வதற்கு
**ROSHAN RESTAURANT**
**றொசான் றெஸ்ரோறன்ஸ்**
138, கே.கே.எஸ். றோட், சுன்னாகம்

**சுபேந்திரன் & சசிக்குமார்**
**நகையகம், நகைத்தொழிலகம்**
Dr.சுப்பிரமணியம் வீதி, சுன்னாகம்.

சகல விதமான ஐஸ்கிறீம் வகைகளும்
ஓடருக்குப் பெற்றுக்கொள்ள
**அம்பிகா கிறீம் ஹவுஸ்**
மலைவேம்படி, அளவெட்டி.

**ஸ்ரீ கனன்ஸ் ரெக்ஸ்ரைல்ஸ்**
ஆலயத்துக்கு தேவையான உயர்ரக வாகுமாலை, மகரத தோரணம்
சிறியோர் பெரியோர்களுக்கான ஆடை வகைகள்
பெற்றுக் கொள்ளலாம்.
கே.கே.எஸ்.றோட், இணுவில் சந்தி, இணுவில்.

**சுன்னாகம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்**
காங்கேசன் துறை வீதி, சுன்னாகம்.

**சபரிநாதன் மில்**
ஸ்ரேசன் றோட்,
சுன்னாகம்.

**இரத்தினம் மில்**
(K.M.P)
ஸ்ரேசன் றோட், சுன்னாகம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மானிப்பாய் ப.நோ.கூ.சங்கம்

சிறிய கூட்டுறவு நகர் கிளை நிலையத்திற்கு (மினி கோப் சிற்றி) சுட்டிடத்திருத்தம், தளபாடாக்கைகள் செய்தல் வர்ணம் பூசுதல் ஆகியவற்றிற்கான கூறு விலை கோரல்.

எமது சங்கத்தின் நவாலி, மானிப்பாய், சண்டிலிப் பாய் ஆகிய இடங்களில் திறக்கப்படவுள்ள சிறிய கூட்டுறவு நகர் கடைக்கான மேற்படி வேலைகளுக்காக கூறுவிலைகள் கோரப்படுகின்றன. 08.04.2009 க்கு முன் னர் இதனைப் பார்வையிட்டுச் சங்க காரியாலயத்தில் ஒப்ப டைக்கவும்.

பொது முகாமையாளர்,
மானிப்பாய் ப.நோ.கூ.சங்கம்,
மானிப்பாய்.

03.04.2009

---

2009.04.08 புதன்கிழமை
ஸ்ரீ இராமர் பட்டாபிடேக உற்சவத்தினையொட்டி
வண்ணை ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள்
தேவஸ்தானத்தில்
காலை 8.30 மணிக்கு
**விசேட அபிடேகமும்**
பி.ப 4.00 மணிக்கு
**ஸ்ரீ இராமர் பட்டாபிடேக உற்சவமும்**
சிறப்புற நடைபெறும்.
இராம பக்தர்கள் அனைவரையும் உற்சவத்தில்
தவறாது கலந்து அருள்பெற வேண்டுகின்றோம்.

வண்ணை ஸ்ரீவேங்கடேச வரதராஜப் பெருமாள்
தேவஸ்தானம், யாழ்ப்பாணம். ஆதீன மகா சபை.

---

## நான்காம் ஆண்டு நினைவலைகள்

தோற்றம்
04
*
04
*
1945



மறைவு
23
*
03
*
2005

### அமரர் செல்லத்துரை யோகேஸ்வரநாதன்
(செயலாளர்- நீர்வேலி பலநோக்கு கூட்டுறவுச் சங்கம்)

புதுமலராய்ப் பூத்து மண்ணில்
எங்களுக்கு புன்னகை தந்து தோள் கொடுத்து உயர்த்திய அப்பாவே!
எங்களை விட்டு உங்களைப் பிரித்திட ஆண்டவன் ஏன்
துணிந்தானோ அப்பா! நீங்கள் இருந்த இடம் தவிக்குதப்பா
உங்கள் செல்லக் குழந்தைகள் நாம் துடிக்கின்றோம் அப்பா!
எல்லோருடைய மனதிலும் உங்கள் நினைவுகளைப்
பதித்து விட்டுச் சென்றுவிட்டீர்கள் அப்பா!
நான்கு ஆண்டுகள் என்ன நாலாயிரம் ஆண்டுகள் சென்றாலும்
உங்கள் நினைவுகள் எங்களை விட்டு அகலாது அப்பா!
உங்கள் ஆத்மா சாந்தியடைய தினமும் இறைவனை வேண்டுகின்றோம்.
ஓம்சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

V.T.S. லேன்
உரும்பிராய் தெற்கு
உரும்பிராய்.

உங்கள் நினைவுடன்:
அன்பு மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்

---

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



சிவனடியில்
20.01.1922

சிவனடியில்
19.03.2008

காரைநகர் கப்பம்புலத்தைப் பிறப்பிடமாகவும்
கொழும்பில் வசித்தவருமான

### அமரர் திருமதி சின்னப்பிள்ளை சின்னத்தம்பி
திதி : 07.04.2009

அம்மா நீங்கள் எம்மைப் பிரிந்து சென்று ஓராண்டு கடந்தாலும், நீங் கவில்லை எம் மனதைவிட்டு உம் நினைவுகள்! எம் வாழ்க்கைக்காக உம்மையே அர்ப்பணித்த எம் அன்பு அன்னையே நல்ல வழிகாட் டியாய் பாசமுடன் திகழ்ந்தவரே உம் ஆத்மா சாந்தியடைய எம்பெரு மானை மனதாரப் பிரார்த்திக்கின்றோம்.

இல: 15, மல்லிகா ஒழுங்கை
கொழும்பு 06.

உங்கள் பிரிவால் வாடும்
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

---

## அவசர அம்புலன்ஸ் சேவைக்கான இரண்டாம் கட்ட பயிற்சி வகுப்புக்கள்

யாழ்ப்பாணம்,ஏப்.7

யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தின் ஏற்பாட் டில் சர்வதேச மருத்துவக் குழுவின் உத வியுடன், யாழ்.மாவட்ட அவசர அம் புலன்ஸ் சேவைக்குத் தெரிவு செய்யப் பட்டுள்ளவர்களுக்கான இரண்டாம் கட்டப் பயிற்சி வகுப்புக்கள் நடைபெற வுள்ளன.

இந்த வகுப்புக்கள் 24 ஆம் திகதி வெள்ளிக்கிழமை தொடக்கம் 28 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை வரை யாழ். பண்ணையில் அமைந்துள்ள பிராந்திய பயிற்சி நிலையத்தில் நடைபெறவுள்ளன என யாழ்.பிராந்திய சுகாதார சேவை கள் பணிப்பாளர் டாக்டர் ஆ.கேதீஸ் வரன் அறிவித்துள்ளார்.

(204-300)

## தவறிவிட்டது

கற்பகப்பிள்ளையார் கோவிலடி, உடுவில் கிழக்கு, சுன் னாகம், என்னும் விலாசமுடைய பழனிவேல் சுசிகலா என் பவரது தேசிய அடையாள அட்டை (806614114V) கடந்த 03.04.09 அன்று செம்பியன் வீதியில் கறுப்புநிற கைப்பை யுடன் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து அண்ணா சனசமூக நிலையத்தடி, உடுவில் கிழக்கு, சுன்னா கம் என்னும் முகவரியில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மா னம் வழங்கப்படும்.

## 10ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
வல்லிபுரம்
குலசேகரம்

பிறப்பு
15.01.1920

இறப்பு
08.03.1999

எத்தனை ஆண்டுகள் ஓடி மறைந்தாலும்
எங்களால் உங்கள் நினைவை
மறக்க முடியவில்லையே!

உங்கள் பிரிவுக்கு எங்களின்
கண்ணீர்த் துளிகள்

இல.4,
ராஜ வீதி, நல்லூர்.

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

## பருத்தித்துறை பிரதேசத்தில் குடிசை வீடுகள் அமைக்க நிதி உதவி

வடமராட்சி,ஏப்.7

'செவன' மானி யத் திட்டத்தின் கீழ் பருத்தித்துறை பிர தேச செயலர் பிரி வில் குடிசை வீடுகள் அமைக்க மூவர் தெரிவு செய்யப் பட்டுள்ளதாக யாழ். மாவட்ட தேசிய வீடமைப்பு அதி கார சபை தெரிவித் துள்ளது.

இத்திட்டத்தில் தொண்டைமானாற் றிலிருந்து இருவ ரும், கெருடாவிலி ருந்து ஒருவருமே தெரிவு செய்யப் பட்டுள்ளனர்.

இந்தப் பயனா ளிகளுக்கு தலா 35 ஆயிரம் ரூபா வீதம் நிதி உதவி வழங் கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள் ளது. (204-236)

## யோகாசன வகுப்புகள்

யாழ்ப்பாணம்,ஏப்.7

கந்தர்மடம் ஸ்ரீ சிவ குருநாதபீட வேதாந்த தியான மண்டபத்தில் யோ காசன வகுப்புக்க ளுக்கான புதிய பிரி வுகள் நாளை மறு தினம் வியாழக்கி ழமை காலை 6.30 மணிக்கு நடைபெற வுள்ளது.

ஆண், பெண் என இருபாலரும் இப் பயிற்சியில் கலந்து கொள்ளலாம் என அறிவிக்கப் பட்டுள்ளது. (50-5)

---

## குருபூசை தினத்தையொட்டி மாணவர்களிடையே போட்டிகள்

வடமராட்சி,ஏப்.7

மேலைப்புலோலி சதாவதானி கதிரைவேற்பிள்ளை சனசமூக நிலையத்தின் ஏற்பாட்டில் சதாவதானி கதிரை வேற்பிள்ளை குருபூசை தினத்தையொட்டி பாடசாலை மாணவர்களிடையே போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

தரம் ஒன்று தொடக்கம் தரம் 11 வரையான வகுப்புக்களில் கல்வி கற்கும் மாணவர்களிடையே பேச்சு, மனனம், பண் ணிசை, பொது அறிவு, அவதானம் ஆகிய போட்டிகள் நடத்தப்பட வுள்ளன. இந்தப் போட்டிகள் எதிர்வரும் 18 ஆம் திகதி சனிக் கிழமையும் மறுநாள் ஞாயிற்றுக்கிழமையும் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது (204-236)

## பொலிஸ் பயிற்சி நிலையப் பணிப்பாளர் சுட்டுக்கொலை

கொழும்பு,ஏப்.7

மட்டக்களப்புக் கல்குடா பொலிஸ் பயிற்சிப் பணிப்பாளர் எஸ்.எம்.ஜமால்தீன் நேற்று முன்தினம் இரவு 7.30 மணியளவில் மருதமுனைப் பள்ளியருகே வைத்து இனந்தெரியாத ஆயுத தாரிகளால் சுட்டுக் கொல்லப்பட்டார் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ரஞ்சித் குணசேகர தெரிவித்துள்ளார்.

இவரது சடலம் கல்முனை அஷ்ரப் வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (1-6)

## மரண அறிவித்தல்

### சிவலிங்கம் செல்வரத்தினம்



சரவணையைப் பிறப்பிடமாகவும், மண் கும்பானை வசிப்பிடமாகவும் கொண்ட சிவ லிங்கம் செல்வரத்தினம் நேற்றுமுன்தினம் 05.04.2009 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சிவலிங்கம் மற் றும் இரத்தினம்மா தம்பதியினரின் அன்பு மக னும், குணநாயகம்-இராஜலட்சுமி தம்பதியினரின் அன்பு மருமகனும், இந்திராவின்(சித்திரா) அன் புக் கணவரும், அருணன், அனுஷா (கொழும்பு), அனுஷன், தர்சிகா(வேலணை மத்திய கல்லூரி மாணவி) ஆகி யோரின் அன்புத் தந்தையும், மயூரனின்(கொழும்பு) பாசமிகு மாம னும், இராசரத்தினம்(கனடா), விஜயலட்சுமி(கனடா), சிவச் சந்திரன், பாஸ்கரன், தயாபரன்(பிரான்ஸ்), ரவீந்திரதாசன் (இத் தாலி) ஆகியோரின் அன்புச் சகோதரனும் லீலாதேவி, சுசீலா தேவி(பிரான்ஸ்), ஆதீசன்(கொழும்பு), உமாதேவி, ஜெகதீசன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று செவ்வாய்க்கிழமை 07.04.2009 முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடை பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சாட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

5 ஆம் வட்டாரம்,
மண்கும்பான் மேற்கு, வேலணை.

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### கதிரேசு பரராஜசிங்கம்

(J.P அகில இலங்கை/அரசாங்க கட்டட ஒப்பந்தக்காரர்)

குரும்பசிட்டியைப் பிறப்பிடமா கவும், பத்தமேனி அச்சுவேலியை வதிவிடமாகவும் தற்போது கச் சேரி கிழக்கு ஒழுங்கையை வசிப் பிடமாகவும் கொண்ட கதிரேசு- பரராஜசிங்கம் (05.04. 2009) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.



அன்னார் காலஞ்சென்ற கதி ரேசு-சின்னம்மா தம்பதியின ரின் சிரேஷ்ட புத்திரனும், காலஞ் சென்ற நடராஜா மற்றும் நாகரத் தினம் தம்பதியினரின் மருமக னும், கருணாதேவி(தாதிய உத்தியோகத்தர் யாழ்.போதனா வைத்தியசாலை)யின் அன்புக் கணவரும், ஜனரஞ்சினி (திறந்த பல்கலைக்கழகம், கொழும்பு), தட்ஷாயினி, கிருத்திகன்(புனித பரியோவான் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தந்தையாரும், காலஞ் சென்ற இரத்தினம், இராமநாதன், முத்தையா, குமாரகுலசிங்கம் மற்றும் இராஜ சிங்கம்(கனடா), செல்வராணி(கொழும்பு), ஜெயவீரசிங்கம்(கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற இளையதம்பி மற்றும் சரஸ் வதி, இராசாத்தி, புஸ்பராணி, சோபிதலக்ஸ்மி, மகாதேவா, இந்துராணி, கௌசலாதேவி, கமலாதேவி, நகுலேந்திரராஜா, யோகேந்திரராஜா, புவனேந்தி ரராஜா, பவானி, காமினி ஆகியோரின் மைத்துனரும், கிருஷோபினி, ஜெயந் திரன், அனுஷித்தா, அனுஷீமா, அனுரேகா ஆகியோரின் பெரியதந்தையும், காயத்திரி, டயானி ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (07.04.2009) செவ்வாய்க் கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.30, கச்சேரி கிழக்கு ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.

(84188)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இத்தாலியில் திங்களன்று பூகம்பம் இலட்சக்கணக்கானோர் பாதிப்பு

ரோம், ஏப்ரல் 27

மத்திய இத்தாலியை நேற்று திங்கட்கிழமை அதிகாலை உக்கிரமான பூகம்பம்



உலுக்கியது. பூகம்ப அனர்த்தங்களுக்கு 27 பேர் பலியாகினர். அநேகர் காயமடைந்தனர். ஆயிரக்கணக்கான கட்டடங்கள் சேதமடைந்தன. ஓர் இலட்சம் பேர் வரை வீடுவாசல்களை இழந்தனர் என இத்தாலிய அதிகாரிகள் தெரிவித்தார்கள்.

மத்திய இத்தாலியின் லாகுய்லா நகருக்கருகில் இந்த பூகம்பம் ஏற்பட்டது.இதன் தாக்கம் ரிச்டர் அளவுகோலில், 6.3 புள்ளிகளாக பதிவாகியுள்ளது என அமெரிக்க தேசிய புவியியல் ஆய்வு மையம் தெரிவித்தது. இந்தப் பிராந்தியம் தலைநகரான ரோமின் வட கிழக்கே, 95 கிலோ மீற்றர் (60 மைல்) தொலைவில் அமைந்துள்ளது.

''பூகம்ப அனர்த்தங்களுக்குப் பலியானோரில் ஐந்து சிறார்களும் அடங்குவர். மீட்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. லா குய்லா பிராந்தியத்தில் மூவாயிரம் முதல் பத்தாயிரம் வரையான கட்டடங்கள் சேதமடைந்துள்ளன'' என சிவில் பாதுகாப்பு அதிகாரி அகஸ்டினோ மியாஸோ பி.பி.ஸிக்குத் தெரிவித்தார்.

''ஆயிரக்கணக்கானோர் வீடுவாசல்களை இழந்துள்ளனர். எங்கும் பதற்றமும், பரபரப்பும் எழுந்துள்ளன. பாதிப்புக்குள்ளான பகுதிகளில் மீட்புப் பணியாளர்கள் முழுவீச்சில் மீட்புப் பணிகளில் ஈடுபட்டுள்ளனர். உயிரிழப்புகளின் எண்ணிக்கை அதிகரிக்கலாம்'' என்றும் அவர் விவரித்தார்.

''ஏறத்தாழ ஓர் இலட்சம் பேர் வரை தங்கள் வீடுகளை விட்டு வெளியேறியுள்ளனர். பூகம்பத்தை அடுத்து, இரு தடவைகள் நில அதிர்வுகள் ஏற்பட்டுள்ளன. கட்டட இடிபாடுகளுக்குள் பலர் சிக்குண்டிருக்கலாம். மீட்புப் பணிகள் தொடர்கின்றன'' என லா குய்லா நகர பிதா மஸிமோ சியாலெண்டி குறிப்பிட்டார்.

லாகுய்லா மத்திய இத்தாலியிலுள்ள புராதன நகரமாகும். 13 ஆம் நூற்றாண்டில் நிர்மாணிக்கப்பட்டது. இது அடுக்கு மலைத் தொடர்கள் சூழ்ந்த அப்ருஸோ பிராந்தியத்தின் தலைநகரமாகும். இதன் மக்கள் தொகை ஏறத்தாழ எழுபது ஆயிரமாகும். சுற்றுலா மையமான இந்நகருக்கு ஆயிரக்கணக்கான சுற்றுலா பயணிகளும், மாணவர்களும் அவ்வவ்போது வருகை புரிகிறார்கள்.

# பண மழையில் முன்னாள் பிரி. பிரதமர்

லண்டன், ஏப்ரல் 07

கடந்த 2 ஆண்டுகளுக்கு முன்னர் பிரிட்டனின் முன்னாள் பிரதமர் ரொனி பிளேயர் தமது பதவியிலிருந்து விலகினார். அது முதல் பல்வேறு துறைகளில் அவர் சிறப்பு சொற்பொழிவாளராகி விட்டார். பிலிப்பைன்ஸில் சமீபத்தில் மணிலா பல்கலைக்கழகத்தில் பேசினார். அதற்கு அளிக்கப்பட்ட ஊதியம் ரூ.8.88 கோடி. அதில் போன் நிறுவனமான பிஎல்டிடி மட்டும் ரூ.4.05 கோடி அளித்தது.

ஜேபி மார்கன் நிறுவனத்துக்கு ஆலோசகராக இருப்பதன் மூலம் ரோனி பிளேயர் ஆண்டுக்கு ரூ.44.4 கோடி ஊதியம் பெறுகிறார். ஜூரிச் பைனான்சியல் என்ற முதலீட்டு வங்கி ஆலோசகராக இருப்பதற்கு ரூ. 10.1 கோடி கிடைக்கிறது. தனது நினைவுகளை எழுத ரூ. 102 கோடிக்கு பிளேயர் கையெழுத்திட்டுள்ளார். ஆண்டுக்கு ரூ.330 கோடி கிடைப்பதன் மூலம் உலகின் மிக பெறுமதிவாய்ந்த பேச்சாளராக பிளேயர் உள்ளார்.

## உலக அரங்கில்

# வடகொரியாவின் ரொக்கெட் பரிசோதனைக்கு அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா கடும் கண்டனம்

பிரேக், ஏப்ரல் 07

வட-கொரியா மேற்கொண்ட நீண்ட தூர ரொக்கெட் சோதனைக்கு, அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா கடும் கண்டனம் தெரிவித்தார். ஐ.நாவின் விதிமுறைகளை மீறும் நாடுகள் தண்டிக்கப்படவேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

செக் குடியரசுக்கு விஜயம் செய்த பராக் ஒபாமா, இக் குடியரசின் தலைநகரான பிரேக்கில் நடைபெற்ற கூட்டமொன்றில் உரையாற்றினார். அப்போது அவர் தம் உரையில் இக்கண்டனத்தை தெரிவித்தார்.

பராக் ஒபாமா தொடர்ந்து பேசுகையில், ''ஒரு நாட்டின் பாதுகாப்பு இதர நாடுகளுக்கு அச்சுறுத்தலாக இருக்கக்கூடாது. வட கொரியாவின் ரொக்கெட் சோதனை, வட கிழக்கு ஆசியாவின் அமைதியை சீர்குலைக்கும் வகையில் அமைந்துள்ளது. ஆயுதங்கள் பரவுவதை உலக மக்கள் ஒருங்கிணைந்து தடுக்க வேண்டும்'' என்றும் கேட்டுக் கொண்டார்.

ரொக்கெட் சோதனையை அடுத்து, ஜப்பான் பிரதமர் டாரோ அசோவும், தலைநகரான டோக்கியோவில் அவசர கூட்டமொன்றைக் கூட்டினார். அதில் அவர் பேசுகையில்,''எமது பாதுகாப்பை உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டிய கட்டாயக் கடமை எமக்குண்டு. வட கொரியாவின் ரொக்கெட் சோதனை தொடர்பான தகவல்களை திரட்டி வருகின்றோம்'' என்றார்.

வட கொரியாவின் ரொக்கெட் சோதனை தொடர்பாக விவாதிக்க, ஐ.நா.பாதுகாப்புச் சபை அவசர கூட்டமொன்றை நடத்த முனைந்தது. எனினும், இதற்குப் பாதுகாப்புச் சபை வட்டாரங்களில் உடனடி உடன்பாடு ஏற்படவில்லை. இது தொடர்பான பேச்சுகள் நீடிக்கின்றன என இராஜதந்திர வட்டாரங்கள் தெரிவித்தன.

ரொக்கெட் சோதனையை யொட்டி, வட கொரியாவுக்கு எதிராக கடும் போக்கை கடைப்பிடிக்க அமெரிக்காவும், ஜப்பானும் முன்வந்துள்ளன. எனினும், இதுவிடயத்தில் •பொறுமை அவசியம் என சீனாவும் ரஷ்யாவும் தெரிவித்துள்ளன.

அமெரிக்காவின் கடும் எச்சரிக்கையை மீறி வட கொரியா ஞாயிற்றுக்கிழமை, நீண்ட தூர ரொக்கெட்டை ஏவி பரிசோதித்தது. இதை அது செயற்கைக் கோள் ஏவும் பணியே என்றும் கூறியது. எனினும், நீண்ட தூர ஏவுகணை சோதனைதான் இது [illegible] அமெரிக்கா தெரிவிக்கிறது.

இந்த ரொக்கெட் ஞாயிற்றுக்கிழமை, உள்ளூர் நேரப்படி காலை 8 மணிக்குச் செலுத்தப்பட்டது. ஜப்பானைக் கடந்து இந்த ரொக்கெட் சென்றது. இந்த சோதனைக்கு ஏற்கனவே அமெரிக்கா, ஜப்பான், தென் கொரியா ஆகிய நாடுகள் கடும் கண்டனமும் எதிர்ப்பும் தெரிவித்திருந்தன.

இந்த சோதனைக்கு ஐ.நா., ஜப்பான், அமெரிக்கா, தென் கொரியா ஆகியவை கடும் எதிர்ப்பை தெரிவித்தன. சோதனையை கைவிடுமாறு வலியுறுத்தின. ஜப்பான் தனது வான் எல்லைக்குள் வட கொரியாவின் ஏவுகணை பறந்தால், அது சுட்டு வீழ்த்தப்படும் என எச்சரித்திருந்தது.

# ஈராக்கில் கார்க்குண்டு வெடிப்பு 18 பேர் பலி; பலர் படுகாயம்

பக்தாத்,ஏப்ரல் 07

ஈராக்கின் தலைநகரான பக்தாத்தில் ஞாயிற்றுக்கிழமையும் நேற்று திங்கட்கிழமையும் கார்க்குண்டுகள் வெடித்தன. இவற்றில் 18 பேர் உயிரிழந்தனர். டசின் கணக்கானோர் காயமடைந்தனர் என பாதுகாப்பு வட்டாரம் தெரிவித்தது.

ஷியா மாவட்டத்திலுள்ள சத்ர் நகரில் ஞாயிற்றுக்கிழமை முதல் கார்க்குண்டு பயங்கரமாக வெடித்தது. இதில் 10 பேர் கொல்லப்பட்டனர். 28 பேர் காயமடைந்தனர். இவ்விரு தரப்பினரிலும் பெண்களும் பிள்ளைகளுமடங்குவர் என்றும் அவ்வட்டாரம் குறிப்பிட்டது.

மற்றுமொரு கார்க்குண்டு மக்கள் நடமாட்ட மிகுந்த மத்திய பக்தாத்தில் வெடித்தது. கட்டுமானப் பகுதியில் இடம்பெற்ற இக்குண்டு வெடிப்பில் சிக்கி, 5 கட்டுமான ஊழியர்கள் பலியானார்கள். பதினைந்துக்கு மேற்பட்டோர் காயமடைந்தனர் என பாதுகாப்பு அதிகாரியொருவர் பி.பி.ஸிக்குத் தெரிவித்தார்.

தலைநகரில் நேற்று திங்கட்கிழமை இடம்பெற்ற கார்க்குண்டு வெடிப்பில், இரு பாதசாரிகளும் ஒரு பொலிஸாரும் பலியாகினர். உள்துறை அமைச்சின் உயர் அதிகாரியொருவரின் வாகன அணியை இலக்குவைத்து, இக்குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. எனினும், இதில் வாகன அணி தப்பிவிட்டது என்றும் அவர் கூறினார்.

பக்தாத்தின் வடக்கிலுள்ள ஹுஸினியா சந்தைப் பகுதியையும் நேற்று குண்டொன்று உலுக்கியது. எனினும், சேத விவரங்கள் உடனடியாக வெளியாகவில்லை என உள்ளூர் அதிகாரியொருவர் தெரிவித்தார்.

# தமது ஐந்து குழந்தைகளையும் சுட்டுக்கொன்றாராம் தந்தை

## அமெரிக்காவில் சம்பவம்

வாஷிங்ரன், ஏப். 07

வாஷிங்ரனைச் சேர்ந்த கேம்ஸ் ஹரிஸன் என்னும் 34 வயது நபரொருவர் தனது ஐந்து பிள்ளைகளையும் சுட்டுக் கொன்று விட்டு, இறுதியில் தன்னைத்தானே சுட்டு தற்கொலை செய்து கொண்டார்.

அவரது வீட்டுக்குச் சென்ற ஒருவர், கதவைத்தட்டி வீட்டாரைக் கூப்பிட்டார். பதில் இல்லை. அப்போது உள்ளே இரத்த வெள்ளத்தில் குழந்தையொன்று இறந்து கிடந்ததை ஜன்னலுக்கூடாகக் கண்டு அதிர்ச்சி அடைந்தார்.

இதையடுத்து, அவ்வீட்டுக்கு வந்தவர் பொலிஸாருக்கு அறிவித்தார். பொலிஸார் வந்து மூன்று சிறுமிகளும், இரு சிறுவர்களும் சுட்டுக் கொல்லப்பட்டிருக்கக் கண்டு அதிர்ச்சியடைந்தனர்.

நான்கு பிள்ளைகள் கட்டில்களிலேயே சுட்டுக் கொல்லப்பட்டிருந்தார்கள். மற்றுமொரு குழந்தை துப்பாக்கிச் சூட்டுக் காயத்துடன் குளியலறையில் பிணமாகக் கிடக்க பொலிஸார் கண்டுபிடித் தனர்.

ஜேம்ஸ் ஹரிஸனின் மனைவி இன்னொருவருடன் ஓடிவிட்டதனால் அவர் ஆத்திரமடைந்திருந்தார் என விசாரணையில் தெரியவந்தது.

# இளம் பெண்ணுக்குத் தலிபான்கள் கொரேமான தண்டனை; வசாரிக்க பாக். ஜனாதிபதி உத்தரவு

இஸ்லாமாபாத், ஏப்ரல் 07

பாகிஸ்தானின் ஸ்வாட் பள்ளத்தாக்குப் பகுதியில் மக்கள் முன்னிலையில் இளம் பெண்ணை சவுக்கால் அடித்து விளாசிய தலிபான்களின் நடவடிக்கை பற்றி விசாரணை நடத்த ஜனாதிபதி அஷிப் அலி சர்தாரி உத்தரவிட்டுள்ளார்.

ஸ்வாட் பள்ளத்தாக்குப் பகுதி தலிபான் தீவிரவாதிகளின் ஆதிக்கத்தில் தற்போது உள்ளது. சமீபத்தில் பாகிஸ்தான் அரசுடன் தலிபான்கள் செய்துகொண்ட போர் நிறுத்த ஒப்பந்தத்தின்படி தற்போது இங்கு ஷாரியா சட்டத்திட்டங்கள் அமுலில் உள்ளன.

தனது கணவன் அல்லாமல் வேறு எந்த ஆடவருடனும் இளம் பெண் சேர்ந்து வெளியில் வரக்கூடாது என்பதும் அந்த சட்டப் பிரிவுகளில் ஒன்று.

இந்நிலையில், வேற்று ஆண் ஒருவருடன் தனது வீட்டிலிருந்து வெளியே வந்த இளம்பெண் மீது பாலியல் குற்றச்சாட்டைக் கூறி, அந்த பெண்ணை தெருவில் இழுத்து வந்த தலிபான்கள் அவரை 34 முறை சவுக்கால் அடித்து தண்டனையளித்தனர்.

இரண்டு தலிபான்கள் இளம் பெண்ணை தரையில் அழுத்திப் பிடித்திருக்க, மற்றொரு தலிபான் அவரை சவுக்கால் அடித்தார். வலி தாங்க முடியாமல் அந்தப் பெண், ''அடிப்பதை நிறுத்துங்கள். அல்லது ''என்னைக் கொன்று விடுங்கள்'' என்று கூறி கதறி அழுதவாறு மூர்ச்சித்து விழுந்தார்.

அவரது உறவினர்களும், பொதுமக்களும் சுற்றி நின்று வேடிக்கை மட்டுமே பார்த்தனர். தாக்குதலுக்கு ஆளானன பெண்ணுக்கு உதவ யாரும் முன்வரவில்லை. வேடிக்கை பார்த்தவர்களில் அந்த இளம்பெண்ணின் சகோதரனும் ஒருவர்.

இந்நிலையில், அந்த இளம்பெண்ணுக்கு வழங்கிய தண்டனையை படம் எடுத்து அந்த பகுதியில் தலிபான்கள் விநியோகித் தார்கள். பெண்கள் தவறு செய்தால், இது போன்ற கடும் தண்டனை கிடைக்கும் என்றும் எச்சரித்தார்கள் என்ற தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்த ஒளிநாடா உலகம் முழுவதும் பல்வேறு தொலைக்காட்சிகளில் வெளியாயின. இதைத் தொடர்ந்து தலிபான்களுக்கு எதிரான அலை வீசத் தொடங்கியுள்ளது. இதையடுத்து, இது பற்றி விசாரணை நடத்த வேண்டும் என பாகிஸ்தான் அதிகாரிகளுக்கு ஜனாதிபதி சர்தாரி உத்தரவிட்டுள்ளார்.

தலிபான்களின் இந்த காட்டுமிராண்டித்தனமான நடவடிக்கையால் 'பாகிஸ்தான் மக்கள் வெட்கித் தலைகுனிய வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது என சர்தாரி கண்டனம் தெரிவித்தார் என அவரது செய்தித் தொடர்பாளர் பர்ஹத்துல்லா பாபர் கூறியுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாதுகாப்பு வலயம் மீது தாக்குதல் முனைப்பா? புலம்பெயர் தமிழர் அனலாகக் கிளர்ந்தெழுக!

## பழ.நெடுமாறன் அவசர அழைப்பு



சென்னை, ஏப்ரல் 07

வன்னியில் விடுதலைப் புலிகளின் பகுதியிலுள்ள பாதுகாப்பு வலயம் மீது இலங்கைப் படையினர் தாக்குதல் நடத்த மேற்கொள்ளும் முனைப்பிற்கு எதிராக புலம்பெயர்ந்த தமிழ் மக்கள் புதிய புயலாக - அனலாகக் கிளர்ந்தெழ வேண்டும்.

- இவ்வாறு தமிழர் தேசிய இயக்கத்தின் தலைவரும், ஈழத் தமிழ் ஆதரவு ஓயாத அலையுமான பழ.நெடுமாறன் அழைப்பு விடுத்துள்ளார்.

மாத்தளன், பொக்கணை, வலைஞர்மடம், இரட்டை வாய்க்கால் போன்ற கிராமங்களை உள்ளடக்கிய பாதுகாப்பு வலயத்தில் பல லட்சக்கணக்கான மக்கள் தங்கியிருப்பதால், படையினர் தாக்குதல் தொடுக்கும்போது லட்சக் கணக்கில் மக்கள் உயிரிழக்க நேரிடும் எனச் சுட்டிக்காட்டப்படுகின்றது.

பாதுகாப்பு வலயம் மீதான தாக்குதலுக்கு முன்னோடியாகவே, தமிழீழ விடுதலைப் புலிகள் இந்தப் பகுதிகளுக்குள் மக்களோடு மக்களாக ஊடுருவியிருக்கின்றனர் எனவும், மக்களைக் காப்பாற்றும் நடவடிக்கை ஒன்றை தாம் மேற்கொள்ள இருக்கின்றனர் எனவும் இலங்கைப் படையினர் அனைத்துலகின் நாடி பிடிக்கும் முன்னோடி அறிவித்தல் ஒன்றை விடுத்துள்ளனர்.

எதிர்வரும் 16ஆம் திகதி இந்திய பொதுத் தேர்தல் ஆரம்பமாகவுள்ள நிலையிலும், சிங்களப் புத்தாண்டு நெருங்கி வருவதாலும், அதற்கு முன்னர் விடுதலைப் புலிகளை முற்றாக அழிக்க வேண்டும் என நினைக்கும் இந்திய - இலங்கை அரசுகள் அடுத்த சில நாள்களில் தாக்குதலை ஆரம்பிக்கத் திட்டமிட்டுள்ளன.

இந்தியத் தேர்தலுக்கு முன்னர் தமிழீழ விடுதலைப் புலிகளை முற்றாக அழிக்க வேண்டும் என காங்கிரஸ் கட்சி தலைமையிலான இந்திய அரசு கடந்த சில நாள்களுக்கு முன்னர் இலங்கை அரசுக்கு உத்தரவு பிறப்பித்திருந்தது என கடந்த சில நாள்களுக்கு முன்னர் தகவல்கள் வெளியாகியிருந்தன.

வன்னியில் இலங்கைப் படையினர் மேற்கொள்ளும் தாக்குதலின் பின்னணியிலும், நேரடியாகவும் இந்திய அரசும், படையினரும் முழு அளவில் இருக்கின்றன என்று தமிழீழ ஆதரவாளர் ஒருங்கிணைப்புக் குழுவின் இணைப்பாளர் பழ.நெடுமாறனும், தமிழ் மக்களிற்கு சுய நிர்ணய உரிமை வழங்கப்பட வேண்டும் என வலியுறுத்திவரும் ஒரேயொரு சிங்கள கட்சியான இடதுசாரி முன்னணியின் தலைவர் கலாநிதி விக்கிரமபாகு கரணாரத்னவும் ஆணித்தரமாக வலியுறுத்திக் கூறியிருந்தனர்.

இந்த நிலையில் இலங்கைப் படையினரது தாக்குதல் முனைப்பு பற்றி கடந்த ஞாயிற்றுக் கிழமை மீண்டும் கருத்து வெளியிட்டுள்ள பழ. நெடுமாறன் -

தாக்குதல் முனைப்பு உண்மையாக இருந்தால் பல்லாயிரக்கணக்கில் உயிரிழப்பு ஏற்பட நேரிடும் என்பதால், இதனைத் தடுத்து நிறுத்த உடனடியான முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும், தமிழ்நாடு மற்றும் புலம்பெயர்ந்த தமிழ் மக்களுக்கு இது தொடர்பான தார்மீகக் கடமை இருக்கிறது எனவும் குறிப்பிட்டார்.

புலம்பெயர்ந்த தமிழர்கள் தாம் வாழும் நாடுகளின் அரசுகளுக்கு இந்தத் தகவலை உடனடியாகக் கொண்டு சென்று, இலங்கை அரசு மீது அழுத்தம் பிரயோகிக்க அனைத்துலக சமூகத்திற்கு அழுத்தம் கொடுக்க வேண்டும் எனவும் பழ.நெடுமாறன் அழைப்பு விடுத்துள்ளார்.

# வைரமுத்துக்கு டாக்டர் பட்டம்



சென்னை, ஏப். 07

கவிஞர் வைரமுத்துவின் இலக்கியப் பணிகளைப் பாராட்டி, கோவை பாரதியார் பல்கலைக்கழகம் கௌரவ டாக்டர் பட்டம் வழங்குகிறது.

இந்தப் பல்கலைக்கழத்தின் 24ஆவது பட்டமளிப்பு விழா, இம்மாதம் 9ஆம் திகதி நடக்கிறது. விழாவில், ஆளுநர் சுர்ஜித் சிங் பர்னாலா, வைரமுத்துவுக்கு டாக்டர் பட்டம் வழங்குகிறார். பல்கலையில் சிறப்பிடம் பெற்ற 100 மாணவர்களுக்கு தங்கப் பதக்கம் வழங்கப்படுகிறது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# முதல்வருக்கு புலிகளின் பெயரில் மிரட்டலா? மக்களைத் திசைதிருப்பவே இந்த நாடகம்!

## விஜயகாந்த் கூறுகிறார்



திருச்சி, ஏப். 07

தி.மு.க. தலைவர் கருணாநிதியைக் கொல்ல விடுதலைப் புலிகளின் பெயரில் மிரட்டல் கடிதம் வந்துள்ளது என்று கூறுகிறார்கள். மக்களின் கவனத்தைத் திசைதிருப்பவே இந்த நாடகம். இவர்கள் இலங்கைத் தமிழர்களுக்காக என்ன குரல் கொடுத்தார்கள்?

- இவ்வாறு தே.மு.தி.க. தலைவர் விஜயகாந்த் கேள்வியெழுப்பியுள்ளார்.

மேலும், தே.மு.தி.க. வேட்பாளர்களை ஆதரித்து தேர்தல் பிரசாரம் செய்யவிடாமல் தடுத்து, என்னைக் கைதுசெய்யத் திட்டமிட்டு வருகின்றனர் - என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை திருச்சி விமான நிலையம், உறையூர், திருவானைக்கா, தாராநல்லூர் கீரைக்கொல்லை ஆகிய பகுதிகளில் தேர்தல் பிரசாரம் செய்து பேசியபோதே அவர் இதனைத் தெரிவித்தார். மேலும் அவர் கூறியவை வருமாறு -

தமிழகத்தில் தி.மு.கவும், அ.தி.மு.கவும் காங்கிரஸ் கட்சியுடனும், பாரதிய ஜனதாக் கட்சியுடனும் மாறி மாறி கூட்டணி அமைத்து போட்டியிட்டு வந்த நிலையில், நாம் மக்களுடனும், இறைவனுடனும்தான் கூட்டணி என்று கூறி, மக்கள் சக்தியை நம்பி மக்களவைத் தேர்தலில் போட்டியிடுகிறோம்.

நாம் மக்கள் பலத்தால் போட்டியிட உள்ளோம். அவர்கள் கூட்டணி பலத்தால் போட்டியிடுகின்றனர். இதில் வெல்வது யார் என்பது தேர்தலுக்குப் பின்னர் தெரிந்துவிடும்.

மக்கள் பிரச்சினையை முன்நிறுத்தி தே.மு.தி.க. பிரசாரம் செய்வதால், தே.மு.தி.கவைப் பற்றிப் பேசுவதற்கு தி.மு.கவும், அ.தி.மு.கவும் தயங்குகின்றன.

மத்தியில் அடுத்த பிரதமர் யார் என்பதை தீர்மானிக்கும் சக்தி காங்கிரஸ் கட்சிக்குத்தான் உள்ளது. வேறு எந்த மாநிலக் கட்சிக்கும் இல்லை என்று மத்திய உள்துறை அமைச்சர் ப. சிதம்பரம் கூறியுள்ளார்.

நீங்களே கூட்டணியை நம்பி, மாநிலக் கட்சிகளின் உதவியை நாடியுள்ள நிலையில் மாநிலக் கட்சிகளுக்கு பிரதமரைத் தேர்வு செய்யும் சக்தி இல்லை என்பதை கூற சிதம்பரத்துக்கு அருகதை இல்லை.

இலங்கைத் தமிழர்களுக்காக என்ன குரல் கொடுத்தார்கள்? தி.மு.க. தலைவர் கருணாநிதியைக் கொல்ல விடுதலைப் புலிகளின் சார்பில் மிரட்டல் கடிதம் வந்துள்ளது என்று கூறுகிறார்கள். மக்களின் கவனத்தைத் திசை திருப்பவே இப்படிக் கூறுகிறார்கள்.

தமிழகத்தில் மாற்றத்தை ஏற்படுத்த என்னால் முடியும் - என்றார்.

# இலங்கை மீனவர்கள் நால்வர் இந்தியக் கடற்படையால் கைது

தூத்துக்குடி, ஏப். 07

இந்தியக் கடல் எல்லைக்குள் அத்துமீறி நுழைந்த இலங்கை மீனவர்கள் 4 பேரை இந்தியக் கடலோரக் காவல் படையினர் கைது செய்தனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதுகுறித்த மேலதிக தகவல்கள் வருமாறு -

தூத்துக்குடியில் இருந்து 41 கடல் மைல் தொலைவில் இந்தியக் கடல் எல்லைக்குள், இலங்கையைச் சேர்ந்த மீன்பிடிப் படகு ஒன்று மீன் பிடித்துக் கொண்டிருந்ததை கடலோரக் காவற் படையினர் கண்டனர்.

படகில் இருந்த இலங்கை புத்தளம் மாவட்டம், கல்பெட்டி என்ற இடத்தைச் சேர்ந்த தோமகே பீக்ளி லோரன்ஸ் பெர்னாந்து (வயது - 47), அபேஸ்ரீ ஜெயவர்த்தனே (வயது - 43), பாலி விமல் பெரைரா (வயது - 48), சத்ரு பின்காந்த் (வயது - 21) ஆகிய 4 இலங்கை மீனவர்களையும் கடலோரக் காவற் படையினர் கைது செய்தனர்.

படகு மற்றும் அதிலிருந்த 300 கிலோ எடையுள்ள மீன்களையும் பறிமுதல் செய்த கடலோரக் காவற் படையினர் அவற்றை தூத்துக்குடிக்குக் கொண்டுவந்தனர். ஐ.பி., கியூ, பிரிவு உள்ளிட்ட உளவுப் பிரிவுப் பொலிஸாரும் அவர்களிடம் விசாரித்தனர். தொடர்ந்து, கைது செய்யப்பட்ட 4 இலங்கை மீனவர்களும் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

## ஈழத் தமிழர் அவலக் காட்சிக் குறுந்தகட்டுக்கு

# தடைகோரி காங்கிரஸ் மனுத் தாக்கல் பெரியார் திராவிடர் கழகம் கண்டனம்

சென்னை, ஏப். 07

பெரியார் திராவிடர் கழகத்தைத் தடை செய்ய வேண்டும் என்று காங்கிரஸ் நிர்வாகிகள் தேர்தல் ஆணையத்திடம் முறைப்பாட்டு மனு அளித்தமைக்கு அக்கட்சி கண்டனம் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக பெரியார் திராவிடர் கழகத்தின் பொதுசெயலாளர் விடுதலை ராஜேந்திரன் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு -

இனப்படுகொலைகளை தடுத்து நிறுத்தாத காங்கிரஸ் கட்சியை எதிர்ப்பதற்கும் அவர்களைத் தோற்கடிக்கக் கூடிய எதிரணிக்கு வாக்களிக்க மக்களிடம் பிரசாரம் செய்வதற்கும் உள்ள கருத்துரிமையை காங்கிரஸ் பறிக்கத் துடிக்கிறது.

பெரியார் திராவிடர் கழகம் வெளியிட்ட குறுந் தகட்டையும், பெரியார் திராவிடர் கழகத்தையும் தடை செய்யுமாறு தேர்தல் ஆணையத்திடம் தமிழக காங்கிரஸ் கட்சித் தலைவர் தங்கபாலு முறைப்பாட்டு மனு அளித்துள்ளார். இந்தக் குறுந்தகட்டில் வெளியிட்டுள்ள ஈழத்தமிழர் அவலக்காட்சிகள் ஏற்கனவே தொலைக்காட்சிகளில் ஒளிபரப்பப்பட்டவைதான். வேறு எந்த சட்டவிரோத கருத்துகளும் இடம்பெறவில்லை. ஒரு ஜனநாயக நாட்டில் தேர்தல் களத்தில் ஆதரவு - எதிர்ப்பு கருத்துக்களை வெளியிடும் உரிமை ஒவ்வொரு கட்சிக்கும் உண்டு.

கடந்த 1996ஆம் ஆண்டில் இருந்து தமிழ்நாட்டில் பெரியார் திராவிடர் கழகம் தொண்டாற்றி வருகிறது. 5 ஆண்டுகளுக்கு ஒரு முறை தேர்தல் வரும்போது மட்டும் மக்களை சந்திக்க வரும் காங்கிரஸ் கட்சியினருக்கு பெரியார் விட்டு சென்ற தமிழர்களின் சுயமரியாதைக்கான உரிமைகள் பற்றியான கவலையோ, அக்கறையோ இருக்கும் என்று எதிர்பார்க்க முடியாதுதான். அதனால்தான் பெரியார் திராவிடர் கழகத்தையே தடை செய்ய வேண்டும் என்று மனுக் கொடுக்கிறார்கள். பெரியார் திராவிடர் கழகம் இதை வன்மையாகக் கண்டிக்கிறது - என்றுள்ளது.

# சிறையில் விசாரணை அதிகாரியை சந்திப்பதற்கு வருண்காந்தி மறுப்பு



லக்னோ, ஏப். 07

சிறையில் தன்னை விசாரிக்க வந்த பொலிஸ் அதிகாரியைச் சந்திக்க வருண் காந்தி மறுத்துவிட்டார். தனது சட்டத்தரணி முன்னிலையில் மட்டுமே பொலிஸாருடன் பேசப் போகிறேன் என்று அவர் கூறியுள்ளார்.

உத்தரப் பிரதேச மாநிலம் பிலிபிட் தொகுதியில் பா.ஜ.க. சார்பாக முன்னாள் பிரதமர் இந்திரா காந்தியின் பேரன் வருண்காந்தி போட்டியிடுகிறார். பொதுக்கூட்டத்தில் மத வன்முறையைத் தூண்டும் விதத்தில் பேசினார் என அவர் மீது குற்றச்சாட்டு எழுந்தது.

அதைத் தொடர்ந்து பிலிபிட் சிறையில் வருண் அடைக்கப்பட்டார். அங்கு அவருடைய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் இருப்பதாக தகவல் கிடைத்ததும் கடந்த முதலாம் திகதி எடா சிறைக்கு மாற்றப்பட்டார். தற்போது, அந்த சிறையில்தான் இருக்கிறார்.

இந்தச் சூழ்நிலையில், சி.டியில் இருப்பது வருண்காந்தி குரல்தானா என்று தடயவியல் பரிசோதனை நடைபெற உள்ளது. அதற்காக, வருண் காந்தியின் குரல் மாதிரியை பதிவு செய்ய பிலிபிட் விசாரணை பொலிஸ் அதிகாரி பாலி ராம்ராவ் நேற்றுமுன்தினம் எடா சிறைக்குச் சென்றார். ஆனால், அவரிடம் பேச வருண் காந்தி மறுத்துவிட்டார்.

# தேர்தலைக் குழப்ப நக்ஸலைட் திட்டம்; அதிதீவிர கண்காணிப்பில் பொலிஸார்

கோவை, ஏப். 07

தமிழகத்தில் சில மாவட்டங்களில் தேர்தலைச் சீர்குலைக்க நக்ஸலைட் தீவிரவாதிகள் திட்டமிட்டுள்ளனர் எனப் பொலிஸாருக்குத் தகவல் கிடைத்துள்ளது.

இதுகுறித்த மேலதிக தகவல்கள் வருமாறு -

தமிழகத்தில் மே 13ஆம் திகதி நடக்கும் மக்களவைத் தேர்தலுக்கு ஏற்பாடுகள் தீவிரமடைந்துள்ளன. கோவை, ஈரோடு, நீலகிரி, சேலம், தர்மபுரி, கிருஷ்ணகிரி மாவட்டங்களில் மட்டும் 150க்கும் மேற்பட்ட மலைக் கிராமங்களில் வாக்குச்சாவடிகள் அமைக்கப்பட்டுள்ளன.

தர்மபுரி, சேலம் மாவட்டங்களில் நக்ஸல் அமைப்புகளின் ஆதரவாளர்கள் ஏற்கனவே தேர்தல் புறக்கணிப்பு குறித்த பிரசாரத்தை மலைக் கிராமங்களில் முடுக்கி விட்டுள்ளனர் எனப் பொலிஸாருக்குத் தகவல் கிடைத்துள்ளது. இக்குழுவினருக்கு ஆந்திரா மற்றும் கர்நாடக மாநிலங்களில் இயங்கி வரும் நக்ஸல் அமைப்புகளுடனும் தொடர்பு இருப்பதால் தேர்தலின் போது வன்முறையில் ஈடுபடுதல், வாக்கு கேட்க வரும் வேட்பாளர்களை முற்றுகையிடுதல் போன்ற செயல்களில் ஈடுபட வாய்ப்பு இருக்கிறது என பொலிஸார் கருதுகின்றனர்.

நக்ஸலைட் பாதிப்புள்ள வாக்குச்சாவடிகள் எவை என்பதைக் கண்டறிய மாநில பொலிஸ் நிர்வாகம் அறிவுறுத்தியுள்ளது. இந்த வாக்குச்சாவடிகளை பதற்றம் நிறைந்த பட்டியலில் சேர்த்து கூடுதல் பொலிஸார் கண்காணிப்புக்கு கொண்டுவர முடிவு செய்யப்பட்டுள்ளது.

நக்ஸல்கள் நடமாட்டம் குறித்து கண்காணிக்கும் கியூப் பிரிவுப் பொலிஸார் இதற்கான பணிகளில் முடுக்கி விடப்பட்டுள்ளனர். நக்ஸல்கள் நடமாட்டம் உள்ள பகுதிகள், தேர்தல் புறக்கணிப்பு வாய்ப்புள்ள மலைக் கிராமங்கள் குறித்து அவர்கள் விசாரணையில் இறங்கியுள்ளனர்.

பாதிப்பு கண்டறியப்படும் இடங்களில் முன்கூட்டியே பொலிஸ் கண்காணிப்பை மேற்கொள்ளவும், பிரசாரங்களுக்குச் செல்லும் வேட்பாளர்களுக்கு பாதுகாப்பைப் பலப்படுத்தவும் அதிகாரிகள் திட்டமிட்டுள்ளனர்.

# சட்டத்தரணிகள் வியாழனன்று மீண்டும் நீதிமன்றப் புறக்கணிப்பு!

சென்னை, ஏப். 07

இரண்டு உயர் பொலிஸ் அதிகாரிகளை வேலைநீக்கம் செய்யக்கோரி வரும் நாளை மறுதினம் 9ஆம் திகதி நீதிமன்றுகளைப் புறக்கணிக்க சட்டத்தரணிகள் கூட்டமைப்பு முடிவு எடுத்துள்ளது.

சென்னை உயர்நீதிமன்ற வளாகத்திற்குள் கடந்த பெப்ரவரி மாதம் 19ஆம் திகதி சட்டத்தரணிகளுக்கும் பொலிஸாருக்கும் இடையே மோதல் ஏற்பட்டது. இதில் இருதரப்பினரும் காயமடைந்தனர். இதுதொடர்பாக உயர்நீதிமன்றே தானாக முன்வந்து பொதுநலன் வழக்கை மேற்கொண்டது. இந்த வழக்கை விசாரித்த நீதிபதிகள் இந்தச் சம்பவம் குறித்து விசாரிக்க சி.பி.ஐக்கு உத்தரவிட்டனர். கடந்த மாதம் 18ஆம் திகதி இந்த வழக்கை மீண்டும் விசாரித்து சம்பவ இடத்தில் இருந்த இரண்டு உயர் பொலிஸ் அதிகாரிகளை வேலைநீக்கம் செய்ய வேண்டும் என்று தமிழக அரசுக்கு நீதிபதிகள் உத்தரவிட்டனர். இந்த உத்தரவை எதிர்த்து இரண்டு உயர் பொலிஸ் அதிகாரிகளும் உச்சநீதிமன்றில் மனுச் செய்தனர். தமிழக அரசின் நிலைப்பாடு என்ன என்று கேட்டு வழக்கு விசாரணையை வரும் மாதம் ... உச்சநீதிமன்று தள்ளிவைத்தது.

இந்தச் சூழ்நிலையில், சென்னையில் உள்ள பார் கவுன்ஸில் அலுவலகத்தில் சட்டத்தரணிகளின் கூட்டு நடவடிக்கைக் குழுக் கூட்டம் நேற்றுமுன்தினம் மாலை நடந்தது. உயர்நீதிமன்ற சட்டத்தரணிகள் சங்கத் தலைவர் ஆர்.சி.போல் கனகராஜ், தமிழ்நாடு சட்டத்தரணிகள் சங்கத் தலைவர் எஸ்.பிரபாகரன் உட்பட பல்வேறு சங்கங்களைச் சேர்ந்த நிர்வாகிகள் இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டனர். கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு-

★ இரு பொலிஸ் அதிகாரிகளையும் வேலை நீக்கம் செய்ய வலியுறுத்தி வரும் 9ஆம் திகதி (வியாழக்கிழமை) தமிழ்நாடு முழுவதும் நீதிமன்றப் புறக்கணிப்புப் போராட்டம் நடத்தப்படும். இதுதவிர ஒவ்வொரு நீதிமன்ற வளாகத்திலும் தர்ணா போராட்டங்கள் நடத்தப்படும்.

★ சி.பி.ஐ. விசாரணையைத் துரிதப்படுத்த வேண்டும். விசாரணையை விரைவில் முடித்து தவறு செய்த அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும்.

★ இரு உயர் பொலிஸ் அதிகாரிகளையும் வேலைநீக்கம் செய்யாததால் தமிழக அரசு மீது உயர்நீதிமன்று, நீதிமன்ற அவமதிப்பு வழக்கு மேற்கொள்ள வேண்டும் போன்ற தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தோல்வியின் விளிம்பில் நியூஸிலாந்து!


ஆட்டமிழந்து வெளியேறுகிறார் நியூஸிலாந்து அணி வீரர் ரைடர்; வெற்றியை பகிர்ந்துகொள்கின்றனர் இந்திய வீரர்கள்.

வெலிங்டன், ஏப்.7

இந்திய - நியூஸிலாந்து அணிகளுக்கிடையே வெலிங்டனில் நடைபெறும் 3ஆவது டெஸ்ட் போட்டியின் 4ஆம் நாள் ஆட்ட நேர முடிவில் 617 என்ற இமாலய வெற்றி இலக்கை எதிர்த்து நியூஸிலாந்து அணி தனது 2ஆவது இன்னிங்ஸில் 4 விக்கெட்டுக்களை இழந்து 167 ஓட்டங்களை எடுத்துள்ளது. போதிய வெளிச்சம் இன்மை காரணமாக ஆட்டம் 20 ஓவர்கள் மீதம் இருக்கும் நிலையில் நிறுத்தப்பட்டது.

ரோஸ் ரெய்லர் 69 ஓட்டங்களுடனும், பிராங்ளின் 26 ஓட்டங்களுடனும் களத்தில் உள்ளனர். இந்தியா தரப்பில் சகீர்கானும், ஹர்பஜன்சிங்கும் அபாரமாக பந்துவீசி தலா 2 விக்கெட்டுக்களைக் கைப்பற்றியுள்ளனர்.

நேற்றைய ஆட்டத்தின் ஆரம்பத்தில் இந்தியா 349 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்டுக்களை இழந்திருந்தது. தொடர்ந்து இன்று துடுப்பெடுத்தாடிய இந்திய அணி 434 ஓட்டங்களை எடுத்து ஆட்டத்தை இடை நிறுத்தம் செய்தது. மார்ட்டின் 3 விக்கெட்டுக்களையும், ஓ பிரையன், விற்றோரி ஆகியோர் முறையே 2 விக்கெட்டுக்களை யும் கைப்பற்றினர்.

மகின்டோஷ் (4), பிளின் (10) ஆகியோர் சகீர்கானின் அபாரமான பந்துவீச்சுக்குத் தாக்குப்பிடிக்க முடியாமல் வெளியேறினர். அப்போது நியூஸிலாந்து அணியின் ஓட்ட எண்ணிக்கை 84/2 என்று இருந்தது. அதன் பின்னர் ஹர்பஜன்சிங்கின் சுழலில் ஒரே ஓவரில் குப்டில் (49), ரைடர் (0) ஆகியோர் அடுத்தடுத்து வெளியேறினர்.

4ஆம் நாள் ஆட்டநேர முடிவின்போது, நியூஸிலாந்து அணி 4 விக்கெட்டுக்களை இழந்து 167 ஓட்டங்களை எடுத்துள்ளது. ரெய்லர் 69, பிராங்கிளின் 26 ஓட்டங்களுடன் களத்தில் ஆடிக்கொண்டிருந்தனர்.

## அதிக பிடியெடுப்புகள்; டிராவிட் சாதனை

வெலிங்டன், ஏப். 7

வெலிங்டன் டெஸ்ட் 4ஆம் நாள் ஆட்டமான நேற்று, டெஸ்ட் போட்டிகளில் அதிக பிடியெடுப்புகளை (183 பிடியெடுப்புகள்) எடுத்து உலக சாதனை படைத்துள்ளார் இந்திய வீரர் ராகுல் டிராவிட்.

நியூஸிலாந்து ஆரம்ப வீரர் மகின்டோஷுக்கு சகீர்கான் வீசிய பந்தை பிடியெடுத்து உலக சாதனை நிகழ்த்தினார் டிராவிட். அதன் பின்னர் ஜெஸி ரைடருக்கு ஹர்பஜன் சிங் வீசிய பந்தைப் பிடியெடுத்து தற்போது 183 பந்துகளைப் பிடியெடுத்த வீரர் என புதிய உலக சாதனையை அவர் படைத்துள்ளார்.

# இரண்டாவது ஒரு நாள் போட்டியில் தென்னாபிரிக்காவுக்கு இலகு வெற்றி!

செஞ்சூரியன் ஏப்.7

அவுஸ்திரேலியாவுக்கு எதிரான 2ஆவது ஒரு நாள் கிரிக்கெட் போட்டியில் தென்னாபிரிக்க அணி 7 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

அவுஸ்திரேலியா - தென்னாபிரிக்கா அணிகள் இடையிலான 5 ஆட்டங்கள் கொண்ட ஒரு நாள் போட்டித் தொடரில் டர்பனில் நடந்த முதலாவது ஒரு நாள் போட்டியில் அவுஸ்திரேலியா 141 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

இந்த நிலையில் இரு அணிகளுக்கிடையேயான 2ஆவது ஒரு நாள் கிரிக்கெட் போட்டி செஞ்சூரியனில் நேற்று முன்தினம் நடந்தது.



முதலில் ஆடிய அவுஸ்திரேலிய அணி, தென்னாபிரிக்க வீரர்களின் பந்து வீச்சை தாக்குப்பிடிக்க முடியாமல் 40.2 ஓவர்களில் 131 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்தது. அதிக பட்சமாக பெர்குஸன் 50 ஓட்டங் களை எடுத்தார். தென்னாபிரிக்க அணி தரப்பில் ஸ்ரெயின், பர்னெல் ஆகியோர் தலா 4 விக்கெட்டுகளை வீழ்த்தினார்கள்.

பின்னர் 132 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் ஆடிய தென்னாபிரிக்க அணி 26.2 ஓவர்களிலேயே 3 விக் கெட்டுக்கள் இழப்புக்கு 132 ஓட்டங் களை எடுத்து 7 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் அபார வெற்றிபெற்றது. ஸ்மித் 40 ஓட்டங்களையும், கலீஸ் 31 ஓட்டங்களையும் எடுத்தனர். டிவில்லியர்ஸ் 36 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமல் இருந்தார். தென்னாபிரிக்க அணியின் பந்து வீச்சாளர் பர்னெல் ஆட்ட நாயகன் விருது பெற்றார்.

இந்த வெற்றியின் மூலம் தென்னாபிரிக்க அணி தொடரை 1-1 என்ற கணக்கில் சமன் செய்தது. இரு அணிகளுக்கும் இடையிலான 3ஆவது ஒருநாள் போட்டி கேப்டவுனில் எதிர்வரும் 9ஆம் திகதி நடக்கிறது.




# ஜீ.சீ.ஈ. (சாதாரண) தரப் பரீட்சை; மேலும் சில பாடசாலைகளின் முடிவுகள்

யாழ்ப்பாணம், ஏப்.7

கடந்த டிசெம்பர் மாதம் நடைபெற்ற ஜீ.சீ.ஈ. (சாதாரண) தரப் பரீட்சை முடிவு களை மேலும் சில பாடசாலை அதிபர்கள் நேற்று அனுப்பியுள்ளனர். அந்த முடிவுகள் வருமாறு:

**வேம்படி**

✱ 9 ஏ 11 பேர் - தமிழ்மொழி மூலம் - அபிராமி அமிர்தலிங்கம், பவித்திரா செல்வநாதன், கஸ்தூரி சிவரஞ்சன், மோசிதா பாஸ்கரமகாராஜா, சங்கீதனா செல்வராஜா, சிவேந்தினி மகேசலிங்கம்.

ஆங்கிலமொழிமூலம் ஆரணி பாலசுந்தரம், கீர்த்திகா தயாபரன், யூடின் டிலோசனா மரியகுணரட்ணம், அர்ச்சனா ஆனந்தராஜா, தனுசியா குலரட்ணசேகரம்.

8ஏ - 31 பேர், 7ஏ-23 பேர், 6ஏ - 25 பேர், 5ஏ - 32 பேர்.

**சுன்னாகம் ஸ்கந்தா**

✱8 ஏ சி - சங்கீதா செல்வராசா, 6ஏ 3பி - ஏ.தாட்சாயினி, 6ஏ 2பி சி - க.கிசோர், 5ஏ 3பி சி - ச.செந்தூரன், 5ஏ பி 3சி - ச.மோகனப்பிரியா, 4ஏ 2பி 2சி - ச.உஷாந்தினி, 3ஏ 4பி 2சி-ச.சக்திபாலன், 3ஏ 2பி 4சி - இ.கவிகரன், 3ஏ 2பி 4சி - வி.விஜயரூபன்.

**கொக்குவில் இந்து**

✱8ஏ பி - வரதராஜசர்மா சுதர்மன், 8 ஏ பி - சுகன்ஜா சிவதாசன், 8ஏசி - வினோதினி சண்முகராஜா, 8 ஏ சி - கோபிகா உருத்திரமூர்த்தி, 8ஏ சி - சேரலாதன் சிவசுப்பிரமணியம், 8ஏ சி - சிவநேசன் ஜனார்த்தனன், 8ஏ எஸ் - சத்தியகுமார் சாள்ஸ், 7ஏ 2பி - சங்கீதா நடராஜசுந்தரம், 7ஏ 2பி -நாகராயணி தவராஜா.

**யாழ்.ஸ்ரான்லி**

தவராசா தவனீரஜன் - 7ஏ பி சி, குகதாசன் வித்தியாதரன் 5ஏ பி 3சி, யமீலா சிவராசா 5ஏ பி 2சி எஸ்

(1)

# நாட்டின் பொருளாதார வளர்ச்சி இந்த வருடம் 3.5 சத வீதமாகக் குறைவடையும் அபாயம்!

## எச்சரிக்கிறார் மத்தியவங்கியின் ஆளுநர்

கொழும்பு, ஏப்ரல் 07

இலங்கையின் பொருளாதார வளர்ச்சி 2009 ஆம் ஆண்டில் 2.5 முதல் 3.5 வீதமாக குறைவடையும் அபாயம் குறித்து மத்திய வங்கி எச்சரித்துள்ளது.

மத்திய வங்கியின் ஆண்டறிக்கையை ஜனாதிபதியிடம் கையளிக்கும் நிகழ்வில் உரையாற்றுகையில் மத்திய வங்கி ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் இதனைத் தெரிவித்துள்ளார்.

எம்மால் 6 வீத பொருளாதார வளர்ச்சியை எட்ட முடியாது. எமது சாதகமான கணிப்பீடுகளின்படி 4 .5 முதல் 5 வீத வளர்ச்சியை எட்டலாம். இது 2.5 முதல் 3 வீதமாக குறைவடையும் அபாயம் உள்ளது என தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் குறிப்பிட்டுள்ளவை வருமாறு:-

2005 ஆம் ஆண்டிலிருந்து கடந்த நான்கு வருடங்களாக ஆறு வீதத்திற்கும் அதிகமாக காணப்பட்ட இலங்கையின் பொருளாதார வளர்ச்சி 2009 இல் குறைவடையும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

சர்வதேச நிதி நெருக்கடியும் இதன் தொடர்ச்சியான தாக்கங்களுமே இதற்கு காரணம் எனலாம்.

அரசுக்கும் தனியார் துறைக்குமான நிதி வரவுகள் 2009 இல் குறைவடைந்து பின்னர் மெதுவாக வளர்ச்சியடைந்துள்ளன.

தற்போதைய நிதி நெருக்கடி மற்றும் சர்வதேச நிதிச் சந்தையின் நிச்சயமற்ற நிலை காரணமாக மூன்றாம் உலக நாடுகளுக்கான வெளிநாட்டு நிதி வரவுகள் குறைவடைந்துள்ளன என்றும் இது 2009 இலும் தொடரும் என அறிவிக்கப்படுகிறது.

உதவி வழங்கும் நாடுகளிடமிருந்து ஏற்கனவே உறுதியளிக்கப்பட்ட நிதியுதவி கிடைக்கின்றது. எனினும் சர்வதேச சந்தையிலிருந்து கடன்களை பெறுவது மிகவும் கடினமாகவுள்ளது.

இதன் காரணமாக மேலதிக வெளிநாட்டு நிதியுதவி தேவைப்படும் திட்டங்களை ஒத்திவைக்க வேண்டியுள்ளது அல்லது மிக மெதுவாக முன்னெடுக்க வேண்டியுள்ளது.

இலங்கையின் பண வீக்கம் தொடர்ந்தும் குறைவானதாகவே காணப்படும்.

எனினும் கடந்த சில வருடங்களாக தொடர்ந்து காணப்பட்ட குறைந்தளவு வேலை வாய்ப்பின்மை என்ற நிலை மாறலாம்.

தற்போதைய சர்வதேச சூழல் காரணமாக வெளிநாட்டு வேலை வாய்ப்பு குறைவடையலாம் - என்றார்.

(சி)

# தேசிய பாடசாலை ஆசிரியர் பதவிக்கான நேர்முகப் பரீட்சை நாளை நடைபெறும்

## மேலதிக கல்விப்பணிப்பாளர் பணிமனையில்

அச்சுவேலி, ஏப்.7

தேசிய பாடசாலைகளின் ஆசிரியர் பதவிக்கான பட்டதாரிகள் மூன்றாங்கட்டப் பட்டியலில் உள்ளவர்களுக்கான நேர்முகப்பரீட்சை 8ஆம் திகதி புதன்கிழமை யாழ். கல்வி வலய வளாகத்தில் உள்ள மேலதிக மாகாணக் கல்விப்பணிப்பாளர் பணிமனையில் நடைபெறும்.

யாழ்.மாவட்டத்தில் இருந்து தெரிவு செய்யப்பட்டவர்களின் பெயர் விவரங்கள் முன்னரே பத்திரிகைகளில் வெளியிடப்பட்டிருந்தன யாழ்ப்பாணத்தில் உள்ளவர்களின் நேர்முகப்பரீட்சைக்கான அழைப்புக் கடிதங்கள் யாழ். மேலதிக கல்விப் பணிப்பாளர் பணிமனையில் கையளிக்கப்பட்டிருப்பதால் சம்பந்தப்பட்டவர்கள் தமது அழைப்புக் கடிதங்களை பெற்றுக் கொள்வதுடன் எட்டாம் திகதி (நாளை) நேர்முகப் பரீட்சைக்கு சமுகமளிக்குமாறு - வடக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் வீ.இராசையா அறிவித்துள்ளார்.

(அ-11)

## தமிழ்த்தினப்போட்டி சுற்றுநிருபம் பார்வைக்கு

யாழ்ப்பாணம், ஏப்.7

தமிழ்த்தினப் போட்டிகள் 2009 தொடர்பான சுற்றுநிருபம் இதுவரை கிடைக்காத பாடசாலைகள் நாளை வடமராட்சி வலய கல்வி அலுவலக அபிவிருத்திப் பிரிவில் சுற்றுநிருபத்தினை பார்வையிட்டு பிரதி எடுத்துக் கொள்ளலாம் என வடமராட்சி வலயக்கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

(1)

# யாழ். நகருக்கான நீர்விநியோகம் இன்று முதல் தடைப்படும் என அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஏப்.7

யாழ். நகருக்கான குடிதண்ணீர் விநியோகம் இன்று செவ்வாய்க்கிழமை முதல் தடைப்படும் என்று மாநகரசபை நீர் வேலைப்பகுதி அறிவித்துள்ளது.

பிரதான தாங்கிக்கு கோண்டாவில் 'பம்' நிலையத்திலிருந்து நீரேற்றும் 12" விட்டமுள்ள குழாய் பலாலி வீதியில் தபால் நிலையத்துக்கு அருகாமையில் உடைந்துள்ளதால் நீரேற்றும் செயற்பாடு நிறுத்தப்பட்டுள்ளது.

இதனால் பிரதான வீதி மடத்தடி தாங்கியின் நீர்விநியோகம் முற்றாக தடைப்பட்டுள்ளது. திருத்த வேலைகள் நேற்று இரவு ஆரம்பிக்கப்பட்டுள்ளன

இந்த திருத்த வேலையில் 20க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் அதிகாலை ஈடுபட்டுள்ளனர். திருத்த வேலைகள் இன்று மாலை வரை நீடிக்கும் என எதிர்பார்க்கப்படுவதாக நீர்வேலைப் பகுதி பொறியிலாளர் எஸ்.றஜீந்திரன் தெரிவித்துள்ளார்.

(1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோப்பாய் இளைஞன் கோட்டையில் வைத்து வெள்ளை வானில் கடத்தப்பட்டதாக முறைப்பாடு

யாழ்ப்பாணம், ஏப்.7

கோப்பாய் தெற்கைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் கொழும்பு கோட்டை ரயில் நிலையத்தில் வைத்து வெள்ளை வானில் கடத்தப்பட்டுள்ளார் என மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கோப்பாய் தெற்கைச் சேர்ந்த ஜெயராசா விஜிதரன் (வயது-27) என்பவரே கடத்தப்பட்டவராவார்.

கடந்த பெப்ரவரி மாதம் தமது கணவன் கொழும்பு கோட்டை ரயில் நிலையத்தில் வைத்து வெள்ளை வானில் வந்த ஆயுத தாரிகளால் கடத்திச்செல்லப்பட்டார் என இப்போது தகவல் கிடைத்துள்ளது என்றும் அவரை விடுவிக்க ஏற்பாடுசெய்யுமாறும் அவரது மனைவி அந்த முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார். (1-25)

## வடக்கு - கிழக்கில்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆயுதங்களை அரசிடம் கையளித்தது இது எல்லோரையும் ஏமாற்றும் செயல்.

அவர்கள் ஆயுதங்கள் முழுவதையும் அரசிடம் ஒப்படைக்கவில்லை. சிறு எண்ணிக்கையை மாத்திரமே ஒப்படைத்தனர். அந்தச் சந்தர்ப்பத்தில் சர்வதேச கண்காணிப்பாளர்கள் எவரும் அங்கு இருக்கவில்லை.

இந்த ஆயுத ஒப்படைப்பை எப்படி நம்புவது?

இது ஒரு நாடகம். இந்நாட்டு மக்களையும் சர்வதேசத்தையும் முட்டாளாக்கும் செயல்.

கருணாவிடம் இருந்த ஆயுதங்கள் எங்கே

ஆயுதங்கள் களையப்பட வேண்டும் என்று கூறப்பட்ட சந்தர்ப்பங்களில் எல்லாம் தம்மிடமுள்ள ஆயுதங்களை ஒப்படைக்க முடியாது என்று அமைச்சர் விநாயமூர்த்தி முரளிதரன் கூறிவந்தார்.

இப்போது தன்னிடம் ஆயுதங்கள் எவையும் இல்லை என்று கூறுகின்றார். அப்படியென்றால் தான் ஆயுதங்களை ஒப்படைக்க மாட்டேன் என்று கூறியபோது இருந்த ஆயுதங்கள் எங்கே?.

அரசு கருணாவின் தலைமையில் வடக்கு-கிழக்கில் தனியான இராணுவ பிரிவு ஒன்றை உருவாக்கியுள்ளது. அங்கு இராணுவ ஆட்சியை நடத்தவே திட்டமிட்டுள்ளது.

கருணாவிடம் பல முகாம்களும், படைகளும் உள்ளமை அனைவருக்கும் தெரிந்த உண்மை. இதை அவரால் மறுக்க முடியாது.

இந்த மாதிரியான நிலையில்தான் தமிழ், முஸ்லிம் சிறுபான்மை இன மக்களின் உரிமைகளைப் பாதுகாக்க வேண்டிய கட்டாயம் எமக்குண்டு.

இந்த நோக்கில்தான் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸும், மனோ கணேசனின் மேலக மக்கள் முன்னணியும் ஒன்று சேர்ந்து மேல் மாகாணசபைத் தேர்தலில் போட்டியிடுகின்றன.

சிறுபான்மை இனக் கட்சிகள் பெரும்பான்மை இனக்கட்சிகளான ஐக்கிய தேசிய கட்சியுடனோ அல்லது ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியுடனோ இணைவதால் சிறுபான்மை இன மக்களின் உரிமைகளைப் பாதுகாக்க முடியாது.

எமது மக்களின் வேதனை எமக்குத்தான் தெரியும். இந்த வகையில் சிறுபான்மை இனக் கட்சிகள் இவ்வாறு இணைவதுதான் எமது மக்களின் உரிமைகளைப் பாதுகாக்க பொருத்தமானதாக அமையும் - என்றார். (அ-சி)

## பாதுகாப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இத்தகவலை நேற்றுத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

மக்கள் பாதுகாப்பு வலயப் பகுதியில் உள்ள ஒரு லட்சம் மக்களுக்குமான மனிதாபிமானப் பணிகளை நாம் தொடர்ந்து மேற்கொண்டு வருகிறோம்.

இந்தப் பணிகளை முன்னெடுக்க நூற்றுக்கு மேற்பட்ட தொண்டர்கள் பணியாற்றுகின்றனர். அவர்கள் புதுமாத்தளன் பகுதியில் இருந்து மக்களுக்குத் தேவையான உதவிகளைச் செய்து வருகிறார்கள்.

அரசாங்கமும் விடுதலைப்புலிகளும் எமது பணியாளர்களின் பாதுகாப்புக்கு உத்தரவாதம் வழங்கியுள்ளனர் - என்றார் அவர்.

புதுக்குடியிருப்பை முழுமையாகக் கைப்பற்றி விட்டதாக அரசாங்கம் நேற்று முன்தினம் அறிவித்த பின்னர், செஞ்சிலுவைப் பேச்சாளர் தமது நிலைப்பாட்டை வெளியிட்டுள்ளார். (அ-1)

## பிரபா இப்போது.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்தன.

புதுக்குடியிருப்பு பகுதியில் படையினர் கடந்த சில வாரங்களாக மேற்கொண்டு வந்த இராணுவ நடவடிக்கைகள் தொடர்பாகவும், அதன் பின்னர் புதுக்குடியிருப்பு பகுதி இராணுவத்தின் முழுமையாக கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளமை தொடர்பாகவும், அடுத்த கட்ட இராணுவ நடவடிக்கைகள் தொடர்பாகவும் இராணுவத் தளபதி விரிவாக விளக்கினார் என்று அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

இதனைவிட பாதுகாப்பு வலயமாக அரசால் அறிவிக்கப்பட்டுள்ள பகுதிகளில் உள்ள மக்களுடைய நிலை தொடர்பாகவும் விளக்கிய அவர், அந்தப் பகுதியைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்காக படையினர் எடுக்கக்கூடிய நடவடிக்கைகள் தொடர்பாகவும் விளக்கியுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது.

தொடரும் இந்த போரில் விடுதலைப் புலிகளின் இடைநிலை மட்டத்தில் உள்ள தலைவர்கள் பலர் கொல்லப்பட்டிருக்கின்றனர் எனத் தெரிவித்த சரத் பொன்சேகா, படையினரால் கண்டுபிடிக்கப்பட்ட சடலங்கள் இதனை உறுதிப்படுத்துகின்றன எனவும் குறிப்பிட்டார்.

அமெரிக்க தூதுவருடன், அமெரிக்க தூதரகத்தின் பாதுகாப்புத்துறை ஆலோசகரும் இந்தச் சந்திப்பில் கலந்துகொண்டார். (அ-சி)

# 20 ஆயிரம் பேர் வவுனியாவுக்கு வருவர் என அரசு எதிர்பார்ப்பு

கொழும்பு, ஏப்.7

வன்னிப் பகுதியிலிருந்து மேலும் 20 ஆயிரம் பேர் உடனடியாக இடம்பெயர்ந்து வவுனியாவுக்கு வருவார்கள் என அதிகாரிகள் மட்டத்தில் எதிர்பார்க்கப்படுகின்றது. ஏற்கனவே 50 ஆயிரம் பேர் வவுனியாவுக்குள் வந்திருக்கின்றனர் என மீள்குடியேற்ற அமைச்சர் ரிஷாத் பதியுதீன் தெரிவித்துள்ளார்.

புதிதாக வருபவர்களை பாடசாலைகளில் தங்க வைப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது எனவும் அந்த பாடசாலைகள் அடையாளம் காணப்பட்டிருக்கிறது எனவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

இவ்வாறு வருபவர்களுக்கான தங்குமிடம், அடிப்படை வசதிகள் என்பவற்றைச் செய்து கொடுப்பது தொடர்பாக நேற்று வவுனியா செயலகத்தில் அரச அதிபர் திருமதி சாள்ஸ் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் அமைச்சர் ரிஷாத் பதியுதீனும் கலந்துகொண்டார். (அ-சி)

## ஆயுதக்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புதுமாத்தளனுக்குத் தெற்கே பாதுகாப்பு வலயப் பகுதியிலிருந்து 55 ஆவது படைப்பிரிவு 1கி.மீற்றர் தொலைவிலும் 58 ஆவது படைப்பிரிவு 300 மீற்றர் தொலைவிலும் நிலைகொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-07)

## படையினர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காத்திருப்பதாகச் சமிக்ஞைகள் கிடைத்துள்ளன.

அங்கு சுமார் 20 சதுர கிலோ மீற்றர் பரப்பில் நாற்பதினாயிரம் முதல் ஒரு லட்சம் மக்கள் குவிந்திருப்பதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

அரசாங்கப் படையினருக்கு எதிராக தொடர்ச்சியாக பல தோல்விகளை சந்தித்துள்ள நிலையில், விடுதலைப்புலிகள் வலிய படையாக போரிட முடியுமா என்பது சந்தேகமே.

பாதுகாப்பு வலயப் பகுதிக்குள் இலங்கைப் படையினர் ஷெல் தாக்குதல்களை நடத்துவதாக கூறப்படும் குற்றச்சாட்டில் உண்மை இல்லை.

விடுதலைப்புலிகள் சரணடைந்தால் அதனை ஏற்பதற்கான எண்ணத்தை இன்னமும் அரசாங்கம் கைவிடவில்லை- என்றார்.

விடுதலைப்புலிகள் அமைப்பில் இன்னமும் எஞ்சியுள்ளவர்களை, பல்லாயிரக் கணக்கான மக்கள் தஞ்சமடைந்துள்ள, தாம் பாதுகாப்பு வலயமாக பிரகடனப்படுத்தியுள்ள பகுதிக்குள் துரத்திவிட்டதாக இலங்கை இராணுவம் அறிவித்த அடுத்தநாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய இந்தக் கருத்தை தெரிவித்துள்ளார்.

பாதுகாப்பு வலயத்தை நோக்கிய இலங்கை படையினரின் நகர்வுகளை எதிர்த்து விடுதலைப்புலிகள் எதிர்த்தாக்குதல் நடத்தும் பட்சத்தில், அங்கு பெரும் மனித அழிவுகள் ஏற்படும் என்று உதவி நிறுவனங்கள் அறிவித்துள்ள நிலையில் பாதுகாப்பு அமைச்சுச் செயலாளர் மேற்கண்டவாறு கூறியுள்ளார். (அ-07)

## இலங்கையில்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முற்பகல் 10 மணி தொடக்கம் மறியல் போராட்டத்தினை முன்னெடுத்து வருகின்றார் என இணையத்தளத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மதிப்பிற்குரிய நெதர்லாந்துப் பிரதமரே! ''தமிழ்மக்கள் மீதான இனப்படுகொலையை உடனடியாக தடுத்து நிறுத்துங்கள், 'உடனடியானதும் நிரந்தரமானதுமான போர் நிறுத்தத்தை கொண்டுவர இலங்கை அரசை நிர்ப்பந்தியுங்கள்' போன்ற கோரிக்கைகளை ஆங்கிலத்திலும் நெதர்லாந்து மொழியிலும் சுலோக அட்டையில் எழுதி வைத்து தனது கைக்குழந்தையுடனும் ஏனைய மூன்று குழந்தைகளுடன் மறியல் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றார் அந்தத் தமிழ்த்தாய். (அ-சி)

## இறுதி இராணுவ.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் தெரிவித்துள்ளார்.

அவர்கள் பொதுமக்களை தொடர்ந்து மனித கேடயங்களாகப் பயன்படுத்துகின்றனர் என்றும் பாதுகாப்பு வலயத்திற்குள்ளிருந்து தாக்குலை மேற்கொள்கின்றனர் எனவும் உதய நாணயக்கார மேலும் கூறினார்.

இராணுவம் எவ்வாறான திட்டத்தை வகுத்துள்ளது என்பதை தெரிவிக்க மறுத்துள்ள அவர், இது வித்தியாசமான நடவடிக்கையாக - மீட்பு நடவடிக்கையாக - அமையும் என்று குறிப்பிட்டுள்ளார். (அ-சி)

NEW SCIENCE ACADEMY
கன்னாதிட்டி. யாழ்ப்பாணம்.
G.C.E O/L
DAY CLASS பிரிவு I
திங்கள் தொடக்கம் வெள்ளி வரை
8.30 - 2.00வரை
ஆரம்பம்: 10.04.2009
தரம் 9, 10, O/L வகுப்புக்கள் நடைபெறுகின்றன.
அனுமதிகளை முன்கூட்டியே பெற்றுக்கொள்ளவும்.

O/L மீட்டல் வகுப்புக்கள்
09.04.2009 காலை 8.00மணிக்கு ஆரம்பம்.
தனித்துவம் மிக்க ஆசிரியர்குழாம்.
பதிவுகள் இன்று முதல்
A/L மாணவர்களுக்கு
பிரத்தியேக வகுப்புக்கள்
தமிழ், அளவையியல், இந்துநாகரிகம், பொருளியல், புவியியல் நடைபெறுகின்றன.
புதிய மாணவர்களுக்கு தனிப்பட்ட வகுப்புகள்.
சதாபொன்ஸ் கல்வி நிலையம், அல்வாய்.

A/L 2011
ஆரம்பம்
11.04.2009
சனி
யூனிவேர்சல்

DAY CLASS
அனுமதிகள் வழங்கப்படுகின்றது
Ta: திரு.குழந்தை M,T,T-8am
Lo: திரு.கமல் M,T,T-7am
Hc: திரு.ஜெயக்குமார் M,T,T-9a.m.
Ge: திரு.கரன் S,S-7a.m.
Dr: திரு.மயூரன் M,W-4.30p.m.
P.s: திரு.ஸ்ரீரங்கநாதன் S,S-1p.m.
Ec: நிரூபன் - S,S-12p.m.
Ac: திரு.தவா T,T,F-6.15a.m.
B.s: திரு.யசோ S,S-11a.m.
யூனிவேர்சல்

ஐடியல் அக்கடமி
சீரணிச் சந்தி, சண்டிலிப்பாய். | நீராவியடி, யாழ்.நகர். | அந்தோனியார்கோயில்அருகில் மானிப்பாய்.
O/L DAY CLASS
எமது மூன்று நிறுவனங்களிலும் ஒரே நாளில் ஆரம்பமாகின்றது.
ஆரம்பம்: 08.04.2009 புதன்கிழமை
நேரம்: 8 a.m
குறிப்பு: யாழ். நீராவியடியில் உள்ள ஐடியலில் மாணவர்களுக்கு விடுதி வசதிகள் செய்து தரப்படும்.
V.N.பத்மநாதன், கணித ஆசானும், நிர்வாகியும்.

SHAMROCK
A/L 2011 (புதிய பிரிவுகள்)
கலை, வர்த்தக, கணித, விஞ்ஞான பிரிவுகள்
தமிழ் - S.சிவா
கிறிஸ். - U.L.மேரி
புவியியல் - A.ராஜா
அரசியல் - T.சுஜன்
நாடகம் - J.ஜோண்.
அளவை - R.றமணன்
இந்து - S.கார்த்திக்
ஆங்கிலம் - ஆசிரியர்.
பொருளியல் N.B.சுஜீதரன்
B.st. - B.S.பசில்
Acc.- S.தவா

கணக்கீடு
P.மகீரதன்
B.B.A (fm.spl)
Paper class
புதிய பிரிவு ஆரம்பம்
Tue, Thu 3-4
ஆரம்பம்:7.4.2009
(Tue. 3p.m.)
NEC Clock Tower Road, Jaffna

Microsoft Certified Systems Engineer
★ குறுகியகால நிறைவான வகுப்புக்கள்
★ Microsoft நிறுவன அதிபர் Bill Gatesஇன் கையொப்பத்துடன் கூடிய சர்வதேச தர சான்றிதழ்
★ Network Manager, System Admin., System Engineer போன்ற வருமானம் கூடிய வேலைவாய்ப்பு
★ வெளிநாட்டு விசாவிற்கான மேலதிக புள்ளிகள்
புதிய பிரிவுகள் ஆரம்பம் 09.04.2009 08.00AM
Become an Engineer
விபரங்கள் நேரில் 324, பலாலி வீதி, யாழ்ப்பாணம்
MCS Supported By UNDP/JRRP
www.mcsitacademy.com

இணையற்ற சேவையினூடு 36 (1973 - 2009) வருட சாதனைகளுடன்
O/L Day Class
ஏப்ரல் 10இல் ஆரம்பம்
(காலை 8.00 மணிமுதல் பி.ப.1.00 மணிவரை)
அமைதியான சூழலில் முழுமையான வசதிகளுடன் 07 மாதகால துரித மீட்டல் வகுப்பு
அனுமதிகள் வழங்கப்படுகின்றன
The Express Institute
Irupalai, Kopay. -அதிபர்

சிறார்களிற்கான கணினி கற்கைநெறிகள்
பாடசாலை மாணவர்களுக்கான முழுமையான பயிற்சி நெறி
Show the world
what you can do with IT ?
கோடை விடுமுறை கால விசேட பிரிவுகள் ஆரம்பமாகவுள்ளன...
புதிய பிரிவுகளுக்கான விபரங்கள் மற்றும் பதிவுகளை நாளை முதல் எமது யாழ்நகரம் மற்றும் நெல்லியடி பயிற்சி மையங்களில் பெற்றுக் கொள்ளலாம்.
Junior Diploma in Computer Science
Graphic & Animation
Computer Programming
Digital Creativity
e-KIDS DIVISION
பாடசாலை விடுமுறை நாட்களிலும் மற்றும் சனி, ஞாயிறு, போயா தினங்களிலும் வகுப்புக்கள் நடைபெறும்.
ASIAN- CSC COMPUTER EDUCATION
2G, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம் Tel:021 222 5677
கிளை
கொடிகாமம் வீதி, நெல்லியடி Tel :077- 3122198

SUPER GRADE ஆசிரியர் குழாமுடன்
(இரு இடங்களிலும்)
O/L DAY CLASS
ஆரம்பம்: 08.04.2009 புதன் காலை 8.00மணி
புதிய அனுமதிகளை இன்று முதல் பெற்றுக் கொள்ளலாம்.
நாவலர் NEC
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். Clock Tower Road, Jaffna

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிடெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 07.04.2009 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org